Registered as a News Paper in Sri Lanka

THINAMURASU
16A, NELSON PLACE,
WELLAWATTE,
COLOMBO - 06.

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 18.00
நவ. 10 - 16, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 639

# தேர்தல் தில்லுமுல்லுகளும் திருத்தப்படாத தீர்ப்பும்





# முஸ்லிம் காங்கிரஸ் அடகு வைக்கப்பட்டு விட்டதா?

# மலையகத்தில் விலைபோன தலைமைகளும் விலைபோகா மக்களும்

## சிவ சக்தி ஸ்வரூபமே ஸ்கந்தர்

# ஆன்மீகம்



**எங்கள்** நான்கு வேதங்களிலும் ஸ்கந்தர் பற்றி பெரிய அளவில் குறிப்பிடப்படவில்லை. இருக்கு வேதத்தில் ஸ்கந்த உபநிஷதாகவும், யசுர் வேதத்தில் சூர்ய நமஸ்காரத்தில் மயில் மீது ஏறிவரும் அழகான உரோமங்களை உடையவரும் என்றும் சொல்கிறது. புராணங்களில் முருகனைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. யார் இந்த ஸ்கந்தர்? ஒரு சமயம் பார்வதி - பரமேஸ்வரன் இமயமலையில் உலாவரும் போது மிகப் பெரிய வீர்யமுள்ள ஒரு ஒளியைக் கண்டாள். தேவியும் சதாசிவனிடம் ஒளியைப் பற்றி வினவ, சுவாமியும் அது தேவையின் நிமித்தம் என்னால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அது யோகத்தில் உள்ளது என்று கூறினார். தேவியும், சுவாமி இந்த ஒளி எனக்குக் குழந்தையாய் வரவேண்டும் என்று வரம் கேட்டாள். சுவாமியும் வரத்தை அருளினார். சூரன் முதலான சகோதரர்கள், தேவர்களைத் துன்புறுத்தியபோது, ஈசன் தனது நெற்றிக் கண் மூலம் அந்த ஒளியை குழந்தைகளாக்கி, பார்வதி விரும்பியது போல் அக்குழந்தைகளை அவரிடம் கொடுக்கின்றார். ஈச ஸ்வரூபமாக விளங்கும் ஸ்கந்தருக்கு பார்வதி எப்போதும் ஈசனோடு இருப்பதற்கு வேல் ஆக மாறி எப்பொழுதும் முருகனோடே இருக்கின்றாள். சாட்சாத் பார்வதி - பரமேஸ்வரஸ்வரூபமாக விளங்கும் ஸ்கந்தர் இந்தக் கலியுகத்திலே கலியுக வரதனாக இருந்து நம்மை எல்லாம் இரட்சிக்கிறார். ஐப்பசி மாதம் சூர்யன், துலா இராசியில் இருக்கும்போது சந்திரன் அவனோடு சேர்ந்து இருக்கும் பரமேஸ்வரஸ்வரூபத்தில் இருக்கின்றான். விருச்சிக ராசியில் செவ்வாய் வீட்டில் இருக்கும்போது அவன் எங்களுடைய ஆணவத்தை அழிக்கின்றான். பின் தனுசு ராசியில் குருவின் வீட்டில் இருக்கும் போது குருவுக்கு குருவாக இருந்தவன் நமக்கெல்லாம் வேண்டிய வரங்களை வாரி வழங்குகின்றான். இதுதான் பிரதமை முதல் சஷ்டிவரையான கந்தசஷ்டியாகும். இக்காலத்தில் முருகனை வழிபடும்போது திருக்கைலாசத்தில் சிவசக்தியாக இருக்கும் பரமேஸ்வரன் -பரமேஸ்வரியை வழிபட்ட பலனை நிச்சயமாக ஸ்கந்தர் தருவார்.

'சட்டி'யில் விரதம் இருந்தால் 'அகப்பை'யில் ஞானம் வரும்.

-வேதியன், நல்லூர்.

## கர்த்தரின் ஆசீர்வாதம் பெறுவோம்

**க**ர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாகும் -(சங் 129:3)

கர்த்தர் எல்லோரையும் ஆசீர்வதிக்கின்றார். நேற்றும் இன்றும் என்றும் தம் மக்களை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கின்றார். ஆசீர்வாதம் என்றால் என்ன? தாவீது சொல்லுகின்றார். "பூமி தன் பலனைத் தரும். தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்." (சங்- 67:6) "அல்லேலூயா. கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும். செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்." (சங்- 112:1.2) கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார். (சங்- 115:13) உன் தேவனைத் துதி. அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களை பலப்படுத்தி உன்னிடத்தில் உள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கின்றார். (சங்- 147:12,13)

கர்த்தரே, எனது பரம பிதாவே! நீர் எம்மைத் தெரிவு செய்ததற்கு நன்றி. இது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். இதனை என்றும் எமக்கு ஆசீர்வதித்து தருமாறு ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலம் வேண்டுகின்றோம்.

-எஸ்.டிலக்ஷன், மானிப்பாய்.

## சத்தியத்தைத் தவிர்த்த ஷாபிஈ (றழி)


**எ**தற்கெடுத்தாலும் சத்தியம் பண்ணும் பழக்கமுடையோர் பலரை நாம் அன்றாடம் அவதானிக்கின்றோம். 'யமீன்' என்றால் சத்தியம் செய்தல் என்பது பொருள். சரியான முறையில் சத்தியம் செய்தால், சத்தியம் செய்யப்பட்ட விடயங்கள் பாவகாரியங்கள் அல்லாவிடின் அவற்றை நிறை வேற்றுவது சத்தியம் செய்தவரின் கடமையாகும். சத்தியம் செய்யப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்டவர் நிறைவேற்றா விட்டால் அவற்றுக்காக அவர் குற்றப் பரிகாரம் நிறைவேற்று வதும் கடமையாகும்.

முன்பு நடந்த ஒன்றை நடக்கவில்லை என்றோ, நடக்காத ஒன்றை நடந்ததென்றோ சத்தியம் பண்ணுவதற்கு பொய்ச் சத்தியம் என்று கூறப்படும். பொய்ச் சத்தியம் பண்ணுவது பெரும் பாவமும் ஹறாமான காரியமுமாகும்.

உண்மைக்குச் சத்தியம் பண்ணுவதையும் இயன்றளவு நாம் குறைத்துக்கொள்ள வேண்டும். சட்டமேதை இமாம் ஷாபிஈ (றழி) அவர்கள் வாழ்நாளில் எப்போதும் சத்தியத்தை தவிர்த்தே வந்துள்ளார்கள்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.636



பரிசுக்குரிய கவிதை

### நியாயம்

ஆளும் கட்சியும்
எதிர்க் கட்சியும்
ஒவ்வொரு
இனங்களும்
ஒவ்வொன்றாய்
பிரிந்திருந்தால்
எம்மை விட்டுச்
சமாதானம்
பிரிந்திருப்பதும்
நியாயம்தானே!

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

# கவிதைப் போட்டி இல.639



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.11.2005.

கவிதைப் போட்டி இல.639
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### நீ பாதி! நான் பாதி!

நீ பாதி!
நான் பாதி!
என்றே நாம்
சேர்ந்திருந்தோம்!
இன்றோ; நாமோ
நீ பாதி;
நான் பாதி என்று!
பிரிந்தே
போய்விட்டோம்!...

-கோட்டைமுனை முத்துமணி, பதுளை.

### அறிவுரை

எய்ட்ஸ் பற்றிய
எச்சரிக்கை
தேவைதான்!
அதுவே
தூய்மையான காதலை
தூரப்படுத்தி விடக்கூடாது!!

-கே.கமால்தீன், ஏறாவூர் - 03.

### உதட்டளவில் சமாதானம்

இதயம் இழகி இறுக்கம் தளராவிட்டால்,
சமத்துவம் இதயத்திலிருந்து ஏறி வராவிட்டால்,
சமாதான மென்ற சொல் உதட்டளவில்
நின்று விடும்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### போதும்!

எத்தனை
வருஷமாய்,
எண்ணினேன்
ஒரு செக்கனில்
அழித்து விட்டாயோ,
போதும்,
உன் நினைவு
மட்டும்!

-ஏ.ஆர்.பயாஸ்,
முள்ளிப்பொத்தானை.

### அருமருந்து!

ஒருவனுக்கு
ஒருத்தியென
உணர்தலே
பரவி வரும்
பால்வினை நோய்க்கு
பலியாகும்
இளைய சமுதாயம்
பெற வேண்டிய
உன்னத மருந்து!

-கே.அல்.ஆஸாத்,
ஏறாவூர் - 03.

### எப்போது தீரும்

ஓரிரு நிமிடங்களில்....
தீர்ந்துவிடும்
உங்கள்
உள்ள(ப்) பிரச்சினை!
எப்போதுதான் தீருமோ?
என் உள்நாட்டு
பிரச்சினை!

-செ.பிரதீபன், மாணிக்கமடு.



### இப்படித்தான்....!

இப்படித்தான்
முரண்பட்டு
நிற்கிறது - நம்
நாட்டு பேச்சுவார்த்தையும்.
தீர்வேதும் காணாது
யுத்த பீதியை தினம்
எங்களுக்கு தந்து
கொண்டு.....

-ஹைக்கூ.நாகேந்திரன்,
ஆரையம்பதி - 03.

### காதல்

உருவங்கள் தள்ளி இருந்தாலும்
உள்ளங்கள் ஒன்றிணைந்தால்
உருவாகும் காதல்!

-வி.சுவர்ணா, ஆரையம்பதி - 01.

### காதலும் தேசமும்

இடைவெளி குறைவுதான்
இதயங்கள் புரிந்தால்
இங்கே இதயத்துள் வலியில்லை
இவர்களைப் போலதான்
இந்தத் தேசத்தின் நிலையும்.

-எஸ்.பி.பாலமுருகன்.

### பொய் வாக்குறுதி

என்ன நண்பரே
தேர்தல் வேட்பாளர்கள்
போல் பொய்
வாக்குறுதிகளை
அள்ளி வீசி
வீண் வம்பில்
மாட்டிக்கொண்டீரோ.

-எஸ்.பி.பி.கணேஷ்,
கொழும்பு - 02.

# உங்கள் பக்கம்

## புங்குடுதீவு வாழ் மக்களுக்கு எப்போது வெளிச்சம் கிடைக்கும்?

**தீ**வகங்களில் ஒன்றான புங்குடுதீவில் இதுவரை கிட்டத்தட்ட 90ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டு வரை - அதாவது 90ஆம் ஆண்டு முதல் இன்றுவரை - மின்சாரம் இல்லை. (90ஆம் ஆண்டு இடம் பெயர்விற்குப் பின்பு)

இதனால் புங்குடுதீவு வாழ் மக்கள் தங்கள் தேவைகளுக்காக யாழ் நகருக்கு பஸ்ஸில் பயணித்து பல சிரமங்களின் மத்தியில் தங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

முக்கியமாக எமது ஊரில் பெரிய வைத்தியசாலை உள்ளது. அங்கு தற்போது மின்சாரம் இல்லாது முழு நேரமும் இயங்குவதில்லை. அத்தோடு அவசர நோயாளிகளுக்கு உடனே மருத்துவம் செய்ய வசதி ஏதும் கிடையாது. நோயாளியை யாழ் கொண்டு செல்வதென்றால் பல கிலோ மீற்றர் பயணம் செய்து கொண்டு செல்வதற்குள் நோயாளியின் உயிர் பிரிந்து விடலாம்.

இப்படியாகப் பல பிரச்சினைகளைத் தீர்வு செய்ய எமது ஊரில் மின்சாரம் இல்லாத காரணமே பெரிய பிரச் சினை. இதுவரைக்கும் எந்த அதிகாரிகளோ, அரசாங்கமோ எமது குறைகளைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் எமது அயல்தீவுகளுக்கு மின் சாரம் உண்டு. எமது தீவிற்கு இல்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

புங்குடுதீவு மக்கள் சார்பில்
-றோஜி, புங்குடுதீவு.

## சுவாசிக்கத் தகாத துர்நாற்றம்

**சா**ய்ந்தமருது 10ஆம் பிரிவு பிரதேசத்திலுள்ள ஹாஜா மக்காம் பள்ளிவாசல் அருகே தற்போது பல வகையான கழிவு நீர், குப்பை கூழங்கள் நிரப்பப்பட்டு நீரோட்டம் தடைசெய்யப்பட்டு அவ் விடத்தில் சுவாசிக்கத் தகாத துர்நாற்றம் பரவுகின்றது.

எனவே இதனோடு சம்பந்தப்பட்டவர்களிடம் இதைத் துப்புரவு செய்து, தங்கு தடை இல்லாது நீரோட்டத்திற்கு வழி செய்து, சுகமான சுவாசத்திற்கு இட்டுச் செல்லுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

-நிபாய்தீன் ஜமால்தீன், சாய்ந்தமருது.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

## நான் உன் பக்கம்!

எனது அன்பின் முரசுக்கு!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. அஞ்சா நெஞ்சம் கொண்ட இனிய முரசே! உனக்கு எனது வாழ்த்துக்கள். அத்தனை அம்சங்களும் அருமை. பொய்களையும் தமது பிழைகளையும் மறைக்க நினைப்பவர்களை முரசே நீ கலைத்துப்பிடி. உன் பிடியில் இருந்து யாரும் தப்ப முடியாது. உள்ளதை உள்ளபடி உண்மையைச் சொல்லும் முரசே, உன் பக்கம் எந்த நாளும் இருப்பேன். முரசே! உன்னைப் பாராட்ட வசனங்கள் எனக்கு இல்லை.

-செ.சந்துரலிங்கம், வவுனியா.

## வார்த்தைகள் இல்லை!

வீர முரசே!
வீர நடைபோடும்
தினமுரசே! வெற்றி
முழக்கங்கள் நீ
கொட்டிடவே, மண்ணின்
மைந்தனாய் விண்ணில்
நட்சத்திரங்களாய் நீ
நிகழ்ந்து நிற்கவே,
அரசியல் முதல் குடும்ப
அத்தியாயம் வரை நீ
கலக்கி நிற்கின்றாய்.
உன்னை வாயார வாழ்த்த
எனக்கு வார்த்தைகளே
இல்லை. மென்மேலும் நீ
உயர வேண்டும் என்று
நாங்கள் உன்னை
வாழ்த்துகின்றோம்.

-சி.நடராஜா, புலோலி.

## இனிய முரசுக்கு!

உனது ஆக்கங்கள் அனைத்தும் சுப்பரோ சுப்பர். விளையாட்டுத்துறை இரசிகர்களாகிய எம்மை மகிழ்விக்க நீ தரும் பக்கங்கள் இன்னும் சுப்பர்.

விளையாட்டுத்துறை குறிப்பாக கிரிக்கெட் தரம் அதிகமாக இருப்பது போல அதன் அளவினையும் கூட்ட வேண்டும் என்பதே எமது அவா.


-யூ.எல்.எம்.லத்தீப், பேருவளை.

## தொடர்க உன் பணி!

அன்புடன் முரசுக்கு

வண்ண வண்ண அட்டைகளோடு வியாழன் தோறும் வலம் வரும் முரசே, வந்தனங்கள். சிந்தனைக்குப் பல சின்னச் சின்ன அறிவுத்துளிகள் கொண்டும் வியக்கின்ற தகவல்களையும் வியப்புடன் அள்ளி வழங்கும் அனைத்தும் அறிவிற்கு விருந்தளிக்கின்றது. தேன் கிண்ணம் தரும் கவிதை அமுதங்கள் இதயத்திற்கு இதமானது. இன்று போல் என்றும் உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

-ரபாய்டீன், நிலாவெளி.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் ராஜபக்ஷ, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சகிதம் கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். முன்னாள் யாழ். எம்.பி.யும், ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான நடராஜா மதனராஜா பிரதமரை பொன்னாடை போர்த்தி அழைத்து வருவதை முதலாவது படத்திலும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் மக்களைச் சந்திக்கச் சென்ற பிரதமரை மக்கள் முண்டியடித்து கைலாகு கொடுத்து வரவேற்பதை இரண்டாவது படத்திலும், அங்கு திரண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் பிரதமர் உரையாற்றுவதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அருகில் நிற்பதையும் அடுத்தடுத்த படங்களிலும் காணலாம்.

# சிங்களத் தலைவர்களுக்கு தமிழர்களின் வாக்குகளை தடுக்க முயற்சி; கொத்தணிச் சாவடிகளில் குண்டு வீசத் திட்டம்

சிங்கள தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலில் எந்தச் சிங்களத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து தமிழ் தேசம் அக்கறை கொள்ளப் போவதில்லையென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அறிவித்திருக்கும் இவ்வேளையில், புலிக் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் கொத்தணி வாக்குச் சாவடி களில் வாக்களிப்பதைத் தடுக்கும் முகமாக குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடைபெறக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது பகுதி மக்கள் வாக்களிப்பது குறித்துத் தாம் அக்கறை கொள்ளவில்லையென தமிழ்ச்செல்வன் அறிவித்துள்ள போதிலும், சிங்களத் தலைமைகளுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது தடுக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயமே புலிகள் மத்தியில் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள கொத்தணிச் சாவடிகளுக்கு மக்கள் வருவதைத் தடுக்கும் நோக்கில் கிரனைட் வீச்சுகள், ஸ்னைப்பர் தாக்குதல்கள் போன்றவை இடம்பெறலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் தபால் மூலம் வாக்களிக்க வந்த அரசாங்க ஊழியர்களை உள்ளே செல்ல விடாமல் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் மறியல் போராட்டம் நடத்தியமை, இதற்கான முன்னோடி நடவடிக்கையே என்றும் மேற்படி மாணவ அமைப்புப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். புலிகளின் மாணவர் அமைப்பே, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகே யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிடையில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கல்லூரிகளின் மாணவர் தலைவர்களையும், மாணவர் பிரதிநிதிகளையும் கலந்துரையாடலொன்றுக்கு சமுகமளிக்குமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகள் வாக்குச் சாவடிகளாக இயங்கவிருப்பதால் மாணவர் பிரதிநிதிகள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டதில் முக்கியத்துவமிருக்குமென்று யாழ். மத்திய கல்லூரி ஆசிரியரொருவர் தெரிவித்தார். யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது போல், வாக்களிப்பு நிலையங்களாக இயங்கவிருக்கும் பாடசாலைகளில் மாணவர்களை மறியல் போராட்டங்களில் ஈடுபடத் தூண்டுவதே நோக்கமென்றும் கூறப்படுகிறது. மக்களும் மாணவர்களும் சுயமாகவே மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வாக்களிப்பைத் தடுத்தார்களெனக் காட்டுவதே இதன் நோக்கமென்றும் கூறப்படுகிறது. மஹிந்த ராஜபக்ஷவுக்கா அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கா தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்பது குறித்து கடைசி நேரத்தில் அறிவிக்கப்படுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் கூறி வருகின்றனர். அதாவது தமது தலையீடோ நெருக்குதலோ இன்றி கூட்டமைப்பினர் முடிவெடுக்க அனுமதிப்பதாகப் புலிகள் காட்டிக்கொள்ள முனைந்தாலும் உண்மை யில் புலிகளின் சொற்படியே முடிவை அறிவிப்பார்களென்றும் பரவலாகப் பேசப்படுகிறது. சுமுகமான தேர்தல் சூழ்நிலைகளைக் குழப்பி, கட்டுக்கட்டாக வாக்குகளை அள்ளிப் போடுவதற்காகவோ அல்லது வாக்குப் பெட்டிகளை மாற்றுவதற்காகவோ இவ்வாறான தந்திரோபாயங்கள் கைக்கொள்ளப்படலாமென்றும் கூறப்படுகிறது. வன்னியில் கிட்டத்தட்ட ஓருலட்சம் வாக்காளர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. முகமாலையில் 104 கொத்தணி வாக்குச் சாவடிகளும், ஓமந்தையில் 64 உம், உயிலங்குளத்தில் 19 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்படவுள்ளன.

## கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் தொடரலாம் - பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அலரி மாளிகைக்கு அண்மையில் கடந்த 7ஆம் திகதி இரவு கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைக் குண்டு பொருத்திய அங்கி பிரதமர் ராஜபக்ஷவை இலக்கு வைத்துக் கொண்டுவரப்பட்டதா? அல்லது கொழும்பில் தேர்தலுக்கு முன்னதாக பீதி மனோபாவத்தை உருவாக்கு வதற்காகக் கைவிடப்பட்டுச் சென்றதா? என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின் றனர். மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த தமிழ் வாலிபரொரு வரும், கொழும்பைச் சேர்ந்த சிங்கள இளைஞர் ஒருவரும் மறுதினமே சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். புலிகளுக்கும் பாதாளக் குழுவினருக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். கேர்ணல் முத்தலிப், லெப்டினன்ட் கேர்ணல் மீடின் ஆகியோரின் கொலைகளுக்குப் பாதாளக் குழுவினரைப் பயன்படுத்தியது போன்று ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கொழும்பிலும் பல குண்டுத் தாக்குதல்களுக்குப் பாதாளக் குழுவினரைப் புலிகள் பயன்படுத்தலாமென்றும் பொலிஸார் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## வடக்கு, கிழக்கு மக்களுக்கும் உதவும் பட்ஜெட்

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பல யோசனைகள் வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக யுத்தத்தாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனைகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன என்று கடந்த எட்டாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் யோசனைகள் குறித்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட போது ஐ.தே.கட்சியும் அதன் பங்காளிக் கட்சிகளான இ.தொ.கா, மு.கா ஆகியவற்றின் எம்.பி.க்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்று பட்ஜெட்டை சமர்ப்பித்துப் பேசிய நிதி அமைச்சர் சரத் அமுனுகம குறிப்பிட்டார்.

## தபால் மூல வாக்குகளை அபகரிக்க இளம்பரிதி முயற்சி

புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம் பரிதிக்கும் யாழ்.செயலக உயரதிகாரியொருவருக்குமிடையில் தபால் மூல வாக்குகள் தொடர்பாகக் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற இழுபறி காரணமாக சம்பந்தப்பட்ட உயரதிகாரி இராஜினாமாச் செய்ய முனைந்ததையடுத்து ஊழியர்களின் தலையீட்டினால் நிலைமை சுமுகமாகக் கையாளப்பட்டது. இளம்பரிதி தலைமையில் சென்ற குழுவினர் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த தபால் மூல வாக்குகளை எடுத்துச் செல்ல முனைந்த போதே இந்த இழுபறி நிலையேற்பட்டது. தபால் மூல வாக்குகளை நீங்கள் எடுத்துச் செல்வதானால் நான் இராஜினாமாச் செய்கிறேன் அதன் பின்னர் எடுத்துச் செல்லுங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி கூறினார். இவ்வேளை செயலக ஊழியர்கள் தலையீட்டையடுத்து இளம்பரிதி தான் வந்த வாகனத்திலேயே திரும்பிச் சென்றார்.

## அல்-குவெய்தாவுடன் புலிகளுக்குத் தொடர்பு

ஒசாமா பின் லேடனின் அல் - குவெய்தா இயக்கத்தோடு அல்லது வேறு ஏதாவது பயங்கரவாத இயக்கத்துடன் புலிகள் அமைப்புக்குத் தொடர்பிருக்கலாமென்று கேந்திர கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. லண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் இந்த அமைப்பு, 2005 - 2006ஆம் ஆண்டுக்கான இராணுவ அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. கடந்த 25ஆம் திகதி இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அரச சார்பற்ற ஆயுதக் குழுவென்று புலிகள் இயக்கம் இந்த அறிக்கையில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தரைப்படை, கடற்படையோடு ஆரம்பக் கட்டத்திலுள்ள விமான அணியும் புலிகளிடம் இருப்பதாக அறிக்கை தெரிவித்துள்ளது.

## மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்

மட்டக்களப்பு - திருமலை வீதியிலுள்ள இலங்கை வங்கிப் பிரதேச அலுவலகத்துக்கு முன்பாகப் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து இதுவரை எந்த ஊடகமோ, ஊடக அமைப்புகளோ கண்டனம் தெரிவிக்காதமை குறித்து வடக்கு, கிழக்கு மாற்றுக் கருத்துக்களுக்கான நிலையம் கண்டனம் தெரிவித்துள்ளது. புலிகள் தமது கடுங்கோட்பாடு நிலையைக் கைவிட்டு மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றும் இந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற தாக்குதலில் நான்கு பொலிஸார் உட்பட ஆறுபேர் காயமுற்றனர்.

## மீடின் கொலை : இரண்டு சந்தேக நபர்கள் விரைவில் சிக்கலாம்

இராணுவப் புலனாய்வு அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் மீடினின் கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவரும் பிரதான சந்தேக நபரான ஐஸ் மஞ்சுவென அழைக்கப்படும் சமிந்த மஞ்சுளவைக் கைது செய்ய முடியாமலிருப்பதாகப் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. ஐஸ் மஞ்சுவும் இனங்காணப்பட்டிருக்கும் மற்றும் இரு புலி இயக்க உறுப்பினர்களும் வன்னிக்குத் தப்பிச் சென்றிருப்பதாகத் தகவல் கிட்டியிருப்பதால் அவர்களைக் கைது செய்ய முடியவில்லையென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஐஸ் மஞ்சுவின் நெருங்கிய சகாவும் மீடினுக்கு மஞ்சுவை அறிமுகப்படுத்தியவரென்று கூறப்படுபவருமான சம்ளி என்பவரைப் பொலிஸார் கைது செய்து விசாரித்ததையடுத்து பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. சம்ளியால் இனங்காணப்பட்ட இரு புலி இயக்க உறுப்பினர்கள் பற்றிய பெயர் விபரங்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிட பொலி ஸார் மறுத்துள்ளனர். கிட்டத்தட்ட மூன்று மாத காலமாக மீடின் கொலை தொடர்பாகப் பாதாளக் குழுவுக்கும் புலி இயக்க உறுப்பினர்களுக்கு மிடையில் திட்டங்கள் தீட்டப்பட்டு வந்துள்ளனவென்றும் தெரிய வருகிறது. பாதாளக் குழுவினருக்கு பல கோடி ரூபா புலிகளால் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது. இதற்கிடையில் மீடினின் கொலையில் புலிகளுக்குச் சம்பந்த மிருப்பதாகத் தெரிவித்திருக்கும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, விரைவில் மேலும் இருவர் கைதுசெய்யப்படலாமென்றும் நம்பிக்கை தெரிவித்தார். இதுவரை ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் அவர் கூறினார்.

## ரணிலும் மஹிந்தவும் பற்றி பாலகுமாரன்

"மஹிந்த வெளிப்படையாகச் சொல்வதனை, ரணில் மறைமுகமாகச் சொல்கின்றார். மஹிந்த ஜனாதிபதியானால் புலிகளுக்குக் குறைந்த அதிகாரங்களைக் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கைத் தோற்கடிப்பார்" என்று புலி இயக்க முக்கியஸ்தரான வே.பாலகுமாரன் தெரிவித்தார். ரணில் ஜனாதிபதியானால் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு தீர்வை முன்வைத்துப் புலிகளைப் பின்னடையச் செய்து தமிழ் மக்களின் இலக்கைத் தோற்கடிக்க முயற்சியெடுப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

## கடைசித் தாக்குதலுக்கு கனடாவில் நிதி சேகரிப்பு?

இலங்கையில் இறுதித் தாக்குதலுக்குப் புலிகள் தயாராகிறார்களென்றும் இது குறித்துப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது நவம்பர் 27ஆம் திகதிய கார்த்திகை தின உரையில் அறிவிப்பாரென்றும் கூறி, கனடாவில் நிதி சேகரிக்கப்படுகிறதென்று கனடியத் தகவல்கள் கூறுகின்றன. கனடாவின் ஒன்ராறியோ, மொன்ரீல் மாநிலங்களில் 'உலகத் தமிழர் இயக்கம்' என்ற புலிச் சார்பு அமைப்பு இந்த நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நவம்பர் மாதம் முடிவடைவதற்கிடையில் ஐம்பது லட்சம் டொலர்கள் சேகரிக்கப்படுமென்றும் இதற்காக வன்னியிலிருந்து விசேட பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனரென்றும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது. செல்வந்த, தமிழ் வர்த்தகர்களிடமிருந்து 25,000 டொலர்கள் கோரப்படுவதாகவும் சாதாரண தமிழ் மக்கள் இரண்டாயிரம் டொலர்கள் வழங்க வேண்டுமென்று கோரப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் ரொரன்றோ, ஸ்காபரோவிலுள்ள பேர்ச் மவுன்ற் வீதியில் அமைந்திருக்கும் இந்துக் கோவிலில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் நிதி சேகரிக்கப்பட்டிருக்கிறது. வழங்கப்படும் நிதிக்கு ரசீது வழங்கப்படவில்லை. ஆனால் நிதி வழங்கியவரை இனங்காட்டும் வகையில் 'Pin' இலக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் புலிகளின் சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்வதற்கு இந்த இலக்கங்களைக் காட்டினால் கெடுபிடிகள் இருக்காதென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் கனடாவில் சட்டதிட்டங்களைப் பெரும் கேள்விக் குறியாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பிரதமருக்கு யாழ்.மக்கள் வரவேற்பு

1983ஆம் ஆண்டு ஜுலை இனக் கலவரத்தைத் திட்டமிட்டு மேற்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களின் உயிர், உடைமைகளை அழித்தவர்கள் ஐ.தே.கட்சியினரே. அதே போன்று தெற்காசியாவிலேயே சிறந்ததாகத் திகழ்ந்த யாழ். நூலகத்தை எரித்துஅழித்தவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியினரே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடந்த நான்காம் திகதி காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கூடிய மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான மக்கள் பிரதமரை வரவேற்பதற்காகத் திரண்டிருந்தனர். பிரதமரோடு யாழ்ப்பாணம் சென்றிருந்த ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில் கீழ்க் கண்டவாறு கூறினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யுத்தத்தை வெறுப்பதாகவும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென்று. கூறியிருப்பதும் வரவேற்புக்குரியதாகும். இரு கரங்களும் தட்டினால் தான் ஓசை எழும். எனவே இனப்பிரச்சினைத் தீர்வில் புலிகளும் விசுவாசமாகச் செயற்பட வேண்டும். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நீங்கள் இங்கு திரண்டிருப்பதிலும் பார்க்க புலிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வந்துள்ளீர்கள் என்ற உண்மை பாராட்டுக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## வாக்களிப்பது ஜனநாயகக் கடமை மக்கள் நிறைவேற்றுவார்கள்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இன்னும் ஒரு வாரமே ஜனாதிபதித் தேர்தலுக்கு இருப்பதால் வாக்காளப் பெருமக்கள், வேட்பாளர்களுக்கு வரம் தரும் தெய்வங்களாகவே காட்சி தருகின்றார்கள். வேட்பாளர்களும் தமது வாக்குறுதிகளை நாலா திசையும் வீசி நாக்கு தேய்ந்து விட்டார்கள். எதிர்வரும் நவம்பர் பதினெட்டாம் திகதியை தமது புதிய அத்தியாயத்தின் தொடக்க நாளாகவே பிரகடனப்படுத்தியுள்ளார்கள். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி தங்களுக்குக் கிடைத்தால் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை விடவும் மற்ற சகலதையும் செய்து முடிக்க முடியும் என்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவாலும் நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்த முடியவில்லை அதற்கு அடுத்தடுத்த எவராலும் ஒரு துரும்பைக் கூடத் தூக்கிப் போட முடியவில்லை என்பதை இலங்கை மக்கள் வாழ்ந்து அனுபவித்துள்ளார்கள். ஆனால் இப்போது அதற்காக போட்டியிடும். வேட்பாளர்களும் தாம் ஜனாதிபதியானால் நாட்டை அமைதிப்பூங்காவாகவோ சொர்க்க புரியாகவோ மாற்றப் போவதாகக் கூறி வருகின்றனர்

யுத்தம் எப்படி எவராலும் நடத்த முடியாதோ அதேயளவு உண்மை நாட்டையும் சொர்க்க புரியாக மாற்ற முடியாதன்பதாகும். அதற்காக ஜனாதிபதியே தேவையில்லை என்றும் மக்கள் இருந்து விட முடியும். அப்படி இருந்து விடுவோமானால் இறப்பது உறுதி என்பதற்காக இப்போதே சுடுகாட்டில் போய் படுத்துக்கொள்வதற்கு ஒப்பானதாக அமையும்.

ஆகவே மக்களின் முன்னால் பரப்பி விடப்பட்டிருக்கும். வாக்குறுதிகளைச் சீர்தூக்கிப் பார்த்து சராசரியான விடயங்களை சாத்தியமான வழியில் அணுகி கையாளக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது ஒவ்வொரு வாக்காளரினதும் ஜனநாயகக் கடமையாகவுள்ளது.

இதில் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வீதக் குழப்பமும் இருக்கத் தேவையல்லை. அதேபோல் யாரும் உங்களைக் குழப்பவும் இடந்தரத் தேவையில்லை வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரினதும் தனிச் சுதந்திரம். அதில் எவரது விருப்பு வெறுப்புகளையும் திணிக்க முடியாது.

மக்கள் தமது தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களில் யாரை நம்பி யாருக்கு வாக்களித்தீர்கள், உங்களது வாக்குகளால் பதவிக்கு வந்தவர்களால் நீங்கள் பெற்ற பயன் என்ன என்பதை நன்கு சிந்தித்தால் இம்முறை யாருக்கு உங்கள் வாக்கு என்பதை தீர்மானிக்க உதவியாக இருக்கும்.

தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்லவும், மக்களை பயமுறுத்தவும் மற்றவருக்கு எந்தளவுக்கு உரிமை இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்களோ, அதை விடவும் தமக்குப் பிடித்தமான ஒருவருக்கு தமது வாக்கை வழங்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழ் பேசும் மக்களிடம் நெருங்கி வர முடியாத சூழலே தற்போது உள்ளது. இதே நிலை தொடருமாயின் மக்களுக்கும் அரசுக்கும் இடைவெளி அதிகரிக்கவே செய்யும். அப்படியொரு சூழ்நிலையே யுத்தப் பேரிகையை ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்பாக அமையும். போர் இல்லாத புதிய யுகத்திற்குள் - புதிய சிந்தனைக்குள் மக்கள் புகத் தயார் என்பதை ஒரு புன்னகையை பரிமாறிக் கொள்வதனூடாக வெளிப்படுத்துங்கள் உங்கள் சமாதான விருப்பத்தை உங்கள் வாக்குகளால் அங்கீகாரப்படுத்துங்கள். எதிர்வரும் பதினெட்டாம் திகதி சராசரி சம்மதத்தோடு மக்களின் யுகமாக விடியட்டும்

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## ஊரிலிருந்து....



இம்மாதம் 4ஆம் திகதி பிரதமர் மஹிந்த காங்கேசன்துறைக்கு வருகின்றார். விரும்பியோர் செல்லலாம் என்பதைக் கேள்விப்பட்டு ஆவலில் சென்றோரில் நானும் ஒருவன். அவ்வாறு வந்தோரில் வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறியோரும் கணிசமாகக் காணப்பட்டனர். ஊரின் பெருமைகளையும் பழைய நினைவுகளையும் கதைகதையாகச் சொன்னார்கள். அவர்கள் பேசியதில் முக்கிய விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின், உயர்பாதுகாப்பு வலய மக்களுக்கான மாற்று வீடமைப்புத் திட்டம் அது மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் எமக்கு இப்போது குடியிருக்க ஓர் சொந்த வீடு கிடைத்திருக்கும். பிரச்சினை தீர்ந்து உயர் பாதுகாப்பு வலயத்தில் நாம் எம்முடைய வீட்டிற்கு குடிவரும்போது இரண்டு வீடுகளுக்கு சொந்தக் காரராய் இருந்திருப்போம். தீர்க்கதரிசனமற்ற, சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கத் தெரியாத தமிழ் கூட்டமைப்பார் வெண்ணெய் திரளும் போது தாழியை உடைத்து விட்டனர். நல்ல காலம் இப்போது பிரதமர் எங்களது வீடுகளுக்கு வாடகை தருவதாகக் கூறி வயிற்றில் பால் வார்த்து உள்ளார். திரும்பும் போது மாவைக் கந்தனிடம் மனமுருக வேண்டினேன் "கந்தா இம்மக்களை கண்ணோக்கப்பா"

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தேர்தல் தில்லுமுல்லுகளும் திருத்தப்படாத தீர்ப்புகளும்

இலங்கையின் ஐந்தாவது செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ளன. மக்களுக்காக, மக்களால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதி நிதிக்கான ஜனநாயக உரிமையென்று தேர்தலுக்கு வியாக்கியானம் செய்யப்படுவதுண்டு. இந்த ஜனநாயகத் தேர்தலில் கள்ள வாக்குகளுக்கும் தேர்தல் மோசடிகளுக்கும்கூட ஜனநாயக உரிமையுண்டு என்பது இலங்கையில் மட்டுமல்ல, பாரிய ஜனநாயக நாடென்று சிலரால் வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் முதல் தடவையாக ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது டெக்ஸாஸ் மாநிலத்தில் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டுகளையடுத்து அம் மாநிலத்தில் தேர்தல் முடிவுகள் தாமதமாக வெளியிடப்பட்டன. மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டே முடிவுகள் வெளியிடப்பட்டன. இலங்கையின் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா அப்போது அமெரிக்காவில் இருந்தாராவென்று கேலி செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் ஈராக்கிலும் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

எனவே கள்ள வாக்குப் போடுதல், ஆள்மாறாட்டம் செய்தல், வாக்குப் பெட்டிகளை அபகரித்துச் செல்லுதல், கட்டுக்கட்டாக வாக்குகளை அள்ளிப் போடுதல், மிரட்டி வாக்களிக்கச் செய்தல், பணத்துக்கு வாக்குகளை வாங்குதல் போன்றவையெல்லாம் ஜனநாயகத் தேர்தலின் மறுபக்கமென்றால் மிகையில்லை. 1980களில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின்போது குருநாகலிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் அதிகாரிகள் அழைத்துச் செல்லப்பட்டதும் கட்டுக்கட்டாக வாக்குகள் அள்ளிப் போடப்பட்டதும் வரலாறு மறக்கக் கூடாத சங்கதிகள். எனவே Mr.Clean என்று கூறப்படும் வேட்பாளர்கள் எவராயினும் வாக்குறுதிகளை மட்டுமல்ல வாக்குகளுக்காகப் பணத்தையும் அள்ளிவீச ஒழுங்குகளைச் செய்வார்களென்பதும் உண்மையே.

ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்காகவும் மற்றும் தேர்தல் சட்டதிட்டங்கள், வாக்களிக்கும் முறை ஆகியவை பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவும் கண்காணிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காகவும் இரண்டு உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய்களை ஜப்பான் வாரி வழங்கியுள்ளது. மேலும் கோடிக்கணக்கான டொலர்கள் நிதியுதவி தேவையென இந்த உள்நாட்டு அமைப்புகள் விடுத்திருக்கும் கோரிக்கையைப் பார்த்தால், நாமும் ஒரு தேர்தல் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தலாமேயென்ற யோசனை எழுகிறது.

வேட்பாளர்களின் கட் அவுட்டுகளைக் கட்சிக் காரியாலயங்கள் அல்லது வேட்பாளர்களின் அலுவலகங்களில் வைக்கலாமே தவிர பொது இடங்களில் வைக்கக் கூடாதென்பது தேர்தல் சட்ட விதி. அதேபோன்று பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்படக்கூடாது போன்ற விதிகள் தாராளமாகவே மீறப்படுகின்றன. தேர்தல் பாதுகாப்புச் செலவுகளுக்கும் சுவரொட்டிகளை அப்புறப்படுத்தல் போன்றவைக்கும் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது. இருந்தும் எதிர் வேட்பாளரை இழிவுபடுத்தும் விதத்தில் மாற்றுக் கட்சிகளே வசை பாடும் விதத்தில் சுவரொட்டிகளை ஒட்டுகின்றன. போலியான வாக்குச் சீட்டுகளையும் அச்சடித்துக் கொள்கிறார் கள். மேல் மாகாணத்தில் இம்முறை 'நிழல் பதிவு' முறையிலான வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப் போக்கைப் பார்க்கையில் நிழலென்ன ஆயிரம் வோல்ற் வெளிச்சம் போட்டுப் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியாத வாக்குச் சீட்டுகளை அச்சடிக்க முடியும்.

பாராளுமன்றத் தேர்தலைப் போலன்றி ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் முறை மாறுபட்டிருப்பதால் அதுகுறித்து பொதுமக்களுக்கு போதியளவு அறிவுறுத்த வேண்டிய தேவையுமிருக்கிறது. இல்லையேல் வாக்கு மோசடிகளில் ஈடுபடும் பெருச்சாளிகள் மக்களின் அறியாமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடிய சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன. இத்தேர்தல் மேடைகளுக்கு இறந்துபோனவர்களை உயிருடன் அழைத்து வருகிறார்கள். உயிருடனுள்ளவர்களைக் கொன்று விடுகிறார்கள். அதாவது கொலை செய்யப்பட்ட பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி, விஜய குமாரதுங்க மற்றும் காமினி அத்துக்கோரள போன்றவர்களின் மரணங்களுக்கு அரசியல் சாயம் பூசி வசைபாடும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப்போன்று உயிருடனிருக்கும் அரசியல்வாதிகள் மீது கேடுகெட்ட முறையில் அபாண்டங்கள் சுமத்தி அவர்களைக் கொன்றொழிக்கும் வகையில் அபகீர்த்தியேற்படுத்தும் பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தேர்தலில் வடக்கு, கிழக்கிலும் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் மலையகப் பகுதிகளிலும் தேர்தல் மோசடிகள் இடம் பெறலாமென பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது புலிகள் பாரிய தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டனர். இதனை ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் 'பவ்ரல்' போன்ற உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் ஊர்ஜிதம் செய்திருந்தன. எனவே வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 21 எம்.பிக்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்களென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இம்முறையும் வடக்கு, கிழக்கிலேயே மிக மோசமான தேர்தல் மோசடிகள் இடம்பெறலாமென்று உள்நாட்டு, வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் அச்சம் தெரிவித்துள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் பதின்மூன்று பேர் போட்டியிட்டாலும் பிரதான இரு வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில்தான் போட்டி நிலவுகிறது. இருவரில் ஒருவருக்குத்தான் வெற்றிவாய்ப்புண்டு. எனவே தேர்தல் மோசடிகள் இந்த இரு வேட்பாளர்களுக்குச் சார்பாகவே இடம்பெறும். எனவே கடந்த தேர்தலின்போது தேர்தல் மோசடிகளில் ஈடுபட்ட அதே சக்தியினரே இம்முறையும் மோசடிகளில் ஈடுபடுவார்களென்றே சகலரும் சுட்டு விரல்களை நீட்டுகின்றனர்.

ஆனால் புலிகளோ இத் தேர்தலில் எவரையும் ஆதரிக்கப் போவதில்லையென்று தெரிவித்து வருகின்றனர். அவர்கள் இப்போதைக்கு அப்படிச் சொல்லித்தானாக வேண்டும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவைப் புலிகள் ஆதரிப்பதாகப் பகிரங்கமாகத் தெரிவித்தால், நிச்சயமாகப் புலி எதிர்ப்பு சிங்கள வாக்குகள் மஹிந்தவுக்கே கிடைக்குமென்ற சூத்திரம் ரணிலுக்கோ புலிகளுக்கோ தெரியாததல்ல. புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையையும் ஆயுதப் போராட்டத்தையும் அடாவடித்தனங்களையும் விரும்பாத தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் யாருக்கு ஆதரவு வழங்குவார்களென்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எனவே கடைசி நேரத்தில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று அறிவிப்போமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருப்பதால் யாருக்கு அவர்களின் ஆதரவு கிட்டுமென்பதை நாம் பூதக் கண்ணாடி வைத்து ஆராய வேண்டிய தேவையில்லை. ஆகவே யாருக்காகத் தேர்தல் மோசடிகள் இடம்பெறப் போகின்றனவென்பதையும் நாம்

> **ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்காகவும் மற்றும் தேர்தல் சட்டதிட்டங்கள், வாக்களிக்கும் முறை ஆகியவை பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவும் கண்காணிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காகவும் இரண்டு உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய்களை ஜப்பான் வாரி வழங்கியுள்ளது. மேலும் கோடிக்கணக்கான டொலர்கள் நிதியுதவி தேவையென இந்த உள்நாட்டு அமைப்புகள் விடுத்திருக்கும் கோரிக்கையைப் பார்த்தால், நாமும் ஒரு தேர்தல் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தலாமேயென்ற யோசனை எழுகிறது.**

சொல்லக்கூட வேண்டிய தேவையில்லை. ஆனால் இம்முறை கண்காணிப்பு நடவடிக்கைகளும் உஷார் செயற்பாடுகளும் அதிகரிக்கப்பட்டிருப்பதால் கள்ள வாக்குப் போட முனைபவர்கள் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும்.

புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே வாக்களிப்பதற்கான கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வரும் மக்களின் அடையாள அட்டைகள் படையினரால் பரிசோதிக்கப்பட்ட பின்னரே இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர் எனவே பெருந்தொகையான மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டமாட்டார்களென்ற போதிலும் தவிர்க்க முடியாதபடி சோதனைகளைச் செய்ய வேண்டிய நிலை படையினருக்கு ஏற்படும். இதேபோன்று நீண்ட தூரங்களைக் கடந்து வர வேண்டிய தேவை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலில்லாத மக் களுக்கு இருக்கிறது. எனவே இந்த மக்களுக்கு போக்குவரத்து தங்குமிட வசதி, உணவு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டாலேயே அவர்களால் வாக்களிக்க முடியும். புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பிரசாரம் செய்வதற்கு வேட்பாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் பிரசாரங்கள் அப்பகுதி மக்களைச் சென்றடைவதற்கான வாய்ப்பும் மிகமிகக் குறைவு. எனவே தேர்தலில் அக்கறையும் இம் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்று விரும்பும் சக்திகளே மக்களின் சார்பில் வாக்குகளை அள்ளிப் போடலாம். இதுதான் அங்குள்ள யதார்த்த நிலை.

இது போன்றே அப்பாவிகளான மலையக மக்களின் வாக்குகளை மிரட்டிப் பறிக்கும் அடாவடித்தனங்கள் சகல தேர்தல்களிலும் நடைபெற்றுள்ளன. இவை தொடர்பான குற்றச்சாட்டுகளும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. மலையக தோட்டப் பகுதி மக்கள் தமது தோட்டப் பகுதிகளிலிருந்து தூர இடங்களைத் கடந்து வந்தே வாக்களிக்க வேண்டிய நிலை இன்னமும் தொடர்கிறது. காசுக்கு விலைபோன மலையகத் தலைமைகளின் பாணியில், மலையக மக்களின் வாக்குகளைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கள்ள வாக்குகள் நல்ல விலையில் விலை போகக் கூடிய சாத்தியங்கள் இங்கு அதிகம் தென்படுகின்றன.

இதேபோல சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வாக்களிப்பதில் பெரும் சிக்கல்கள் நிலவுகின்றன. பாதிக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் வாக்குகளும் பறிபோகக் கூடிய சூழ்நிலைகளும் நிலவுகின்றன.

இதேவேளை ஊடகங்கள், அவை அரச சார்ந்த ஊடகங்களாக இருந்தாலென்ன அரச சார்பற்ற ஊடகங்களாக இருந்தாலென்ன பக்கச் சார்பாகவே நடந்து கொள்கின்றனவென்று வெளிவரும் குற்றச்சாட்டுகளை மறுத்துவிட முடியாது. அரச சார்பு ஊடகங்களை விட அரச சார்பற்ற ஊடகங்களே எமது நாட்டில் மிக அதிகமாகவுள்ளன. எண்பது சதவீதத்துக்கு மேற்பட்ட ஊடகங்கள் அரசச் சார்பற்றவையே. பெரும்பாலும் இவை அனைத்துமே பக்கச்சார்பற்றவையெனத் தம்பட்ட மடித்துக் கொண்ட போதிலும் ரணிலுக்குப் பக்கச் சார்பாகவே செய்திகளையும் விடயதானங்களையும் வெளியிடுகின்றன. தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் நடத்தும் எஸ்.எம்.எஸ். மூலமான கருத்துக் கணக்கெடுப்பில் ரணிலுக்கு 65 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் ஆதரவளிப்பதாகக் கூறுகின்றன. இந்த நாட்டில் இருபது இலட்சம் பேரிடம் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளனவா என்பது சந்தேகமே. அதுமட்டுமல்ல எஸ்.எம்.எஸ். அபிப்பிராயங்களை வைத்துக் கிராமிய விவசாயிகளினதும் நகரத் தொழிலாளிகளினதும் அபிப்பிராயத்தைப் பெற முடியுமா? எஸ்.எம்.எஸ். அபிப்பிராயக் கணக்கெடுப்புக் கூட வெறும் பிரசார உத்திதான். அரச தொலைக்காட்சியான ரூபவாஹினி நடத்தும் கருத்துக் கணிப்பில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறுபது சதவீதத்துக்கு மேற்பட்டோர் வெற்றி வாய்ப்பிருப்பதாகத் தெரிவிப்பதும் தனியார் தொலைக்காட்சி ரணிலுக்கே வெற்றியென அறுபது சதவீதத்துக்கு மேலானோர் தெரிவித்திருப்பதும் கருத்துக் கணிப்பின் போலித் தன்மையை அம்மணமாக அம்பலப்படுத்தவில்லையா? ரணிலை எஸ்.எம்.எஸ். ஜனாதிபதியென்றும் மஹிந்தவை நாட்டு ஜனாதிபதியென்றும் சிலர் தெரிவு செய்கிறார்கள்.

எனவே என்னதான் மோசடிகளும் ஊழல்களும் நடந்தாலும் மக்களின் விசுவாசமான விருப்பு, வெறுப்புகளும் தேர்தலில் வெளிப்படுத்தப்படுமென்பதை யாரும் மறுக்க முடியாது. கடந்த காலங்களில் எந்தத் தேர்தலிலும் அளிக்கப்பட்ட தீர்ப்புகள் திருத்தப்பட்டதாக வரலாறு கிடையாது.

தீர்ப்புகள் திருத்தப்பட வேண்டுமென்றால் இன்னுமொரு தேர்தலை சந்தித்தேயாக வேண்டுமென்ற நிலையே இங்கு நிலவுகிறது. மிக அதிகமானோர் மஹிந்தவே வெற்றிபெறுவாரென்று ஆருடம் கூறுகிறார்கள். எதற்கும் மக்கள் தீர்ப்பையறிய ஐம்பதோ, நூறோ, நூற்றியம்பதோ மணித்தியாலயங்கள் பொறுத்திருப்போமாக. ■

நரன்

**ப**ரம்பரை பரம்பரையாக உழைப்பாளிகளாகவே இருந்து லயன் அறைகளில் வாழ்ந்த ஒரு சமூகத்தின் அரசியல் அபிலாஷைகள் என்பது வானளாவிய வீச்சைக் கொண்டது.

இம்மக்களின் அரசியல் தாகத்தைத் தீர்க்க எவராலும் முடியாது என்பதையே கடந்த கால மற்றும் நிகழ்கால அரசியல் நகர்வுகள் நிரூபித்துள்ளன. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அம்மக்களின் வாக்குகளையும், சந்தாப் பணத்தையும் மூலதனமாகக் கொண்டு அம்மக்களின் அரசியல் பிரதிநிதிகளாகக் கட்சிகளை நடத்தும் சிலர் அந்த உழைப்பாளர் வர்க்கத்தின் விமோசனத்தைப் பெற்றுக்கொடுப்பதில் தோற்றுப்போயிருக்கிறார்கள்.

ஒவ்வொரு தடவையும், ஜனாதிபதி தேர்தல் வரும்போதும், பாராளுமன்றத் தேர்தல் வரும்போதும் லயன் அறைகள் பற்றிய கவலையையும், அம்மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பற்றியும் வாக்குறுதியளிக்கும் அப்பகுதி அரசியல் தலைமைகளும், தென் இலங்கை அரசியல் தலைமைகளும் குறிப்பிட்ட தேர்தல் முடிந்தவுடன் எல்லாவற்றையும் மறந்து வேறொரு உலகத்தில் வாழ்வது போல் இருந்து விடுகின்றனர். அந்த வாக்குறுதி மன்னர்களைப் பாதுகாக்கும் முயற்சியாக மலையக மக்களின் அரசியல் தலைவர்கள்

**தேர்தல் "திருவிழா"க் காலங்களில் கடைவிரித்து வாக்குறுதி வியாபாரம் செய்கின்றவர்களிடம் மக்கள் விலை போவதை விடவும், அந்த மக்களின் அரசியல் தலைமைகள் அதிகமாக விலைக்குப் போய் விடுகின்றன. இத்தகைய ஏமாற்றுத்தனத்தை வெளிக்கொணரவும், தெளிவுபடுத்தவும் இப்போது ஒரு சில அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.**

அவ்வப்போது அரசுக்கு வரும் சக்திகளோடு தேன் நிலவு கொண்டாடிவிட்டு அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்றுக் கொள்வதும் அந்த அமைச்சுப் பொறுப்புகளைக் கொண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக எதையாவது செய்துகாட்டி, மக்களின் கண்ணில் மண் தூவிவிட்டு அதையே தமது அரசியல் சாதனையாக அடுத்த தேர்தல் வரை தம்பட்டம் அடித்துக்கொண்டிருப்பார்கள். இவ்வாறான வெட்கத்துக்குரிய துர்ப்பாக்கியமான நிலையே இன்றும் மலையக மக்களின் தொடர்கதையாகி விட்டுள்ளது.

அரசியல் உரிமையையும், அடிப்படைத் தேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்றம் போவதும், அங்கு மத்தியில் அமையக்கூடிய அரசில் அமைச்சுப் பொறுப்பை வகிப்பதும் தவறானது அல்ல. ஆனாலும், இந்த

இந்த இரு பிரதான கட்சிகளின் வேர்களாக இருக்கக் கூடிய வாக்காளர்கள் அல்லது ஆதரவாளர்கள் இன்னும் பாம்பும் கீரியும் போல வெவ்வேறு முகாம்களில் தமக்குள்ளேயே முட்டி மோதி, முகத்தில் கரி பூசிக்கொண்டு கட்சி அரசியல்

# மலையகத்தில்



# விலை போன தலைமைகளும் விலை போகா மக்களும்

அனுகுமுறையில் மேற்படி அரசியல் தலைமைகள் எவ்வாறான பேரத்தினை பேசுகின்றன. இந்தப் பேரம் பேசுதலின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் லாபம், வாக்களித்த மக்களுக்குப் பகிரப்படுகிறதா? அப்படி பகிரப்படுதலினால் என்னென்ன விதமான அரசியல் லாபத்தை - அடிப்படைத் தேவையை - தாம் சார்ந்த மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதே இங்கே முக்கியமாகிறது.

அடுத்ததாக இத்தகைய அர்ப்பணிப்பு மிக்க - நேர்மையான - மக்கள் பணியை யார் செய்கிறார்கள்? அப்படிச் செய்பவர்களிடம் உறுதியும், கொள்கையும் நேர்த்தியாக உள்ளதா? என்பதை மக்களும் நன்கு அவதானித்துக்கொள்ள வேண்டும். எவரொருவரையும் நூறு வீதமும் சரியானவராக அரசியலில் எதிர்பார்க்க முடியாது என்பது யதார்த்தம்தான். அதற்காக தவறான சக்திகளையே சகித்துக் கொண்டு தொடர்ந்து ஏமாற்றத்தைச் சந்திக்க வேண்டும் என்பதும் எந்தவொரு சமூகத்திற்கும் தலையெழுத்தில்லை என்பதையும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று மலையக மக்களின் பிரதான அரசியல் தலைமைகள் என்று கூறும் இரு கட்சிகளும் தமது கட்சி நலன் மற்றும் சுய லாபம் கருதி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரே குடையின் கீழ் குளிர்காய்கின்றன. இதனுடைய மறுபக்கத்தில் மறைக்கப்பட்டிருக்கும் உண்மையை எத்தனை பேரால் புரிந்துகொண்டிருக்க முடிந்திருக்கும்.

பேசிக்கொண்டிருக்கையில், தலைமைகள் ஒரே குடையில் நாளைய அமைச்சுப் பொறுப்புகள் பற்றிய கற்பனையில் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் அரசியல் என்றாகி விட்டது. அதாவது தொண்டர்களை வெவ்வேறு முகாம்களில் பிரித்து வைத்து, மக்களுக்கு மாயாஜாலம் காட்டிக்கொண்டிருக்கப் பணித்துவிட்டு, தலைவர்கள் கொள்கை பேசி வருகின்றனர். மக்களின் கஷ்டத்திற்குள், நெருக்கடிக்குள், தவிப்பில் அரசியல் அல்லது போராட்டத்தை நடத்துவது மிகவும் எளிதான காரியம் என்ற சுயநலமிக்க நடைமுறையே இன்று வட கிழக்கிலும் மலையகத்திலும் நடந்து கொண்டிருக்கிறது. வட கிழக்கில் ஆயுத முனையில் தன் இனத்தை அடக்கியாளும் நிலையென்றால், மலையகத்தில் அரசியலின் பெயரால் தன் இனத்தை அடிமைச் சமூகமாக வைத்திருக்கும் கைங்கரியத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே மக்கள் ஒன்றுக்கு இரண்டு தடவை நன்றாகச் சிந்திப்பது அவசியமாகிறது. உங்களின் வாக்குகள், உங்களின் சந்தாப் பணம் என்பன உங்களுக்கு நன்மையான திசையில் உங்களை வழி நடத்திச் செல்கிறதா அல்லது தவறான வழி நடத்தலில் நீங்கள் அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா என்பதை உணர்ந்து எதிர்காலத்தில் முடிவுகளை எடுக்க வேண்டும்.

மலையக மக்களின் எதிர்பார்ப்புகளும் அதன் நியாயங்களும் ஒரே இரவில் தீர்த்து வைக்கக் கூடியவையல்ல. ஆனாலும் ஒவ்வொன்றாக முயன்றால் முடியாததுமல்ல. அத்தகைய முயற்சியை எவ்வித சுய லாபமும் கருதாது செய்யக்கூடிய விசுவாசமானவர் யார் என்பதை இனங்கண்டு அவர்களின் பின்னால் அணி திரளலாம்.

இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி, ஆயுளையும் தோட்டங்களிலேயே அர்ப்பணித்துக்கொண்டிருக்கும்

**ஒவ்வொரு தடவையும், ஜனாதிபதி தேர்தல் வரும்போதும், பாராளுமன்றத் தேர்தல் வரும்போதும் லயன் அறைகள் பற்றிய கவலையையும், அம்மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பற்றியும் வாக்குறுதியளிக்கும் அப்பகுதி அரசியல் தலைமைகளும், தென் இலங்கை அரசியல் தலைமைகளும் குறிப்பிட்ட தேர்தல் முடிந்தவுடன் எல்லாவற்றையும் மறந்து வேறொரு உலகத்தில் வாழ்வது போல் இருந்து விடுகின்றனர்.**

மலையக மக்களை நோக்கிய மேற்படி வேண்டுகோளை விடுக்கின்ற அதேவேளை, அங்கு இருக்கக் கூடிய அரசியல் தலைமைகள் பற்றியும் சில விடயங்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

மத்திய அரசுகளோடு மல்லுக்கு நிற்காவிட்டாலும் அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்றுக்கொண்டு அந்தந்தக் காலப்பகுதியில் இந்த அரசியல் கட்சிகள் செய்த பணிகளை பாராட்டினாலும், உங்கள் பணி இன்னும் அதிகமாகவே அந்த மக்களுக்குத் தேவையாகவுள்ளது. அவர்களின் அபிலாஷைகளுக்கு முன்னால் உங்கள் பணியென்பது யானைப் பசிக்கு சோளப் பொறி போன்றதுதான். இந்த நிலையை உங்களால் மாற்ற முடியாமைக்கு சில காரணங்கள் உண்டு. அதை உங்களின் தவறுகளாகவும் பார்க்க இடமுண்டு.

உறுதியான நிலைப்பாடு இல்லாத மலையகக் கட்சிகள் அடிக்கடி கட்சி தாவி அரசுகளைக் கவிழ்ப்பதால், அரசியல் நண்பர்களை எதிரிகளாக மாற்றிக் கொள்வதோடு சந்தேகக் கண்கொண்டும் பார்க்கின்ற நிலை உருவாகிறது. இதுகூட பின்னாளில் இக் கட்சிகள் முன்னர் துரோகம் செய்த தேசிய தலைமையோடு கூட்டுச் சேருகின்றபோது அல்லது அமைச்சுப் பொறுப்பைப் பெறுகின்றபோது தாக்கத்தைப் ஏற்படுத்துகிறது.

ஆகவே என்னதான் அமைச்சுப் பொறுப்புகளைப் பெற்றுக்

அலசுவது

**- மதியூகி -**

கொண்டாலும், ஒரு குறிப்பிட்ட வட்டத்தை விட அதற்கு அதிகப்படியான முன்னேற்றத்திற்குச் செல்ல முடிவதில்லை. இதன் விளைவாக இக் கட்சிகளை நம்பி வாக்களித்த மக்களுக்கு, இக்கட்சிகளால் எதையும் செய்ய முடிவதில்லை. இதே நிலை தொடர்கதையாக இருந்தபோதும் இந்த அரசியல் கட்சிகள் அதையே செய்கின்றனவென்றால் குறைந்த பட்சம் கட்சிக்கு அல்லது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள், லாபங்கள் என்பன பிரதானமாக இருப்பதால் தான் என்கின்ற கேள்வியும், சந்தேகமும் எழுகிறது.

தேர்தல் 'திருவிழா'க் காலங்களில் கடைவிரித்து வாக்குறுதி வியாபாரம் செய்கின்றவர்களிடம் மக்கள் விலை போவதை விடவும், அந்த மக்களின் அரசியல் தலைமைகள் அதிகமாக விலைக்குப் போய் விடுகின்றன. இத்தகைய ஏமாற்றுத்தனத்தை வெளிக்கொணரவும், தெளிவுபடுத்தவும் இப்போது ஒரு சில அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. ஏற்கனவே பழம் தின்று கொட்டை போட்டவர்களை விஞ்சி புதிய எழுச்சியை முன்னெடுப்பதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்லவென்றாலும் மக்கள் சிந்தித்துச் செயற்படத் தயாரானால் எதுவும் சாத்தியம்தான்.

## அதிரடி அய்யாத்துரை



**ஊரடங்குச்** சட்டம் கேள்விப் பட்டிருப்பியள். வாயடங்குச் சட்டம் கேள்விப் பட்டிருக்கியளோ. கேளுங்கோ சொல்லுறன். உப்பிடி ஒரு புதுச் சட்டம் போட்டிருக்குமாப் போல யாழ்குடா நாட்டில சனம் தங்களுக்குத் தாங்களே போட்டுக் கொண்டு இருக்கினமுங்கோ. பகலெல்லாம் என்னதான் பாடுபட்டு வீட்டுக்கு வந்தாலும் இரவு எட்டு எட்டரைக்குப் பிறகு யாரோடையும் கதைக்கினமில்லையுங்கோ. அதிலையும் பொலிரிக்ஸைப் பத்தியோ பொடியளைப் பத்தியோ யாரும் தப்பித்தவறியும் ஒரு வார்த்தை பேசிட்டால், அதைவிட்டுப் போட்டு வேறு எதையாவது கதைங்யுகோவன் எண்டினம். ஏனுங்கோ எண்டு கேட்டால் கூடவே சேர்ந்து கதைக்கிறவர் எந்தத் தரப்பு ஆள் எண்டது தெரியாதாம். சேர்ந்து கதை கதையெண்டு கதைச்சுப்போட்டுப் போய் போட்டுக் குடுத்துப் போடுவினமாம் எண்டதாலதான் யாரோடையும் யாரும் உதுகளைப் பத்திக் கதைக்கப் பயப்படுகினமாம். உந்தப் புதுப் பயம் எப்பவிருந்து எண்டு தெரியுமோ? உந்த அதிபர்மார் ரெண்டுபேரை ரெண்டெழுத்தார் போட்டுத் தள்ளிச்சினமெல்லோ அதுக்குப் பிறகுதானாம் உப்பிடி சனம் நடுங்கிப்போய் எந்தப் புத்தில எந்தப் பாம்பிருக்குமெண்டு தெரியாம இருக்கினமாம். எப்புடி இருந்த யாழ்ப்பாணச் சமூகம் இப்ப எப்பிடி இருக்கெண்டு பாத்தியளோ. உதுதானுங்கோ எங்கட சுதந்திரம்....

**எலக்ஷன்** நெருங்க நெருங்க, அரிதாரம் பூசிக் கொண்டு வேஷம் கட்டித் திரியிறவைக்கு நெஞ்சிடியாக் கிடக்குதெண்டது பரகசியமான விஷயமுங்கோ. யார் வேஷம் கட்டி என்ன பயன். நடக்கிறதுதான் நடக்கப் போகுதெண்டு தங்கட வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிற சனமும் இருக்கத்தான் செய்யுதுகள். இதுக்கிடையில பச்சைக் கட்சிக்காரர் வாக்குறுதி மேல வாக்குறுதியை வழங்கிக் கொண்டிருக் கினமுங்கோ. அதாகப்பட்டது தங்களின்ர தலைவர் அதிகாரத்துக்கு வந்தால் அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிவர்த்தி செய்யிறதுக்கு உலகப் பொலிஸ்காரர் நாடு தங்களுக்குப் பணம் தருமாமெண்டு! பாத்தியளோ, எங்கட நாட்டில யார் அதிகாரத்துக்கு வர வேணுமெண்டதை யார் யார் தீர்மானிக்கினமெண்டு. சில கட்சிக்காரர் தங்கட மக்களைத்தான் அடகு வச்சிருக்கினமெண்டால் சில பேர் நாட்டையே அடகு வச்சுப்போட்டுத்தானுங்கோ எலக்ஷனில நிக்கினம். பொலிரிக்ஸ் போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் எதையெதை யெல்லாம் எதிர்காலத்தில அடகு வைக்கப் போகினமோ. வெயிட் என்ட் சீ......

**படிச்சவன்** பாட்டைக் கெடுத்தான்; எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் எண்டு சொல்லுவினம். இங்க என்ன நடக்குதெண்டு தெரியுமோ? ஓசியில விசா கேட்டு வாங்கி பொக்கற்றுக்குள்ள வச்சுக் கொண்டு எப்ப யுத்தம் வெடிக்கும். எப்ப ஓடலாமெண்டு சாத்திரம் பாத்துக்கொண்டிருக்கிறவையெல்லாம் இப்பதான் புதுக் கண்டுபிடிப்பொண்டைக் கண்டு பிடிச்சிருக்கினம். அது என்ன தெரியுமோ, தமிழ் மக்களிண்ட போராட்டத்தில இருக்கிற நியாயத்தை சர்வதேச சமூகத்துக்கும் பெரும்பான்மை சமூகத்துக்கும் விளக்க வேணுமெண்டால் உடனடியா ஒரு இங்கிலீஸ் பத்திரிகை ஒண்டை நடத்தப் போகினமாம். அப்புடி ஒரு இங்கிலீஸ் ஊதுகுழல் ஒண்டு இல்லாததால தானாம் இவ்வளவு நாளும் தங்களிண்ட நியாயம் மற்றவைக்குத் தெரியாமப் போட்டுதாம். பதவியெடுத்து ஒண்டரை வருஷமாச்சுது. உருப்படியா உந்தக் கூத்தமைப் புக்காரர் ஒண்டையும் ஏன் செய்யயில்லை யெண்டதுக்கு ஒரு பதிலையும் காணயில்லை. உந்த லட்சணத்தில இங்கிலீஸில பேப்பர் அடிச்சு விநியோகிக்கப் போகினமாம். முதலில உங்கட ஊத்தையை தேச்சுக் கழுவுங்கோவன். பிறகு மத்தவரிண்டையைப் பார்க்கலாமெண்டு வாத்தியார் இங்கிலீஸ" மேல உள்ள கோபத்தில உப்பிடிச் சொல்லுறாருங்கோ....

**'சுத்திச்** சுத்தி சுப்பரின்ர கொல்லைக்குள்ள' எண்ட மாதிரி எதைத் தொட்டாலும் உந்த அதி காரத்துக்கான எலக்ஷனையும் டச் பண்ணுமாப்போல தானே இருக்கு அதொண்டுமில்லையுங்கோ. தமிழ் மக்கள் உந்த எலக்ஷனை பகிஷ்கரிக்க வேணு மெண்டு ரெண்டெழுத்தார் தங்கட மற்ற மற்ற குட்டி அமைப்புகளின்ர பெயராலை சுவரொட்டிகளை குடாநாடு பூராவும் ஒட்டியிருந்திச்சினம். சனம் என்ன செய்யப் போகுதெண்டு எல்லோரும் தங்கட கழுகுக் கண்ணை போஸ்டல் வோட்டிங் அண்டைக்கு உங்கயே திருப்பிக் கண்காணிச்சவை. ஆனால் பாருங்கோ, யானைக்குப் போட்டிச்சினமோ, வெத்திலைக்குப் போட்டிச்சினமோ தெரியாது. எழுபத்தி அஞ்சு சதவீதமான கவர்மெண்ட் ஜொப் காரர் வாக்களிப்பில கலந்து கொண்டிருக் கினம். அப்புடியெண்டால் உந்த பினாமிகளிண்ட விரட்டலுக்கெல்லாம் சனம் பயப்படயில்லையெண்டு தானேங்கோ அர்த்தம். ஓமோ....இல்லையோ.......

**சுனாமி** கூட, தான் வந்துபோன ஒரு வருஷப் பூர்த்தியைக் கொண்டாடப் போகுது. ஆனால் அதாலை பாதிக்கப்பட்ட சனம் அகதி முகாம்களில கிடந்து படாத பாடு படுகுதுகளுங்கோ. ஏன் உதைச் சொல்லுறன் எண்டால், உங்களுக்கே தெரியும் காலநிலை கொஞ்ச நாளாவே அவ்வளவு சரியா இல்லாம ஓஹோ எண்டு மழை பேய் புடிச்ச மாதிரி அடிச்சு ஊத்துது. ஏற்கனவே வீடு, வாசலை விட்டு குடிசைகளுக்கேயும், கொட்டில்களுக்குள்ளேயும் இருந்த சனம் உந்த மழைக்கு என்னங்கோ செய்ய முடியும். உந்த மாதிரி சனம் கஷ்டப்படும் எண்டதாலை முன்னமும் ஒரு தடவை சொன்னனான். மழை காலம் ஆரம்பிக்க முன்னமே உந்த சனத் துக்கு ஒரு வழியைக் காட்டுங்கோ. பிளீஸ் எண்டு யாரும் அக்கறைப்பட்ட மாதிரி தெரியல்லை உருவான பொதுக் கட்டமைப்பையும் சாமி வரம் கொடுத்தும் ஆசாமி தடுத்த மாதிரியாக்கிப் போட்டினம். அவரவரின்ர அந்தஸ்து இழுபறியில பாவம் உந்தச் சனங்கள் தானுங்கோ சரியா கஷ்டப்படுகினம். போன சுனாமி தன்ர முதலாவது பேத்டேயிக்கு கேக் வெட்டினாலும் ஒண்டும் நடக் காது போல இருக்கே எண்டு குருவியார் வாய் புலம்பிக் கொண்டு திரியுதுங்கோ.

**தொலைக்காட்சி** விவாதத்திலை கலந்து கொண்டு வில்லங்கம் விக்கிறவையை உங் களுக்கும் தெரிஞ்சிருக்கும். அப்புடி ஒரு விவாதத் தில சம்பந்தமானவர் தங்கட ஐக்கியத்தைப் பத்தி தன்னால எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குப் புழுகிப் போட்டு முஸ்லிம் கட்சிகளும் ஏன் உந்த மாதிரி ஐக்கியப்படக் கூடாது எண்டு தெனா வெட்டாகக் கேட்டதுக்கு, மூஞ்சிசையில அப்புமாப் போல பதிலைச் சொன்னார் பாருங்கோ இன்ரஸ்டா கதை சொல்லிற மியூசிக் தீன். அது என்ன பதில் தெரியுமோ. நாங்களும் ஐக்கியப்படுவம். எப்ப தெரியுமோ. எங்கட புடரியிலையும் யாராவது துவக்கை வச்சு அழுத்திப் புடிச்சிச்சினமெண்டால், ரோட்டில போறது வாரதையெல்லாம் கூட்டிப் பெருக்கி ஐக்கியப்படுவம் எண்டு சொல்லவும், தாங்கள் எப்புடி ஐக்கியப் பட்டிச்சினம் எண்ட சேதி ஊர் நாறிப்போய்த்தான் கிடக்கெண்டு, சம்பந்தமானவர் புரிஞ்சு கொண்டிட்டாரெண்டதை, வழிஞ்ச அசடு தானுங்கோ அம்பலப்படுத்திச்சுது. தெரியாம வாயைக் கொடுத்துப் போட்டாருங்கோ.....

# முஸ்லிம் காங்கிரஸ் அடகு வைக்கப்பட்டுவிட்டதா?




**மீண்டும்** முஸ்லிம் சமுதாயத்தை அடகு வைத்து யூ.என்.பி. கட்சியோடு மிக மிக இரகசியமான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது முஸ்லிம் காங்கிரஸ்.

இந்த உடன்படிக்கையின் மூலம் முஸ்லிம் சமுதாயத்திற்கு என்ன நன்மைகள் கிடைக்குமென்பது பற்றியோ அல்லது அந்த ஒப்பந்தத்தில் என்ன கோரிக்கைகள் அடங்கியுள்ளன என்பது பற்றியோ முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மூச்சு விடுவதில்லை.

கோரிக்கைகளை முன் வைத்து ஐ.தே.க. வுடன் காலத்துக்குக் காலம் உடன்படிக்கை செய்து கொள்வது ஹக்கீமின் பொழுது போக்கு. 2000ஆம் ஆண்டும், 2004ஆம் ஆண்டும், இப்பொழுது 2005ஆம் ஆண்டும் ஹக்கீம் யூ.என்.பி.யுடன் கோரிக்கைகளை முன்வைத்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருப்பதாக மேடைக்கு மேடை தொண்டை கிழியக் கூறி வந்திருக்கின்றார். ஆனால் இந்த ஒப்பந்தங்களின் மூலமாக முஸ்லிம் சமூகம் நன்மையடையக் கூடிய எந்தக் கோரிக்கைகளை அவர் முன்வைத்தார் என்பது இதுவரை எவருக்குமே தெரியாத பரம இரகசியம்.

இதுவரை காலமும் இவர் முஸ்லிம் சமூகத்தை ஐ.தே.க.வுக்கு அடகு வைத்துச் செய்து கொண்ட ஒப்பந்தங்களால் முஸ்லிம்



சமூகத்திற்கு எந்த நன்மையும் கிட்டவில்லை என்பது கடந்த கால வரலாறு.

மாறாக முஸ்லிம்கள் மீதான படுகொலைகள், கடத்தல், கப்பம் பறிப்பு, வீடுகள், கடைகள், இருப்பிடங்கள் அழிப்பு இவைகள் ஏற்பட்டதே தவிர வேறெந்த நன்மையும் கிட்டவில்லை.

குறைந்த பட்சம் முஸ்லிம்களின் பிரச்சினைகளைக் கதைப்பதற்கான ஒரு பிரதிநிதியாக் கூட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வைக்க ரணில் விக்கிரமசிங்க அரசினால் முடியவில்லை.

இந்த இலட்சணத்தில் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஜனாதிபதியாக்குவதற்காக அவரோடு மிகமிக இரகசியமான ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு களமிறங்கியிருக்கின்றார் ஹக்கீம்.

முஸ்லிம் காங்கிரஸ் எப்போதோ யூ.என்.பி.யால் விலைக்கு வாங்கப்பட்டு விட்டது என்பது நாடறிந்த உண்மை. இவர் ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கூறுவதெல்லாம் வெறும் போலிக் கதைகள்.

மூன்றாவது பலம் பொருந்திய மக்கள் சக்தியாகவும், நாட்டில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் இருந்த முஸ்லிம் காங்கிரஸை, இப்படியே விட்டு விடக்கூடாது எனத் திட்டம் தீட்டி துண்டு துண்டாக உடைத்ததும் இந்த யூ.என்.பி. கட்சிக்காரர்கள்தான்.

நீண்ட காலம் ஆட்சி செய்த யூ.என்.பி. அரசு முஸ்லிம்களுக்கு என்ன



செய்தது என்ற வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் பல உண்மைகள் தெரிய வரும்.

மூன்றாந் தரப்பாக முஸ்லிம்களைச் சமாதானப்பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொள்ள முடியாது எனச் சொன்ன பொழுது, நாடளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சேர்த்து ஒன்றியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான கருத்து வலுப்பெற்றது. எனினும் அந்த யோசனையை அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க முற்றாக மறுத்ததோடு அப்படி எதனையும் செய்ய வேண்டாமென்று தடைகளை ஏற்படுத்தியதாக யூ.என்.பி.யின் கல்முனை பா.உ. மயோன் முஸ்தபா பகிரங்கமாகவே வானொலி மூலம் பல தடவைகள் கூறியிருக்கின்றார். இதன்மூலம் முஸ்லிம்கள் ஓரணியில் திரள்வதை யூ.என்.பி.யும் ரணில் விக்கிரமசிங்கவும் விரும்பவில்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது.

சுதந்திரத்திற்குப் பின்னரான ஆட்சியில் யூ.என்.பி. அதிகாரத்தில் இருந்த போதெல்லாம் முஸ்லிம்கள் உயிரழிவுகளையும் பொருளாதார இழப்புகளையும் சந்தித்து வந்திருக்கின்றார்கள்.

யூ.என்.பி.யின் பண முதலைகளும், அதன் மேற்கு நாட்டு ஸியோனிஸ ஏஜென்ஸிகளும் முஸ்லிம் காங்கிரஸை அடிமைப்படுத்தி தங்களது சப்பாத்துக்களின் கீழ் நசுக்கிப் பிடித்துள்ளார்கள். அதனால்தான் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தையுமே இன்று முஸ்லிம் காங்கிரஸ் யூ.என்.பி.யிடம் அடகு வைத்து விட்டு அடங்கி ஒடுங்கிப் போய் விட்டார்கள்.

ஹக்கீம் என்றாலென்ன? ஹாபிஸ் நஸீர் என்றாலென்ன ஹிஸ்புல்லாஹ் என்றாலென்ன? எல்லோருமே இன்று முஸ்லிம் சமூகத்தை அடகு வைத்து விட்டு அடிமைச் சாசனம் எழுதி விட்டவர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தால் கிழக்கு முஸ்லிம்கள் 'சொப்பிங்' பையோடு மாத்திரம் தமது வீடு வாசல்களையும் உடைமைகளையும் கைவிட்டு வெளியேற வேண்டி வரும். யூ.என்.பி. ஆட்சியதிகாரத்திற்கு வந்தால் ஒரு சில மணிநேரத்தில் ஒரு இலட்சம் முஸ்லிம்கள் வடபகுதியிலிருந்து இரவோடிரவாக வெளியேற்றப்பட்டது போன்ற நிலை உருவாகும் என எதிர்வு கூறிச் சென்றவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள்.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம் பார்க்க....)

## விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk

## அகில இலங்கை ரீதியில் முதலாவது இடம்



மன்னார் அஞ்சல் அலுவலகத்தில் தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. எல்.எல். அந்தோனிப்பிள்ளை இவ்வாண்டு உலக அஞ்சல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில் சிறந்த ஊழியராக அகில இலங்கை ரீதியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு 9.10.2005 அன்று கண்டியில் நடைபெற்ற உலக அஞ்சல் தின விழாவில் தொலைத்தொடர்புகள் அமைச்சர் தி.மு. ஜெயரத்தன அவர்களால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## நவசித்தர் மாந்தீரீகம்

ஓம் குருவே நம : கர்மவினைகளினால் தீயசக்திகளினால் ஏறபட்ட தீராத உடல் நோய் குடும்பப் பிரச்சினை, காதல் விவகாரம், வியாபாரம், கல்வி, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பயணம், பிரிந்தவர் ஒன்றுசேர வேண்டாதவரை விலக்க இன்னும் அனேக காரியங்களுக்கு மஹாசக்தி உபாசகர் மட்டக்களப்பு பரம்பரை சித்த ஆயுள்வேத மாந்திரீக மருத்துவர்.

Dr. T. Murukuppillai (S.A.M.P), Main Street, Pandiruppu - 01, Kalmunai. (Sri Lanka) Tel : 067- 2224077, வெளிநாடு 0094672224077







## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

## இன்னொருவர் பார்வையில்

**"உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்காகவா புலிகள் மக்களுக்குப் பயிற்சியளிக்கின்றனர்?" என்ற தலைப்பில் அரசியல் விமர்சகர் சம்பிக்க லியனாராச்சி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இக் கட்டுரை கடந்த இரண்டாம் திகதி 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. வடக்கு, கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக படையினரால் ஏற்படுத்தப்பட்டவை. இந்த வலயங்களால் பாதிக்கப்படுபவர்கள் மக்களேயொழிய, புலிகளல்ல. யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படும். மக்களும் நிம்மதியாக வாழுவார்களென்பதை புலிகள் புரிந்து கொள்வார்களா?**

# வடபகுதி மக்களுக்குப் புலிகள் ஆயுதப் பயிற்சி அளிப்பது ஏன்?

**வடக்கிலுள்ள** குடிமக்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கப் புலிகள் எடுத்துவரும் புதிய முயற்சி தகவல்கள் குறித்து புலிகளுக்குச் சார்பான ஊடகங்களில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் மயிலிட்டியென்ற இடத்திலுள்ள குடிமக்களைக் கொண்ட குழுவொன்றுக்கு பயிற்சியளிக்கப்பட்டதென்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் அமைப்பதற்காக காணிகளும் சொத்துக்களும் கையேற்கப்பட்டதால் தான் மக்கள் இடம்பெயர்ந்தனர் இம்மக்களுக்கே இப் பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயங்களை நிறுவுவதற்காகக் கையேற்கப்பட்ட காணிகளை மீளப் பெறுவதற்காகப் படையினர் மீது குடிமக்களின் தாக்குதல் ஒன்றினை நடத்துவதற்குப் புலிகள் திட்டமிடுகின்றனரா? இல்லையென்றால் நலன்புரி முகாம்களிலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் அவதியுறும் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதன் மூலம் வேறெந்த நோக்கத்தை அடையப் போகிறார்கள்?

யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் அதிகரித்துவரும் நேரத்தில், குடிமக்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் செய்திகள் வெளிவந்துள்ளன. கிரனைட் தாக்குதல் ஒன்றின் மூலம் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டதோடு மேலும் மூவர் காயங்களுக்கிலக்காகியிருப்பதாக அண்மையில் வெளிவந்த செய்தி, பந்தோபஸ்து படையினர் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பின்னரும் இராணுவச் சோதனை சாவடிகள் மீதும் பொலிஸ்காரர்கள் மீதும் யாழ்ப்பாணத்தில் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்களின் ஒன்றியம் இந்த மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குதற்கான யோசனை ஒன்று இவ்வருடம் மே மாதம் முன்வைக்கப்பட்டபோது அதனை நிராகரித்தது. இடம் பெயர்ந்த விவசாயி ஒருவர் தாக்கல் செய்த வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் விசாரனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது மாற்றுக் காணிகளை இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்க முடியுமா? என்று நீதிமன்றம் யாழ்.அரசாங்க அதிபரைக் கேட்டபோதே இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டிலுள்ள பெரும்பாலான காணிகள் விவசாயச் செய்கைக்கு உகந்தவை அல்ல என்ற ஒரு வாதத்தையும் இந்த ஒன்றியம் முன்வைத்தது. இந்த மக்கள் தமக்குச் சொந்தமான காணிகளில் குடியேறுவார்களே தவிர, வேறு காணிகளை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று கூறப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை தமிழாசிரியர் சங்கம் சந்தித்துப் பேசியபோது, உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றிவிடுமாறு கோரிக்கை விடுத்தது. அப்போது ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தார். இடம் பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டால் புலிகள் அப்பகுதிகளுக்குள் ஊடுருவிச் செல்லக்கூடிய பாரிய ஆபத்தொன்றுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தாம் பூரணமாகவே புரிந்து கொள்வதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு புலிகளின் ஊடுருவல் நடவடிக்கைக்குப் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்ற போதிலும் அதனைத் தடுப்பதற்கான துணிவு மக்களுக்கு இருக்கமாட்டாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கிட்டத்தட்ட இருபதாயிரம் பேர் தமது குடும்பங்களுடன் இடம் பெயர்ந்துள்ளனரென்று இராணுவ் வட்டாரங்கள் கூறுகின்றன. இவர்களில் பெரும்பாலானோருக்கு வன்னியில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கலாமென்று இராணுவத்தினர் அச்சம் தெரிவிக்கின்றனர். யுத்த காலத்தின்போது வன்னியில் அவர்கள் இருந்ததால் இப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கலாமென்று இராணுவத் தரப்பு கூறுகிறது. யுத்தம் வெடிக்க நேர்ந்தால், யாழ்.குடா நாட்டில் படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட குடிப்படையொன்று புலிகளுக்கிருப்பதாகப் படையினர் கூறுகின்றனர். முன்னாள் யாழ்.பொலிஸ் சுப்பிரிண்டன் சார்ள்ஸ் விஜயவர்த்தன புலிகளின் பிராந்திய புலி உறுப்பினர் ஒருவரின் தலைமையின் கீழ் கடத்திக் கொல்லப்பட்டபோது இந்தக் குடிப்படையின் சக்தி வெளிப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பான பிரச்சினை மீண்டும் எழுந்தபோது 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் போது எழுப்பிய அதே

> **உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே இன்னமும் வெற்றுக் காணிகளாகவும் வீடுகளாகவும் இருக்கும் இடங்களில் அங்கிருந்து இடம் பெயர்ந்த 60,000 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதில் புலிகளும் புலிச்சார்பு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் ஏன் அக்கறை செலுத்தவில்லை என்று படையினர் கேள்வி எழுப்பி இருந்தனர். ஆனால் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 10,000 வீடுகள் குறித்து மட்டுமே புலிகள் அக்கறை செலுத்துவதேன்? உண்மையிலேயே புலிகளும் புலிச்சார்பு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் மக்களின் நலன் குறித்துத்தான் அக்கறைச் செலுத்துகிறார்கள் என்றால், இடம்பெயர்ந்த சகல மக்களிலும் அக்கறைச் செலுத்த வேண்டும்.**

கேள்வியையே படையினர் மீண்டும் எழுப்புகின்றனர். அதாவது உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே இன்னமும் வெற்றுக் காணிகளாகவும் வீடுகளாகவும் இருக்கும் இடங்களில் அங்கிருந்து இடம் பெயர்ந்த 60,000 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதில் புலிகளும் புலிச்சார்பு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் ஏன் அக்கறை செலுத்தவில்லை என்று படையினர் கேள்வி எழுப்பி இருந்தனர். ஆனால் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 10,000 வீடுகள் குறித்து மட்டுமே புலிகள் அக்கறை செலுத்துவதேன்? உண்மையிலேயே புலிகளும் புலிச்சார்பு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் மக்களின் நலன் குறித்துத்தான் அக்கறைச் செலுத்துகிறார்கள் என்றால், இடம்பெயர்ந்த சகல மக்களிலும் அக்கறைச் செலுத்த வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ள வீடுகளைக் கைவிடுமாறு கோருவதானது புலிகளுக்கு இராணுவ நலன் சார்ந்த நிகழ்ச்சி நிரலொன்று உள்ளதா என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது என்கின்றனர் இராணுவ அதிகாரிகள். இதற்கிடையில் பிரதான விநியோகப் பாதையை அண்டிய பகுதிகளில் மாவீரர் குடும்பங்களைக் குடியமர்த்த புலிகள் எடுக்கும் முயற்சி குறித்தும் படையினர் எச்சரிக்கை தெரிவிக்கின்றனர். புலிகளிடையே பெருமளவு தங்கியிருக்கும். இந்தக் குடும்பங்கள் கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ஏனைய அழிவுத் தாக்குதல்களிலும் பயன்படுத்தப்படலாமென்று படையினர் அச்சம் தெரிவிக்கின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் வடக்கு, கிழக்கிலிருந்து பெருந்தொகையாக மாவீரர் குடும்பங்கள் ஹபரணை - திருகோணமலை வீதியோரங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனரென்றும் படைத் தரப்பு கூறுகிறது. காத்தான்குடிக்கு வடக்கேயும் மட்டக்களப்புக்கு தெற்கேயும் பொன்னாச்சிமுனை என்ற இடத்திலும், எவ்வித காரணங்களுமின்றி கரடியனாற்றைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்கள் சில குடியேற்றப்பட்டிருக்கின்றனவென்றும் படைத்தரப்பு கூறுகிறது.

கடந்த கால அனுபவங்களைக் கொண்டே தாக்குதல் தேவைகளுக்காகவே மக்களை புலிகள் திரட்டுகின்றனர் என்ற அச்சம் படையினருக்கு எழுந்துள்ளது. தாக்குதல் நோக்கங்களுக்காகக் குடிப்படையினரை புலிகள் திரட்டும் வேலைகள் 1990களின் ஆரம்ப வருடங்ளில் மேற்கொள்ளப்பட்டன. வெலிஓயாவுக்கு வடக்கேயுள்ள 14 தள பயிற்சி முகாமில் பாரிய இராணுவப் பயிற்சிகள் குடிபடையினருக்கு வழங்கப்பட்டன.

தாக்குதல் தற்காப்பு பயிற்சிகள் மட்டுமல்ல, வேறு பல பயிற்சிகளும் இங்கு வழங்கப்பட்டன. தகவல்களைத் திரட்டுதல், தாக்குதல் நடவடிக்கை பற்றி வேவு பார்த்தல், விமானம் மற்றும் கப்பல்களின் நடமாட்டம் பற்றி தகவலறிதல் போன்ற வேலைகளில் கிராமவாசிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டன. இத்தகைய பணிகளைச் சரியாகச் செய்யாத குடிப்படையிடமிருந்து 500 ரூபா குற்றம் பணம் அறவிடப்பட்டதாக அக்காலத்தில் கிழக்கில் பணியாற்றிய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு கப்பப் பணம் செலுத்த முடியாதவர்களுக்கு பதுங்குக் குழிகளைத் தோண்டும் பாரிய வேலைகள் வழங்கப்பட்டன.

யுத்த காலங்களில் வடக்கிலும் கிழக்கிலும் இறந்த படையினரின் பொருட்களை எடுத்து வருவதற்காக தாக்குதல் ஒன்றிற்குப் பின்னர் உடனடியாகவே சம்பவ இடத்துக்கு குடிப்படையினர் அனுப்பப்பட்டு வந்தனர். ஆயுதங்கள், ரவைகள், பெல்ட்டுகள், சப்பாத்துக்கள் சில வேளைகளில் சடலங்களைக் கொண்டு வருவதற்கும் இந்த மக்கள் பயன்படுத்தப்பட்டனர். இராணுவ முகாமொன்றைப் புலிகள் கைப்பற்றியதும் கட்டில்கள், அடுப்படி உபகரணங்கள் ஆகிய பொருட்களை எடுத்து வருவதற்காக புலிகள் இவர்களைப் பயன்படுத்தி வந்தனர். 1990ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலப்பகுதிகளின் போது திருகோணமலைக்கு தெற்கேயுள்ள கண்டல்குளம் என்ற இடத்தில் குடிமக்கள் முகாம் ஒன்றினை மாத்தயா நடத்தி வந்தார். 1994ஆம் ஆண்டு மாத்தயாவை பிரபாகரன் கொன்றமை குறிப்பிடத்தக்கது. அப்போது எல்லைக் காவலர்களாக நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு அங்கு பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் நூற்றுக் கணக்கானவர்கள் புலிகளுக்காக விவசாயச் செய்கை மற்றும் மேசன், தச்சு வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். அண்மைய வரலாற்றில் 'யுத்த களங்களின் தாய்' என வர்ணிக்கப்பட்ட ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது தாக்குதல்களுக்காகவும் மக்களைப் புலிகள் பெருமளவு பயன்படுத்தினர் என்ற உண்மை முதல் தடவையாக அம்பலத்துக்கு வந்தது. இதற்குப் பின்னர் 2001ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது பெருந்தொகை மக்களைப் புலிகள் பயன்படுத்தியமை தெரியவந்தது. யாழ்ப்பாணத்து வெளிப்புறப் பகுதிகளில் அப்போது இவ்வாறு பொது மக்கள் பயன்படுத்தப்பட்டனர். மோதல்களின் போது இறந்தவர்களுக்கு மத்தியில் 60 வயதான முதியவர்களின் சடலங்களும் காணப்பட்டனவென்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். குடிமக்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்க புலிகள் இயக்கம் எடுத்திருக்கும் முடிவு, வட - கிழக்கிலுள்ள ஆண்கள், பெண்களின் துயரம் இன்னும் தொடரப் போகிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. யுத்தத்தின் கொடூரங்களுக்கு முகம் கொடுத்த அந்த மக்களை யுத்த நிறுத்த காலத்திலும் தமது அரசியல் இராணுவ நலன்களுக்கு புலிகள் பயன்படுத்தப்போவது வேதனைக்குரியது. இந்த விடயத்தில் அப்பாவி மக்களுக்கு மாற்றுவழி இருக்கப் போவதில்லைப் போல் தெரிகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஈடாடிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இந்நிலையில் இடம்பெயர்ந்தோரின் பிரச்சினை வெறும் அரசியல் சுலோகமாகவே பயன்படுத்தப்படுகிறது. மோதலில் சம்பந்தப்பட்டிருக்கும் இரு தரப்புகளில் எந்தத் தரப்புமே மக்களின் நலனில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

நன்றி : டெய்லி மிரர்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!


## —வாழ்க்கைச் சரிதம்—

பாட்டின் பல்லவி இதுதான்.

*‘ஆண்டவன் கட்டளை முன்னாலே - உன் அரச கட்டளை என்னாகும்?’*

அரச கட்டளை எம்.ஜி.ஆர். நடிக்கும் படம்; ஆண்டவனின் கட்டளை - சிவாஜி நடித்த படம்.

மேற்கண்ட விஷயம் எம்.ஜி.ஆர். கவனத்திற்கு வந்தவுடன், சிவாஜி படத்தோடு அவர் படத்தை ஒப்பிட்டு அந்தப்



பல்லவியை எழுதி, நான் அவரை அவமானப்படுத்தி விட்டதாக என் மேல் குற்றம் சாட்டிவிட்டார்.

“அண்ணே! இப்படி ஒரு அர்த்தம் இந்தப் பல்லவில தொனிக்கும்னு நான் கனவுல கூட எண்ணல்லே... என்னுடைய நாவும், பேனாவும் எந்தக் காலத்துலயும் உங்க கௌரவத்தத் தாழ்த்திப் பேசாது; எழுதாது. படத்தின் பெயர் ‘அரச கட்டளை’ன்னு எழுதினேன். தெய்வத்தின் கட்டளைன்னு போட்டா. பாட்டுக்கு அழகிருக்காதுன்னுதான் அப்படிப் போட்டேன் சத்தியமா, ‘ஆண்டவன் கட்டளை’ சிவாஜி நடிச்ச படம்னு என் நெனப்புக்கு வல்லே”

‘இப்படி ஒருநீண்ட சமாதானத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆர். அமைதியானார்.

அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்களிடம் மிகச் சிறந்த மனிதனுக்குரிய பண்புகள் பரவலாக இருந்தபோதிலும், சில நேரங்களில் நம்மைச் ‘சட்டென்று தவறுதலாகப் புரிந்து கொண்டுவிடுவார். அதன் காரணமாகவே, அவரது நட்பு மிக மிக மதிப்பற்றது என்று கருதி, நான் அதை இழக்க விரும்பாமலும் அதே நேரத்தில் அவரிடம் என் உள்ளத்தில் உள்ளதை மறைக்காமலும் அவரது முகக்குறிப்பையும் மனக் குறிப்பையும் ஒருசேர அறிந்து உணர்ந்து பழகி வந்ததால் தான், எனக்கும் அவருக்குமிடையே இருபத்தைந்து ஆண்டுகால நட்பு, ஒரு சிறிதளவு பள்ளமோ விரிசலோ இல்லாத அவரது இறுதிக்காலம் வரை நீடித்து நிலைத்திருந்தது.

அவருடைய நட்பை நான் இழக்கலாகாது என்று பேரறிஞர் அண்ணா எனக்கு உபதேசித்ததுண்டு.

திராவிட முன்னேற்றக்கழகம் அரசு கட்டிலில் அமர்ந்த பிறகு, முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும் அவரது அமைச்சரவையில் பங்கு பற்றிய பிற அமைச்சர்களுக்கும் - கோடம்பாக்கம் விஜயா கார்டனில். என் நெருங்கிய நண்பர் திரு.கே.ஆர். பாலன், ஒரு விருந்து கொடுத்தார். அந்த விருந்திற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

இன்றைய ‘அரவிந்த் ஆடியோ’ எனும் மிகச்சிறந்த ஒலிப்பதிவுக்கூடத்தின் அதிபராக இருக்கும் திரு.கே. ஆர். பாலன் அவர்கள், என் முப்பதாண்டு கால நண்பர். நண்பர் என்று சொல்வதைவிட, என் உடன்பிறவாச் சகோதரர் என்று சொல்லுவதுதான் சரியானதாகும்.

பாலன் அவர்கள், ‘தென்றல் திரை’ என்னும் ஏட்டை நடத்தியவர். எம்.ஜி.ஆரை வைத்துப் படம் எடுத்தவர். அந்நாளில் எம்.ஜி.ஆர்., கலைஞர் இஆகியோருக்கு மிகமிக நெருக்கமானவராக இருந்தவர். சுமார், பதினைந்து தமிழ்ப் படங்களும், நாலைந்து கன்னடப் படங்களும் தயாரித்தளித்தவர். அவரது அனைத்துப் படங்களுங்கும் நான்தான் பாடல்கள் எழுதியிருக்கிறேன். இதில் வேடிக்கையென்னவென்றால், கவியரசர் கண்ணதாசன்தான் என்னிலும் அதிகமாக அவருக்கு வேண்டப்பட்டவர். கவிஞருடைய மூன்றாவது திருமணமே, பாலன் அவர்களின் தலைமையில் தான் நடந்தது.

அரசியல் பிரமுகர்கள் அனைவருமே, பாலனின் அன்புக்குப் பாத்திரமானவர்கள்.


அந்த அளவிற்கு, வசதியும் வெகுஜன செல்வாக்கும் அமைந்திருந்த பாலன், நான் உடுக்கை இழந்தபோதெல்லாம் உதவிய கையாக இருந்தவர்.

(தொடரும்.......)



---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**அதாவது** அதன் போதைக்கு ஆட்பட்டவர்களை அவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றி என்ன கேள்வி கேட்டாலும் பளிச்சென்று அவர்கள் பதில் சொல்லி விடுவார்கள். அதை யுவனா டேப்பில் பதிவு செய்து கொண்டு விடுவாள். அவர்கள் சுயநினைவு அடையும் போது போதையில் பேசிய எதுவும் அவர்களுடைய நினைவுக்கு வராது. அவளோடு மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கியது மட்டும்தான் அவர்களுடைய நினைவில் இருக்கும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள உமேரா மையத்திலிருந்து அணு இரகசியங்கள் அனைத்தையும் அறிந்து தன்னுடைய நாட்டுக்கு யுவனா அனுப்பி வைப்பாள். அந்த நிலையத்தில் வேலை செய்கின்ற ஆராய்ச்சியாளர்கள் பலரையும் அவள் நட்பாக்கி வைத்திருந்தாள்.

காலப்போக்கில் அவளது நடத்தையில் அவுஸ்திரேலிய உளவுத் துறையினருக்குச் சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது. அவளோடு நட்புக் கொண்டிருந்த பலரையும் விசாரிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அனைவரும் ரீட்டாவுடன் பொழுது போக்கிற்காக மட்டுமே தொடர்பு வைத்திருந்ததாகவும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் விவகாரம் பற்றியோ தங்களின் அலுவலக இரகசியங்களைப் பற்றியோ அவள் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே அவர்கள் அப்படித்தான் நம்பினார்கள்.

அவுஸ்திரேலிய உளவுத் துறையினருக்கு ரீட்டா மீது சந்தேகம் தோன்றிவிட்டது எனத் தெரிந்தவுடன் உமேரா நிலைய அலுவலர்கள் எவருடனும் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டாம் என ரஷ்யர்கள் அவளை உஷார்ப்படுத்தினார்கள். உடனே அவளை ரஷ்யாவுக்கு அழைத்துக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு அழைத்துக் கொண்டால் சந்தேகமேற்படும் என்று எண்ணி பேசாமல் இருந்துவிட்டார்கள்.

அவுஸ்திரேலிய உளவுத் துறையினர் எவ்வளவு முயன்றும் ரீட்டா உளவு வேலை பார்ப்பதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. ஆனாலும் அவளைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருந்தார்கள்.

கடைசியாக ரஷ்யா அவளை அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியே கொண்டு போக முடிவு செய்தது. வெளிநாட்டு சர்க்கஸ் கம்பெனிகள் பல அவளை ஒப்பந்தம் செய்ய முன்வந்திருப்பதாகக் கூறி அவள் பல கடிதங்களைக் காட்டினாள். அவை போலிக் கடிதங்களாகவும் இருக்கவில்லை. ஆகவே 1961இல் அவள் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியேறிய போது அந்த நாட்டு அதிகாரிகளும் அதைக் கண்டுகொள்ளாத மாதிரி இருந்து விட்டார்கள்.

ரீட்டா என்கிற பெயரில் நடமாடிய யுவனா அவுஸ்திரேலியாவில் தங்கி இருந்த போது உமேரா ஏவுகணைத் தளம், அணு ஆயுதப் பரிசோதனை நிலையம் ஆகியவை பற்றி விலைமதிப்பற்ற பல தகவல்களை ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்தாள். அவுஸ்திரேலியாவை விட்டுச் சென்ற பிறகு அவள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கூட சிறிது காலம் வசித்தாள். அதற்குப் பிறகு அவள் என்ன ஆனாள் என்று தெரியவில்லை. வேறு பெயரில் வேறு சில நாடுகளில் அவள் உளவு வேலை பார்த்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(தொடரும்.......)


(நன்றி : நர்மதா)

---

# இறக்குமதி செய்யப்படும் உடல் விற்பனையாளர்கள்

இலங்கையில் இன்று விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற வெளிநாட்டுப் பெண்களிடையே மிக அதிகமானவர்கள் சீனா, தாய்லாந்து, ரஷ்யா, உக்ரைன், இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இதில் ஆகக் கூடுதலானவர்கள் சீனா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் உல்லாசப் பிரயாணிகளாக வந்தவர்கள். மூன்று, நான்கு மாதங்களுக்குரிய உல்லாசப் பிரயாண விசாவைப் பெற்றுக் கொண்டு விபசார நடவடிக்கைகளில்



கைது செய்யப்பட்ட தாய்லாந்து யுவதிகள்

ஈடுபடுகின்ற இவர்கள், தங்களது விசா காலம் முடிவடைந்ததன் பின்னரும் சட்டவிரோதமான முறையில் தங்கி இருந்து தங்களது தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான வெளிநாட்டு பாலியல் தொடர்பாளிகளது கேந்திர நிலையமாக கொழும்பு நகரம் அமைந்துள்ளது. இவர்கள் கொழும்பில் தங்களது தொழிலை நடத்தி வருகின்ற இடங்களில் பொலிஸாரினால் இனங்காணப்பட்டுள்ளதுடன், மசாஜ் நிலையங்கள், ஒரு சில அக்குபஞ்சர் நிலையங்கள், வெளிநாட்டு உல்லாச விடுதிகள்,ஹோட்டல்கள், கெஸினோ சூதாட்ட விடுதிகள் கெரோக்கே மற்றும் காபரே விடுதிகள் என்பன பிரதான இடங்களாகும். இதைத் தவிர முதலீட்டுச் சபையின் அனுமதியைப் பெற்ற வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதாகக் கூறி ஓரிடத்தில் தங்கியவாறு இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களும் உள்ளனர். இவ்வாறானவர்கள் அண்மைக்காலமாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இவர்களில் பலர் இன்று நடமாடும் தொழிலைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அதாவது வாகனங்களில் இருந்தவாறே தொழிலை நடாத்தி வருகின்றனர். இதற்காக இவர்கள் கையடக்கத் தொலைப்பேசிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மைக் காலமாக பொலிஸார் கொழும்பில் மேற்கொண்டு வருகின்ற சுற்றி வளைப்புகள் காரணமாக இவர்கள் இப் புதிய வழிமுறையைக் கையாளுகின்றனர்.

கொழும்பில் சீன மருத்துவமனைகள் மற்றும் மசாஜ் சென்டர்கள் என்ற பெயர்களில் சுமார் 200க்கும் மேற்பட்ட பாலியல் விற்பனை நிலையங்கள் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் அண்மைக் காலமாக இருபது பாலியல் தொடர்பு நிலையங்களைச் சுற்றி வளைத்து, அவற்றில் இருந்து 48 பெண்களைக் கைது செய்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவர்கள் சீன நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

கொழும்பைத் தவிர்த்து கூடிய, குறைந்த அளவுகளில் ஏனைய பகுதிகளிலும் வெளிநாட்டு பாலியல் தொடர்பாளிகள் இருந்து வருவதுடன் தென்பகுதியில் கரையோரப் பகுதிகள் மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்கள் இதில் பிரதானமானவையாகும்.

தென் பகுதிக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளினதும், இரத்தினபுரி பகுதியில் உள்ள மாணிக்கக்கல், வர்த்தகர்களினதும் வசதிகளுக்காக வெளிநாட்டுப் பாலியல் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இரத்தினபுரி பகுதியில் தாய்லாந்து யுவதிகளே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு யுவதிகளில் அதிகமானவர்கள் 18 வயதுக்கும் சம வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். இவர்கள் தனித்து இத்தொழிலில் ஈடுபடுவதில்லை. இவர்களை வழிநடத்துகின்ற வகையில் உள்நாட்டுக் குழுக்களும் வெளிநாட்டுக் குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன.

இப் பெண்களுக்காக 5,000 ரூபா முதல் 20,000 ரூபாவரை அறவிடப்படுகின்றது. இடம், யுவதிகளின் வயது எல்லைகளைப் பொறுத்து கட்டணங்கள் வித்தியாசப்படுகின்றன. அறவிடப்படுகின்ற பணத்தில் பெருந்தொகைப் பணம் இப் பெண்களை வழிநடாத்துகின்றவர்களுக்கே போய்ச் சேருவதுடன் இதில் இருந்து ஒரு சிறுதொகை அப் பெண்களுக்குக் கிடைக்கின்றன.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்துள்ள பகுதிகளில் உள்ள உல்லாச ஹோட்டல்களில் இவ்வாறான வியாபார நடவடிக்கைகள் இல்லை எனத் தெரிய வந்துள்ள போதும் ஒரு சிலர் இவ்வாறான பெண்களை இந்த இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகின்றது. வெளிநாட்டுப் பெண்களுடன் பாலியல் ரீதியிலான தொடர்புகளை மேற்கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் தனவந்தர்களாகவும் வர்த்தகர்களாகவும் இருக்கின்றனர்.

இப்பாலியல் தொழிலை முன்னடத்திச் செல்வதில் ஒருசில அரசியல்வாதிகளினதும் பொலிஸ் உயரதிகாரிகளினதும் மறைமுக ஒத்துழைப்புகள் இல்லாமலுமில்லை. இதனால் இந் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதில் தடைகள் ஏற்படுவதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

அண்மைக் காலமாக கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண்களில் ஒரு சிலர் சிறைத் தண்டனை பெற்றுள்ளதுடன், பலர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு நாடு கடத்தப்படுகின்றவர்கள் மீண்டும் திருட்டுத்தனமாக இலங்கைக்குள் பிரவேசித்து மீண்டும் இத்தொழிலிலேயே ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

வெளிநாட்டு யுவதிகளை ஈடுபடுத்தி மேற்கொண்டு வருகின்ற இத்தொழிலுக்குப் பாதாள உலகக்



கோஷ்டிகளின் உதவிகளும் கிட்டுகின்றன.

இதே நேரம் இலங்கையர்களைத் திருமணம் முடித்து, இந்நாட்டில் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்ற வெளிநாட்டுப் பெண்களும் இல்லாமலில்லை. விசா பிரச்சினைகளில் இருந்து தப்பி இத்தொழிலை நடாத்துவதற்காக இவர்கள் தந்திரோபாயமாக இவ்வாறு திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான பெண்கள் காரணமாக நம் நாட்டில் பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகச் சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சுகாதாரச் சீர்கேடு இதில் முக்கியமானதாகும். பல்வேறு சமூக நோய்களுக்கு ஆளாகியுள்ள பெண்களும் இவ்வாறான வெளிநாட்டு பாலியல் தொழிலாளர்கள் மத்தியில் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. இதில் ஒரு சில பெண்கள் போதைமருந்துகளை உபயோகிப்பவர்களாக இருப்பதால் இவர்கள் ஊசி மூலமாக அதனை மேற்கொள்கின்றனர். இதனால் எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்கள் தொற்றக்கூடிய அபாயங்களும் தென்படுகின்றன.

நாளடைவில் இவ்வாறான பெண்களால் நம் நாட்டில் பல்வேறு சமூக நோய்கள் வியாபிப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகமாகத் தென்படுவதாக சமூக ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

-பாரூக்

# 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்



## தேர்தல் குற்றச் செயல்கள்

வாக்களிப்பு நிலையமொன்றில் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் செயற்பாடுகள் இலங்கைத் தேர்தல் சட்டத்தின் குற்ற நடவடிக்கைகளாகக் கருதப்படும்.

1. வாக்களிப்பு நிலையமொன்றினுள் வேட்பாளரொருவருக்கு ஆதரவளிப்பதை ஊக்குவிக்கக்கூடிய அச்சிடப்பட்ட எந்தவொரு புகைப்படத்தையோ, துண்டுப் பிரசுரமொன்றையோ பார்வைக்கு வைத்தல் கூடாது. அது தொடர்பாக எந்தவொரு துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்படக் கூடாது.


2. வாக்களிப்பு நிலையமொன்றினுள் வாக்கொன்றை இரந்து கேட்டல், அல்லது வேட்பாளரொருவருக்கு வாக்களிக்க வேண்டாமென வாக்காளர் ஒருவரைத் தூண்டுதல் குற்றமொன்றாகும்.


3. வாக்களிப்பு நிலையமொன்றில் அல்லது அதற்கருகாமையில் சத்தமிடுதல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற விதத்தில் நடந்துகொள்ளலாகாது.

4. வாக்கு அடையாளமிடப்பட்ட அல்லது அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டொன்றை அந்த இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5. வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டொன்றை எந்தவொரு நபருக்கும் காண்பிப்பது குற்றமாகும்.

6. வாக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டைக் காண்பிக்குமாறு எந்தவொரு வாக்காளரையும் வற்புறுத்துவது குற்றமாகும்.






## வேட்பாளர் விபரங்கள்


| பெயர் | கட்சி | சின்னம் |
|---|---|---|
| 1. அசல அசோக்கா சுரவீர | தேசிய அபிவிருத்தி முன்னணி | தேங்காய். |
| 2. அனுர சரத் டி சில்வா | ஐக்கிய லலித் முன்னணி | அன்னம் |
| 3. அருணா சொய்சா | றுகுணு மக்கள் கட்சி | மோட்டார்கார் |
| 4. சமில் ஜயநெத்தி | புதிய இடதுசாரி முன்னணி | மேசை |
| 5. ஜெயவீர ஆராச்சிகே ஏ.கே. | ஜனநாயக ஐக்கிய கூட்டணி | இரட்டை இலை |
| 6. ஜே.ஏ.பி. நெல்சன் பெரேரா | ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | பூச்சாடி |
| 7. மஹிந்த ராஜபக்ஷ | ஐக்கிய மக்கள் சுதந்திர .முன்னணி | வெற்றிலை |
| 8. ரணில் விக்கிரமசிங்க | ஐக்கிய தேசியக் கட்சி | யானை |
| 9. விக்டர் ஹெட்டிகொட டி சில்வா | ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி | தேனீர் கோப்பை |
| 10. விஜே டயஸ் | சோசலிச சமத்துவக் கட்சி | கத்திரிக்கோல் |
| 11. விமல் கீகனகே | இலங்கை தேசிய முன்னணி | கிரிக்கெட் மட்டை |
| 12. சாந்தா தர்மத்வஜா | ஐக்கிய தேசிய மாற்று முன்னணி | கதவு |
| 13. சிறிதுங்க ஜயசூரிய | ஐக்கிய சோசலிசக் கட்சி | முச்சக்கர வண்டி |















மண்ணை வெல்லத் தினிப்புவரச் செய்தல் - என
விந்தை தோன்றிட இந்நாட்டை - நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி - வெற்றி
சூழும் வீரமறி வாண்மை.

**- சுப்பிரமணிய பாரதியார்**

# கொள்ளிவாய் அரக்கன்

**ப**ல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர், ஃபிஜித்தீவிலிருந்த மக்களுக்கு தீயின் உபயோகத்தைப் பற்றி தெரிந்திருந்தும் தீயினை உண்டாக்கும் விதம் தெரியவில்லை. அப்போது அந்தக் காலத்தில் ரோடுமா என்ற மலையிலுள்ள குகையொன்றில் ஓர் அரக்கன் இருந்து வந்தான். அவனது வாயிலுள்ள பற்களிலிருந்து தீ எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும். அவனது வாயைத் திறந்தாலே போதும், அந்தக் கொள்ளிவாய் அரக்கனின் வாயிலிருந்து வரும் தீச்சுடர்கள் காட்டிலுள்ள மரம், செடி கொடிகளை எல்லாம் கூட எரிந்துவிடும். இந்த அரக்கனைக் கண்டு ஊரிலுள்ள மக்கள் மிகவும் பயந்தனர். ஒரேயொரு ஆறுதலான விஷயம் என்னவென்றால், இந்த அரக்கன் பெரும்பான்மையான நேரம் உறங்கிக் கொண்டேயிருப்பான். இந்த அரக்கன் வெளியில் வந்து வாயைத் திறந்தாலே எல்லாம் எரிந்து விடுவதால் இவன் எப்போது அழிவான் என்று அந்த ஊர் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த ஊரில் லேகாபா, தாகுவாகா, மாசிலாகா, துயிவேசி என்ற நான்கு துணிச்சலான இளைஞர்கள் இருந்தனர். இந்த அரக்கனது வாயிலிருந்து கொஞ்சம் தீயை எடுத்து வைத்துக் கொண்டால் பல காரியங்களுக்குப் பயன்படுமே என்று எண்ணினர்.



"அவன் வாயிலிருந்து கொஞ்சம் தீயை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்," என்றான்' துயிவேசி." "ஆம், நமது மனைவிகளால் சுவையான பதார்த்தங்கள் சமைக்க முடியும்" என்றான் தாகுவாகா. "இருட்டில் வெளிச்சம் தெரியுமாறுச் செய்யலாம்" என்றான் மாசிலாகா. "அப்படியானால், நாம் எல்லோரும் முயற்சி செய்யலாம் வாருங்கள்" என்று அழைத்தான் லேகாபாய்.

உடனே நால்வரும் இதற்காகத் திட்டம் தீட்டினர்.

உலர்ந்த தென்னை மரத்து ஓலைகளை சேகரித்துச் சுருட்டி எடுத்துக் கொண்டு நால்வரும் அரக்கன் இருக்கும் குகைக்குள் தைரியமாகச் சென்றனர். குகைக்குள்ளே அரக்கன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவன் வாயைத் திறந்து கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டு உறங்கும் போது, வாயிலிருந்து தீ வெளியே ஒளிவிட்டு சுடர்ந்து கொண்டிருந்தது.. சத்தமின்றி மெதுவாக அவனருகில் நால்வரும் சென்றனர்.

மிக அருகில் சென்றதும் தென்னை ஓலைகளை அவன் வாயருகே காட்டியதும் அவற்றில் உடனே தீப்பிடித்துக் கொண்டது. இதற்குள் திடீரென அரக்கன் விழித்துக் கொண்டு விட்டான். நான்கு இளைஞர்கள் தன் முன்னே

**பாப்பா முரசு சிறுகதை**

நிற்பதையும் தென்னை ஓலைகள் தீப்பிடித்து எரிவதையும் கண்டு கோபத்தில் சீறியெழுந்து, "என் வாயிலிருந்து தீப்பற்ற வைக்க என்ன தைரியம் உங்களுக்கு?" என்று பயங்கரமாகக் கத்தினான்.

இதற்குள் நான்கு இளைஞர்களும் அங்கிருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என தலைகால் புரியாமல் ஓடத் தொடங்கினர். அரக்கன் அவர்களைத் துரத்த ஆரம்பித்தான் நால்வரும் ஓடி மற்றொரு குகையில் நுழைந்து அதன் வாயிலை ஒரு பெரிய பாறையினால் மூடிவிட்டனர். அவர்களின் கையிலுள்ள தென்னை ஓலை மெதுவாகத் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

இதற்குள் அரக்கன் இவர்கள் ஒளிந்திருந்த குகை வாசலில் நின்று வாயிலை அடைந்திருந்த பாறையை அகற்றுமாறு கூக்குரலிட்டான். அவன் வாயிலிருந்து வந்த தீப்பிழம்புகளால் அருகிலுள்ள செடிகொடிகள் தீப்பற்றி எரியத் தொடங்கின. சுற்றியுள்ள மரங்கள் எல்லாம் எரியத் தொடங்கியதால் அந்த வெப்பம் தாங்காமல் எப்படியாவது குகைக்குள் நுழைய அரக்கன் துடித்தான். உள்ளிருப்பவர்கள் கையிலுள்ள எரியும் ஓலைகளுடன், அரக்கனிடமிருந்து எப்படித் தப்பிக்கலாம் என யோசித்தனர். 'நண்பர்களே பாறையை நகர்த்துகள். நான் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று அரக்கன் சொன்னாலும் தன்னிடமே வால் ஆட்டிய இந்த நால்வரையும் சும்மா விடக்கூடாது என்ற ஆத்திரத்தில் இருந்தான்.

இதற்குள் நால்வசரும் ஓர் அவசரத் திட்டம் வகுத்து, குகை வாயிலிலிருந்த கல்லை இலேசாக நகர்த்தினர். ஆனால் அரக்கனால் அந்த இடைவெளியின் உள்ளே நுழையமுடியவில்லை. அந்த நால்வரை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் தலையை மட்டுமே இடைவெளி வழியே நுழைந்த அரக்கன், "நண்பர்களே, இன்னும் கொஞ்சம் திறவுங்கள்" எனக் கெஞ்ச, அந்த நால்வரும் மிக வேகமாக பாறையை நகர்த்தி இடுக்கில் மாட்டியிருந்த அரக்கனின் தலையை நசுக்கி விட்டனர். தீக்கதிர் வீசும் அவன் பற்கள் உடைந்து தூள்தூளாயின. எப்போதும் அவன் வாயிலிருந்து வந்து கொண்டிருந்த தீயும் அணைந்து போனது. தலை நசுங்கிய அரக்கன் இறந்து வீழ்ந்தான்.

இப்போது அந்த நால்வரும், பாறையை அகற்றிவிட்டு கையில் எரியும் தென்னை ஓலைகளுடன் ஊரை நோக்கி வெற்றி முழக்கம் இட்டுக் கொண்டே ஓடினர். "வெற்றி, வெற்றி அரக்கன் மடிந்தான். தீயும் நமக்குக் கிடைத்துவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் ஊர் மக்களை நோக்கிக் கூவினர். அன்றிலிருந்து தீயைப் பயன்படுத்தி நல்ல வறுத்த, வேக வைத்த உணவுகள் எல்லாம் ஊர் மக்களால் சாப்பிட முடிந்தது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.11.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 621**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 619

**பரிசுக்குரியவர்:**
எம்.எஸ். சிப்னா,
127, 2ஆவது ஒழுங்கை, மூர் வீதி, மன்னார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வி.மதுசனன், தரம் 1B, மட்/கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. | சுகன்யா சுதாகர், க/ஸ்ரீ முத்து மாரி அம்மன். தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. |
| எம். முஸ்தாக் அஹமட், தரம் 4, 142 பறகஹதெனி, வேவுட. | யோகராசா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| ஆர். நிவித்திகா, ஐ.டி. 55A, சந்தை சுற்று வட்டவீதி, வவுனியா. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| செ. கவிஷன், 61, கோணேசபுரம், உவர் மலை, திருகோணமலை. | ர. சிரஞ்சனா, தரம் 10 E, மட்/செங். ம.க. செங்கலடி |
| ருமேஸ் மானியா, 12/3, பண்டாரநாயக்க பெதச, புசல்வாவ. | பி.எம்.எப். சாபிரா, 75, கண்டி வீதி, மல்லவபிட்டிய, குருநாகல். |

# ஆத்திசூடி


## திருமாலுக்கு அடிமை செய்

**நீ வாழும் நாட்டு அரசுக்கு நன்மையும் பெருமையும் தரத்தக்க முறையில் மேர்மையாகத் தொண்டு செய்.**

எஸ் நிரஞ்சலா, கண்டி.

-ஔவையார்

# நல்ல மாம்பழம்



கறுத்தக் கொழும்
பான் செம்
பாட்டான்
கறுத்தப் பச்சை
அம்பலவி
சிறுத்த விலாட்
டுச் செஞ்சேலம்
பொறுத் துப்
பொறுத் துத்
தின்தம்பி.

எங்கள் முன்
னோர் நட்டமரம்
எங்கள் பசியைத் தீர்க்குது பார்
எங்கள் கையால் நட்டாலே
எங்கள் சந்ததி வாழுமடா.

மாம்பழம் நல்ல மாம்பழம்
மாம்பழம் தின்ன வா தம்பி
மாம்பழத் தோலைச் சீவினேன்
மாம்பழத் துண்டுகளாய்த்தின்போம்.

# அதிசய உலகம்

## நூற்றாண்டு நடப்புகள்

### 1907

இந்தியாவை விட்டு விலகமாட்டோம் என பிரிட்டிஷ் அரசு அறிவிப்பு.

இந்தியாவில் செய்தித்தாள் சட்டம் வருகிறது : முதல் கிராமபோன் கொம்பனி ஒ.ஃப் இந்தியா தொடங்கப்பட்டது.

தென்னாபிரிக்கா அரசு அங்கே வாழும் இந்தியர்களை இரண்டாம் தர மக்களுக்குக் கீழாக நடத்த ஆரம்பித்ததால் அங்கே வக்கீல் தொழில் செய்த மாகாத்மா காந்தி அதை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தார். அவர் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

### 1908

புகழ்பெற்ற (Ford) போர்ட் கார்கள் அறிமுகம்.

சீனாவில் இரு வயது குழந்தைக்கு மன்னராக முடி சூட்டப்பட்டது.

நான்காவது ஒலிம்பிக் லண்டனில்.

இந்தியா பத்திரிகை ஆரம்பம்.

பாரதியாரின் சர்வதேச கீதங்கள் வெளியீடு.

பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சி, சோஷலிஸத்தை தமது கொள்கையாக அறிவிப்பு.

# உங்கள் பொது அறிவு எப்படி?

01. இலங்கை எத்தனையாம் ஆண்டு குடியேற்ற நாடாக்கப்பட்டது?
**1802ஆம் ஆண்டில்.**

02. 21 வயதினருக்கு எத்தனையாம் ஆண்டில் குடியுரிமை வழங்கப்பட்டது?
**1931ஆம் ஆண்டு.**

03. தேசிய தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
**1979ஆம் ஆண்டு.**

04. பாராளுமன்ற முறை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
**1947ஆம் ஆண்டு.**

05. கண்டி எத்தனையாம் ஆண்டு கைப்பற்றப்பட்டது?
**1815இல்.**

06. மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
**1987இல்.**

07. நாயக்க வம்சத்தைச் சேர்ந்தோர் எப்போது ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள்?
**கி.பி.1739இல்.**

08. போர்த்துக்கேயர் இலங்கைக்கு எப்போது வந்தனர்?
**கி.பி.1505ஆம் ஆண்டு.**

09. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி எப்போது தாபிக்கப்பட்டது?
**கி.பி.1600இல்.**

10. யூரிமார் முறையை இலங்கைக்கு எப்போது கொண்டு வந்தனர்?
**1810இல்.**

*-க.நந்தலேஸ்வரி, யா/வல்வெட்டி.இந்து கலவன் பாடசாலை.*

# தகவல் பெட்டி

## தாங்குமா நியூயோர்க்?

உலகப் பிரபல சுமோ மல்யுத்த வீரர்கள் அண்மையில் நியூயோர்க் நகரில் நடைபெறும் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக ஒன்று கூடியுள்ளனர். இது அவர்கள் நுழை வாயிலில் இருந்து ரொம்பச் சிரமப்பட்டு வெளிவரும் காட்சியாகும். இவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடினால் தாங்குமா நியூயோர்க்? அடுத்த பூகம்பம் அங்கு வராமல் இருந்தால் சரி.




## வில்மாவின் வில்லங்கம்



'வில்மா' என்ற வில்லங்கமான சூறாவளி அமெரிக்காவைப் போட்டுத் தாக்கு தாக்கென்று தாக்கியது நாம் அறிந்ததே. கடந்த அக்டோபர் 24ஆம் திகதி கடல் கொந்தளிப்புடன் கியூபாவின் 'எல் மெலேகோன்' கடற்கரையை மையம் கொண்ட காட்சியே இது.

## அதிசய புத்தகம்

ஜெர்மன் பிராங்போர்ட் நகரில் நடைபெற்ற 57ஆவது புத்தகக் கண்காட்சியின்போது வைக்கப்பட்டிருந்த 'அலிஸின் அதிசய உலகம்' என்ற புத்தகமே இது. இப் புத்தகத்தின் உயரம் இரண்டு அங்குலம் மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது.




## பூனை நாடகம்

ரஷ்ய சர்க்கஸ் கலைஞரான யூரி குக்லேவேம், பல வருடங்களுக்கு முன்னர் ஓர் பூங்காவுக்குச் சென்றபோது அங்கு கைவிடப்பட்ட நிலையில் அநாதரவாக இருந்த ஒரு பூனையைக் கண்டு அவருக்கு அபூர்வ யோசனை ஒன்று தோன்றியது. அவர் அப் பூனைக்கு நடிக்கக் கற்றுக் கொடுத்து 'மொஸ்கோ கெட் தியேட்டர்' என்ற பெயரில் பூனை நாடகக் குழு ஒன்றுக்கு 30 வருடங்களுக்கு முன்னர் அத்திவாரமிட்டார். இப்போது பல பூனைகளை உறுப்பினர்களாகக் கொண்ட அந் நாடகக் குழு நியூயோர்க் நகரில் தமது திறமைகளை வெளிக்காட்டிய விதமே இது.



## பறந்தாலும் விடமாட்டேன்


மோட்டார் சைக்கிள் மக்களின் அன்றாடப் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்டாலும் அதனைப் பற்பல காரியங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். அண்மையில் அவுஸ்திரேலிய பார்த் நகரில் நடைபெற்ற 'க்றேவிட் க்றேம்ஸ்' என்ற சாகஸ சைக்கிள் ஓட்டப் போட்டியில் அவுஸ்திரேலியரான மெட் க்ருபின்ஸ் அந்தரத்தில் அசத்தலான பல்டி அடித்து 'பறந்தாலும் விடமாட்டேன்' என்று பாடிக்கொண்டே இறங்கினார்.





## தெய்வமும் மிருகமும்

இங்கிலாந்தில் வசிக்கும் அவுஸ்திரேலியரான வணக்கத்திற்குரிய பிதா மக்லியோட் மிலர், தேவ ஆராதனைகளுக்கு ஒரு கழுதை, சில செம்மறி ஆடுகள், ஆடுகள் போன்ற மிருகங்களுடனேயே சமுகமளிக்கிறார். இவ்வகை மிருகங்களைப் பற்றி பைபிளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறும் பிதா மிலர், இவ்வாறான மிருகங்களினால் மக்களின் மனங்களிலும் இறை நம்பிக்கை ஊற்றெடுக்க வாய்ப்புள்ளதாகக் கூறுகிறார். ஃபாதரின் நம்பிக்கை பலிக்க நாமும் பிரார்த்திப்போம்.




சிம்பு - சந்தியா
வல்லவன்

தேவயானி நான்கு மாத கர்ப்பமாக இருப்பதால் 'கோலங்கள்' சீரியல் தவிர்த்து வேறு பட வாய்ப்புகளை மறுத்து வருகிறாராம். நெசமா இராஜகுமாரன்?

---

சென்னை, வாசன் ஹவுஸைத் தொடர்ந்து தமிழ் சினிமாவின் ஆஸ்தான படப்பிடிப்பு பகுதியான குசால்தாஸ் கார்டனிலும் அபார்ட்மெண்ட்ஸ் கட்டுவதற்கு விற்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

---

நமீதாவே இருபது இலட்சம் என இப்பொழுதுதான் தன் சம்பளத்தை உயர்த்தினார். ஆனால் 'அழகிய தீயே', 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' என்று இரண்டே தமிழ் படங்களில் நடித்திருக்கும் நவ்யாநாயர் இருபது லட்சம் சம்பளம் கேட்கிறாராம். எடுத்த எடுப்பிலேயே டாப் கியரில் போகிறாருங்க அம்மணி. ஆபத்துதான் என்கிறது கோடம்பாக்கம். இதே நவ்யாவிற்கு மலையாளத்தில் ஒரு படத்திற்கு ஐந்து லகரம்கூட கிடையாதுங்க சம்பளம்.

# சி வி னி சி ட்



## லோகிததாஸின் முழுக் கட்டுப்பாட்டில் மீரா ஜாஸ்மின்

சூத்திரதாரணி என்ற படம் மூலம் மீரா ஜாஸ்மினை மலையாள பட உலகில் நடிகையாக அறிமுகப்படுத்தினார் டைரக்டர் லோகிததாஸ். அதன்பிறகு முழுக்க முழுக்க லோகிததாஸின் கஸ்டடியிலேயே இருந்து வந்தார் மீரா. இவர் சம்பாத்தியமும் குடும்பத்திற்கு சரிவரப் போவதில்லை. இதையடுத்து மீராவுக்கும், மீராவின் குடும்பத்திற்கும் பெரிய தகராறே நடந்து கேரள உலகமே பரபரப்பானது. இந்த சர்ச்சையில் மனமொடிந்த மீரா ஜாஸ்மின் தற்கொலைக்குக் கூட முயற்சித்தார். அந்த அளவுக்கு லோகிததாஸின் மேல் பிரியம் போல.

ஒரு புதிய படம் ஒன்றில் கதை எழுதுவதற்கு ஒப்புக்கொண்டு பணம் வாங்கிய லோகிததாஸ், அந்தப் படத்திற்குக் கதை எழுதித் தராமல் வேறு படம் பண்ணப் போய்விட்டார். இதனால் கேரள திரைப்பட சம்மேளனம், லோகிததாஸிற்கு தடை விதித்துவிட்டது. இதில் லோகிததாஸைவிட மிகவும் வருத்தப்பட்டவர் மீராதான். கேரள ஃபீல்டில் தடை விதித்தால் என்ன, தமிழ்நாட்டில் போய் படம் எடுக்கலாம் என லோகிததாஸை கோலிவுட்டுக்கு கூட்டிவந்தார் மீரா. மீராவின் பணத்திலேயே 'கஸ்தூரிமான்' என்ற படத்தை இயக்கி வருகிறார் லோகிததாஸ்.

இப்படி....இவர்களுக்கு இடையே இருந்த நெருக்கத்தில் இப்போது நெருடல் ஏற்பட்டிருக்கிறது. லிங்குசாமி இயக்கத்தில் 'சண்டைக்கோழி' படத்தில் நடித்துவரும் மீரா, அப்படத்தின் உதவி இயக்குநர் ஒருவரோடு நெருங்கிப் பழகி வருகிறார். இதை அறிந்த லோகிததாஸ், லிங்குசாமியிடம் 'உங்கள் உதவி இயக்குநரைக் கண்டித்து வையுங்கள்' எனச்சொல்ல....லிங்குசாமியோ, 'உங்க பஞ்சாயத்த பார்க்கிறதுக்கெல்லாம் எனக்கு நேரமில்லை' என சொல்லிவிட்டாராம்.

---

## அம்மாவாகும் ரோஜா!

தமிழ் சினிமாவில் எதிர்பார்க்காத எதுவும் நடக்கலாம் என்பதற்கேற்ப, சத்யராஜ் தனக்குப் பொருத்தமான ஜோடி எனப் பேசப்பட்டு வந்த நமீதாவை, தன் மகன் சிபிராஜுக்கு ஜோடியாக ஷக்திசிதம்பரத்தின் இயக்கம் மற்றும் தயாரிப்பில் உருவாகும் 'கோவை பிரதர்ஸ்' படத்தில் ஒட்டி உறவாடி கட்டிப்பிடித்து நடிக்க வைத்திருக்கிறாராம்.

சத்யராஜ் தன் ஜோடியை தன் மகன் ஜோடியாக்கிவிட்டு ஒருபக்கம் வேடிக்கை பார்க்கிறார் என்றால் இன்னொரு பக்கம் ஷங்கர் இயக்கத்தில் ஏவி.எம். தயாரிப்பில் 'சிவாஜி' யாக படையெடுக்க இருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தோ..... தன் மருமகன் தனுஷின் ஜோடியாக 'திருவிளையாடல்' படத்தில் கதாநாயகியாக நடித்துக்கொண்டிருக்கும் 'மழை' நாயகி ஸ்ரேயாவை தன் நாயகியாக தேர்ந்தெடுத்திருக்கிறார்.

ரஜினி, சத்யராஜ் இப்படியென்றால்....நடிகர் பிரஷாந்தோ....ரஜினி கமலுக்கு அன்று கதாநாயகியாக நடித்தவர்கள் இன்று அம்மாவாக நடித்து வருவதுபோல் தனக்கு செம்பருத்தி படத்தில் ஜோடியாக அறிமுகமான ரோஜாவை புதிய படமொன்றில் தனது அம்மாவாக்கிக் கொண்டுள்ளார். அந்தப் படத்தையும் செம்பருத்தி பட்த்தை இயக்கிய ரோஜாவின் ராஜாதான் இயக்குகிறார் என்பது கூடுதல் தகவல்.

தந்தையின் ஆஸ்தான நாயகி, மகனின் காதல் ஜோடி....மருமகனின் கதாநாயகி மாமனாரின் காதல் நாயகி. மாஜி காதலி (படத்தில்தான்...) தற்போது அதே நாயகனுக்கு ஆத்தாக்காரி. அடி ஆத்தா...தமிழ் சினிமாவில் நடிகைகளுக்கு பஞ்சம்...?!

## நயன்தாராவிற்கு என்னாச்சு?



நயன்தாரா
வல்லவன்

'ராம்' ஜீவா நடிக்க 'இயற்கை' இயக்குநர் ஜனநாதன் இயக்கத்தில் சூப்பர்குட் தயாரிப்பில் உருவாகும் 'ஈ' படத்தின் முதல்நாள் படப்பிடிப்பன்றே ஒழுங்காகப் படப்பிடிப்பிற்கு வராமல் காலதாமதமாகவே வந்து சேர்ந்தார் நயன்தாரா. அப்படி வந்ததும் வராததுமாக....வந்து சேர்ந்ததும் தலைச்சுற்றல்...வாந்தி என வந்த வேகத்திலேயே வீட்டிற்கு (ஹோட்டலுக்கு) திரும்பிய அம்மணி...அதன்பிறகும் ஒழுங்காகப் படப்பிடிப்பிற்கு வராமல் அடிக்கடி மட்டம் போட்டிருக்கிறார். சமீபத்தில் 3 நாட்கள் இப்படித்தான் நயன்தாரா 'ஈ' படப்பிடிப்பிற்கு தொடர் மட்டம் போட....கடுப்பான தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி, அம்மணியைக் கூப்பிட்டு ஆத்திரப்படாமல் அவசரப்படாமல் என்னம்மா பிரச்சினை? ஏனம்மா அடிக்கடி லீவு போடுறே? என அமைதியாகக் கேட்டதுடன் அட்வைஸும் பண்ணியிருக்கிறார்.

அதற்கு அலட்டிக்கொள்ளாமல் எந்தப் பிரச்சினையும் இல்லை. இனி படப்பிடிப்பிற்கு லீவு போடாமல் வருகிறேன் என்று பதிலளித்திருக்கிறார். அதன்படியே 'ஈ' படப்பிடிப்பு ஸ்பாட்டிற்கு ஒழுங்காக வர ஆரம்பித்திருக்கும் நயன்தாரா, ஸ்பாட்டில் இன்வால்வ்மெண்ட் இல்லாமல் நடித்து வருகிறாராம்.

என்னாச்சு? நாற்பது லட்சம் சம்பளம் வாங்கும் நயன்தாராவிற்கு? எனக்கேட்கிறது கோடம்பாக்கம். பதில் சொல்வாரா பாப்பா....பொறுத்திருந்து பார்ப்போம்!

---

சென்னையில் இருந்து நிருபர்கள் யார் தொடர்பு கொண்டாலும் டெல்லியில் இருக்கும் சிம்ரன், இன்னும் ஒரு வருடத்திற்கு நான் பத்திரிகைகளுக்குப் பேட்டி தரவும் மாட்டேன். என் மகனுடன் போஸ் தரவும் மாட்டேன் என்று சொல்லிவிடுகிறார். அம்மணியின் குழந்தைக்கு ஆயுஷ்மான் என்று பெயர் சூட்டியிருப்பது தெரியும்தானே?

---

கமல் - கவுதம் கூட்டணியில் உருவாகும் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் டிஸ்கோ சாந்தியின் கணவரும் பிரபல தெலுங்கு நடிகருமான ஸ்ரீஹரி முக்கிய பாத்திரமொன்றில் நடிக்கிறார் கமல் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி.

---

ராதிகாவை 'கலைச்செல்வி' என்றும் 'செல்வி' என்றும் செல்லமாக விளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார் சூப்பர் ஹீரோ சரத்குமார். 'செல்வி' ராதிகா நடிக்கும் தொடரில் அவரது பெயர் சரி...அதென்ன 'கலைச்செல்வி'.

---

'இதயத் திருடன்' படத்தில் ஜெயம் ரவி ஜோடியாக அறிமுகமாகவிருப்பவர் காம்னா. ராமஜெத்மலானியின் உறவுக்காரர். அம்மணி ரவி சம்பந்தப்பட்ட மற்றப் படங்களின் விழாக்களிலும் தவறாமல் கலந்துகொள்கிறார்.

## பட்டையைக் கிளப்பும் பொன்னம்பலம்




பல மொழிகளில் 1000க்கும் மேற்பட்ட படங்களில் வில்லத்தனம் பண்ணியவர் பொன்னம்பலம். 'பட்டையைக் கிளப்பு' என்கிற படத்தை இயக்கி, நடித்து, தயாரித்து முடித்திருக்கிறார். அது பற்றி பொன்னம்பலத்திடம் கேட்டோம்.

"என்னை எல்லோருக்கும் ஒரு வில்லன் நடிகராகவோ, ஸ்டண்ட் மாஸ்டராகவோத்தான் தெரியும். இப்போதாவது பரவாயில்லை. ஆரம்பகாலத்துல வெறும் டூப் நடிகர், ஸ்டண்ட் நடிகர் இந்தளவுலதான் நம்மைத் தெரியும். ஆனா என்னோட அப்பா கணபதி நாயக்கர் ஒரு படத் தயாரிப்பாளர். அதுவும் நாகிரெட்டியார், ராமாநாயுடு ஆகியோரின் தயாரிப்பு நிறுவனங்களிலும் 'மாயாபஜார்', 'பாதாள பைரவி' மற்றும் 'விட்டலாச்சாரியா' படங்களிலும் புரொடக்ஷன் மேனேஜராகப் பணியாற்றினார். முத்துராமன் - கே.ஆர்.விஜயாவை வைத்து ஒரு படத்தைத் தொடங்கினார். ஸ்ரீபாலாம்பிகை மூவிஸ் என்ற பெயரில் தயாரிப்பில் இறங்கிய என் அப்பா, பாதி படத்திலேயே இறந்துபோய்விட்டார். அவரோட விருப்பத்தை நிறைவேத்தணும்ங்கிற வைராக்கியத்தோடுதான் சினிமாவிற்கு வந்தேன். என் ஜெய்ஸ்ரீராமின் அருளால் அதை இதோ என் அம்மா உயிருடன் இருக்கும்போதே முடித்துவிட்டேன். எனது 'ஸ்ரீபாலாம்பிகை மூவிஸ்' என் தந்தையின் தயாரிப்பு நிறுவனத்தின் பெயர்தாங்க."

***'பட்டையை கிளப்பு' படத்தில் நான்கு கெட் - அப்களை ஏற்றுள்ளீர்களே.... அதுபற்றி சொல்லுங்களேன் பொன்னம்பலம்.....***

"நீக்ரோ போன்ற கெட்-அப்பில் ஒரு சண்டைக் காட்சியில் வருகிறேன். மொட்டைத் தலையுடன் ஒரு ஃபைட், அதன்பிறகு மீசையுடன், மீசை இல்லாமல் என்று இருவிதமான கெட்-அப்களில்...ஆக மொத்தம் நான்கு கெட்-அப்களில் பட்டையக் கிளப்பியிருக்கிறேன். (சிரிக்கிறார்...)



ப்ரித்திவிராஜ் -சரண்யா
பாரிஜாதம்

# ரஜினியின் தலைமுடி கொட்டிய இரகசியமும்? வெண்தாடிக்கான விளக்கமும்!


சரண்
கோகி

ரஜினிக்கு இருபது வயதிலேயே முடி நரைக்க ஆரம்பித்துவிட்டதாம். உடல் வெப்பத்தாலும் பித்தத்தாலும்...அதற்காக 'டை' யூஸ் பண்ண ஆரம்பித்திருக்கிறார். இது அலர்ஜி, அது சரியில்லை என்று மாறி மாறி வெவ்வேறு பிராண்ட் டைகளை அடித்து வந்திருக்கிறார். 90 சதவீதம் முடிபோன பின்தான் தனக்கு டை அலர்ஜி என்பதையும் அதனால்தான் முடி முழுவதும் கொட்டிவிட்டது என்பதையும் உணர்ந்திருக்கிறார். அதன்பிறகுதான் ஹேர் பேட்ச், விக் ஆகியவற்றின் உபயத்தில் முடி அழகனாக வலம் வர ஆரம்பித்தார்.

***முடிசூடா மன்னன்?!***

ரஜினியின் முடிபோன கதை மாதிரியே அவரது வெண் தாடிக்கும் ஒரு கதை இருக்கிறது. அதாகப்பட்டது, தாடி வச்சவன் எல்லாம் ஞானி அப்படிங்கிற சிறுபிள்ளைத்தனமான எண்ணத்திற்காகவே தாடியும் முகமுமாகவும் திரிவதாகக் கூறுகிறார் ரஜினி. அதற்கும் டை அடித்து அந்த முடியையும் இழக்க விரும்பவில்லையாம். அதனால்தான் வெண்தாடி வேந்தராக இருக்கிறாராம் ரஜினி. இதையெல்லாம் சமீபத்தில் நடந்தேறிய சிவாஜி பிலிம்ஸ் 'சந்திரமுகி'யின் இருநூறாவது நாள் விழாவில் ரஜினியே மனம் திறந்து கூறியதுதான் ஹைலைட்.

## லஷ்மிராயை வாட்டும் வாழைப்பழ மேனியா!

வாழைப்பழங்கள் என்றால் வாயில் எச்சில் ஊற சப்புக்கொட்டிக்கொண்டு திரிபவர் லஷ்மிராய்.

அது மஞ்சள் வாழைப்பழமானாலும் சரி, மலை வாழைப்பழமானாலும் சரி, ரஸ்தாளி, பச்சைவாழை, செவ்வாழை, நேந்திரம், ரோஸ்பட்டா....இப்படி எக்ஸ்ட்ரா எக்ஸ்ட்ரா..... வாழைப்பழங்கள் எதுவானாலும் இரவு பகல் பாராது விதம் விதமாக ரகம் ரகமாக உள்ளே தள்ளும் வழக்கமுடைய லஷ்மிராயின் இந்த பழமோகம் மீது பாவம் எந்த படுபாவியின் கண் பட்டதோ...சமீபத்தில் டான்சில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட அம்மணியை இனி வாழைப்பழங்களைத் தொடக்கூடாது என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனராம். அதன் விளைவு...கடைகளில் கட்டித் தொங்கவிட்டிருக்கும் வாழைப்பழங்களைப் பார்த்து ஏங்கும் வாழைப்பழ மேனியாவால் அவதிப்படுகிறார் அம்மணி. வாழைப்பழங்களை மட்டும்தானே வாயில் வைக்கக்கூடாது என்றார் டாக்டர். மற்ற பழங்களைச் சாப்பிடலாம் இல்லையா? அதுவரை சந்தோஷப்பட்டுக்கொள்ளுங்கள் அம்மணி.


ஜீவா - சந்தியா
டிஷூம்

# 'சிவாஜி' பட நாயகி ஸ்ரேயா! ரஜினி மீது த்ரிஷா கோபம்!

'சந்திரமுகி' இருநூறாவது நாள் விழாவில் ரஜினி, ஐஸ், ஐஸ்வர்யா, ஐஸ்வர்யா ராய்....என்று உருகியதைப் பார்த்து ரொம்பவும் வருத்தத்திற்கு உள்ளாகியுள்ளார் த்ரிஷா. அதன் வெளிப்பாடு ரஜினி மீது கடுங்கோபத்தில் இருக்கிறார் த்ரிஷா.

சந்திரமுகி விழா முழுக்க உலக அழகி புகழ் பாடிய இவர், அதாங்க ரஜினி, சென்னை அழகி தன்னைப் பற்றியும், தான் அவர் படத்தில் நடிக்கக் காத்திருப்பது பற்றியும் ஒரு வார்த்தைகூடப் பேசாதது...அட்லீஸ்ட் ஐஸ்வர்யாராய் கிடைக்கவில்லையென்றால் அதற்குப் பதில் நான்தான் நாயகி என்பதையாவது வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாமே? என புலம்பி வருகிறது த்ரிஷா வட்டாரம்.

விஜய்யுடன் த்ரிஷா நடித்த 'கில்லி' பட விழாவில் கலந்துகொண்டு த்ரிஷாவை பெரிசாய் பேசிய ரஜினி, தன்னுடைய சந்திரமுகி விழாவில் ஐஸ்வர்யா ராய் இல்லைன்னா 'சிவாஜி' படத்திற்கு த்ரிஷாதான் நாயகி என்று அறிவிப்பார். என ஆசை ஆசையாய் எதிர்பார்த்திருக்கிறார் த்ரிஷா. அவ்வாறு அறிவிக்கவில்லை என்றதும் கோபம் பொத்துக்கொண்டு வர, த்ரிஷாவும் அவர் தாய்க்குலமும் ஹைதராபாத்துக்கு அடுத்த ப்ளைட்டைப் பிடித்து பறந்துவிட்டனர். மேலும் 'சிவாஜி' க்காக வைத்திருந்த கால்ஷீட்டில் இரண்டு தெலுங்குப் படங்களிலும் ஒப்பந்தமாகிவிட்டார். இனி ரஜினியே கூப்பிட்டாலும் அவர் ஜோடியாக நடிப்பதற்கில்லை என்கிறது த்ரிஷா தரப்பு.

ஆனால் ரஜினியோ, த்ரிஷாவைக் கூப்பிடுவதாகத் தெரியவில்லை. யெஸ்..ஐஸ்வர்யா ராயால் முடியாது என்றதும் அந்த இடத்திற்கு 'மழை' நாயகி ஸ்ரேயாவை புக்பண்ணி இரகசியமாக வைத்திருக்கிறதாம் ரஜினியின் சிவாஜி தரப்பு. நெசமா? ரஜினிக்கே வெளிச்சம்.

---

'உயிர்' படத்திற்கு இசையமைக்கும் 'காதல்' ஜோஷ்வாஸ்ரீதரும் அவரது காதலி நடாஷாவும் இணைந்து இப்படத்திற்காக ஒரு காதல் பாடலை ஒன்றிப்போய் பாடியுள்ளனராம். ஜோஷ்வாவின் முன்னாள் தோழி இந்நாள் காதலி....ஆன கதை தெரியும்தானே?

---

# எஸ்.சுந்தரின் ஞானோதயம்

விக்ரம் நடித்த 'கண்டேன் சீதையை' எனும் மொழிமாற்றுப் படத்தை தமிழில் வழங்கிய எஸ்.சுந்தரம் அடுத்து தயாரித்து கிடப்பில் இருந்து வரும் படங்கள் 'நெருப்பூ' மற்றும் 'நாகா'.

இவை தவிர தெலுங்கில் 'மறுமலர்ச்சி'யையும் தயாரித்து முடித்துவிட்டு வெளியிட முடியாது தவியாய் தவிக்கிறார்.

மேற்படி எஸ்.சுந்தரத்திற்கு மதுரைதான் சொந்த ஊர். இருபத்தி இரண்டு வருட சினிமா அனுபவம். ஃபைனான்ஸியர், விநியோகஸ்தர், தயாரிப்பாளர் என்று சினிமாவில் பல முகங்களைக் கொண்ட இவர், ஒரு தயாரிப்பாளராய் கஷ்டம் மட்டுமே படுவதாகக் கூறுவதுடன், இனி மார்க்கெட் வேல்யூ உள்ள ஹீரோக்களை வைத்துத்தான் படம் எடுப்பேன். அவர்களுக்குப் பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் அது தகும். சின்ன நடிகர்களை வைத்து சின்ன பட்ஜெட் படம் எடுத்து இப்படி சின்னாபின்னப்படுவதில்லை இனி என்று சபதமெடுத்திருப்பதாகக் கூறுகிறார்.

பெரிய பட்ஜெட் படம் எடுக்க வாழ்த்துவோம்.

---

விந்தியா, அனாமிகா வரிசையில் நமீதாவும் ஜாக்குவார் தங்கம் ஃபைட் மாஸ்டரிடம் சண்டைப்பயிற்சி எடுத்து வருகிறாராம். அப்போ...விஜயசாந்தி இடத்தை நிரப்பக் கூடிய ஒரு ஆக்ஷன் ராணி விரைவில் ரெடின்னு சொல்லுங்க.

---

ரோஜா, ஆந்திர அரசியல் மேடைகளில் ஏறினால் தன் பேச்சினூடே உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் வடிக்காமல் (நடிப்பிற்கல்ல...நிஜம்) இறங்குவது கிடையாது.

---

சமீபத்தில் தனது இயக்கத்தில் வெளியான 'சாணக்யா' படத்தில் பிரபல நாவலாசிரியர் சுபாவை வசனம் எழுத வைத்திருந்த ஏ.வெங்கடேஷ், பிரசாந்த் நடிக்க, தான் இயக்கவுள்ள 'பெட்ரோல்' படத்திற்கு நாவலாசிரியர் பட்டுக்கோட்டை பிரபாகரை வசனம் எழுத ஒப்பந்தம் செய்துள்ளார்.


அஜித்
பரமசிவன்

'ராம்' ஜீவா 'இயற்கை' ஜனநாதன் இயக்கத்தில் நடிக்கும் 'ஈ' படத்தின் ஃபுல்பார்ம் 'ஈஸ்வர்' என்பதாகும். ஈஸ்வரனைக் குறிக்கும்படி ஹீரோவிற்கு ஈஸ்வர் என்று பெயர் சூட்டி அதன் சுருக்கமான 'ஈ' யையே டைட்டிலாக்கியுள்ளனர்.

---

"தலைவாழை இலை எங்களுக்கு.....விருந்து உங்களுக்கு...."எனும் கான்ச.ஃப்ட்டில் 'கோவை பிரதர்ஸ்' படத்திற்காக எடுக்கப்பட்ட ஸ்டில்களில் இலை, தழைகளை உடம்பில் சுற்றிக்கொண்டு கட்டிப் புரண்டிருக் கின்றனராம் சிபிராஜும் - நமீதாவும்.

---

'எங்கள் தங்கம்' படத்தில் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா ஆடிப்பாடிய 'தங்கப் பதக்கத்தின் மேலே...ஒரு முத்துப் பதித்தது போலே...'என்று தொடங்கித் தொடரும் கவிஞர் வாலியின் பாடலை 'வெற்றிவேல் - சக்திவேல்' படத்திற்காக ரீ-மிக்ஸ் செய்துள்ளனர். சத்யராஜ் எம்.ஜி.ஆராகவும் குஷ்பூ, ஜெயலலிதாவாகவும் மேற்படி 'உல்டா' பாடலுக்கு பாடி ஆடி நடித்திருக்கின்றனர். எம்.ஜி.எம். கடற்கரைப் பகுதியில் இந்த இருவரும் நடிக்க படமாக்கப்பட்டுள்ளது மேற்படி பாடல் காட்சி.

---

கழுத்தில் ஒற்றை ருத்ராட்சக்கொட்டையை கறுப்புக் கயிற்றில் கோர்த்து மாட்டிக்கொண்டு சமீபகாலமாக பொது இடங்களில் காட்சி யளிக்கிறார் 'ரோஜாக்கூட்டம்' ஸ்ரீகாந்த்.

---

ரஜினி கூட ஒரு பக்கம் கதாநாயகியாக நடிக்கத்தான் த்ரிஷா, நயன்தாரா, அசின், அக்கடா துக்கடா எல்லாம் போட்டி போடுகின்றனர் என்று பார்த்தால்...'சிவாஜி' படத்தில் ரஜினிக்கு அம்மாவாக நடிக்க ஆசைப்பட்டும் மத்திய வயதுடைய குரூப் ஆ.ஃப் நடிகைகள் தங்கள் புகைப்பட ஆல்பத்துடன் ஆலாய் பறக்கின்றனராம். இதில் ரஜினியின் மாஜி கதாநாயகிகள் பலபேர் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது என்கிறது ஷங்கர் வட்டாரம்.


நெப்போலியன்
வீரண்ணா

'தொட்டி ஜெயா', 'கஜினி' ஆகிய படங்களில் வில்லனாக நடித்த பிரதிப் ரவுத்தைத் தேடி மொத்த தமிழ் திரையுலகமும் வண்டி கட்டி வருகின்றது. காரணம் மேற்படி இரண்டு படங்களிலும் அவர் காட்டியுள்ள வில்லன்களுக்கே உரித்தான வித்தியாசமும் விறுவிறுப்பும்தான்.

---

லிங்குசாமி இயக்கத்தில் மீரா ஜாஸ்மின் நடிக்கும் படம் 'சண்டைக்கோழி'. இந்தப் பெயரின் பாதிப்பில் தற்போது சாமக்கோழி என்றொரு படம் தயாராகிறது. ரதியும் - பரணிகுமாரும் இணைந்து நடிக்கும் இப்புதிய படத்தை கதை - திரைக்கதை - வசனம் எழுதி, இயக்கித் தயாரிப்பது ராமசாமி - மதுரை ரமேஷ் எனும் இரட்டையர்களாகும்.


ஸ்ரீகாந்த்

'பொய்' இது கே.பாலசந்தரின் இயக்கத்தில் பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் படம். இப்படத்தில் 'தென்றலே என்னைத்தொடு' படத்தில் இயக்குநர் ஸ்ரீதரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெயஸ்ரீ, அம்மா வேஷங்கட்டவிருக்கிறார். நீண்ட இடைவெளிக்குப்பின் நடிக்க வரும் அம்மணி 'அம்மா' ஆகிவிட்டார் அப்படித்தானே?



# தேன் கிண்ணம்

## எனை விட்டுச் செல்கிறாய்.....

செல்கிறாய்....
சில ஞாபக ஈரங்களை
மட்டும்....
விட்டுவிட்டு....

கண்ணீர் மீதூர
நீ போகும் வழி பார்த்து
விழி பந்து உருளும்....
விரிந்து கிடக்கும் துயர்
மிகும் வெளி
இனியெனக்கு....

மிருதுவாய் வியாபித்திருந்த
என் யாவும்
இறுகி நாறும்....

இதுவரைக்கும் பகிரப்பட்ட
தனிமை
ஊன் கரைக்கும்...

முடியவில்லை
நீயில்லா வெளிக்குள்
ஒற்றையாய்
ஒன்றும் செய்ய....

மூளைக்குள் செதுக்கி
வைத்த
உன் உரு
வந்து வந்து
வதைக்கையிலும்
வலியில் அலறும்....
எனை விட்டுச்
செல்கிறாய்.....
சில ஞாபக ஈரங்களை
மட்டும்....
விட்டு விட்டு.....!

*–சண்முகம் சிவகுமார், பத்தனை.*

## முகவரியற்ற காதலி!

ரயிலோசையா?
இல்லையது தான்
உயிரோசையா?
செவிகளில் மெல்ல
ஒலித் தட்டுப்படுகிறது
நெஞ்சம் கனத்து
உயிர் போகிறது.

ஒடிந்து போகும்
உடல் நாள்ங்களில்
வலி கசிகிறது.

இதயம் சுருதி மாறி
முனகலினால்
இசை வடிக்கிறது
இயலாமை அதில்
வெளிப்படுகிறது.

இரத்த ஓட்டம் அடங்கியதால்
உணர்வுகள்
செயலற்றுக் கிடக்கின்றன.
இன்னும் பாதங்கள் மட்டுமே
உயரப் பறக்கிறது
அந்தரத்தில் ஆடி நின்று.....இது
அத்தனையும்
காதலின் ரணங்கள்!
காற்றோடு கலந்து வரும்
பூவாசமாய்
முதல் உரை தந்து
முடிவுரையாகு
முகவரி இல்லா காதலியே....

*–திருமலை நதார், ஜின்னாநகர்.*

## மெகா ஹேர்ட்ஸ் புன்னகை மிரட்டல்...!

நுரையீரலை
நனைத்துச் செல்லும்
நுஸ்ரத் பஹ்தி
அலிகானின்
பாடலோடு.....
காத்திருப்புக்களில்
களங்கம் தெளித்து
என் படுக்கையில்
முட்கள்
தூவிச் சென்றவள் பற்றிய
முறைப்பாடுகளுடன்...!

வெள்ளி ஓடைகளுக்கு
நடுவே - என்
வெப்ப உணர்வுகளை
சிலாகிக்கத் தெரியாத
அவளின்
சிரிப்பொலிகள்...!

ஆபத்து நிறைந்த - இந்த
உறவில் நான்
எத்தனையாவது
உயிரென்று
தெரியவில்லை..!

நெருஞ்சி முள்
காட்டிற்குள் நேசப்
பயிர்களை
விசயம் தெரியாமலே
விதைத்து விட்டேன்...!

அழுக்கு படிந்த - அவள்
இதயமும் - ஓயாமல்
தேய்ந்து கொண்டிருக்கும்
என் தேடல்களும்
இன்னும்
மரணிக்கப் போவதில்லை
என
மார் தட்டிக்
கொள்கிறது....!

அன்பே....
உன்
மெகா ஹேட்ஸ்
புன்னகையால் - என்
கசங்கிய மனசினையும்
கொஞ்சம்
கவனித்துக் கொள்ளடி.....!

*–புத்தளம் நஸீம்ரூமி.*

## காதல் நினைவாக...!



காதலியே,
நம் காதல் நினைவாக
நீ பொன், பொருளோ
புகைப்படமோ
தரத் தேவையில்லை.
உதிரும் உன்
தலைமுடியில்
ஒன்றைத் தருவாயா?
அந்த முடியின் நினைவுடன்
என் வாழ்கையை
வாழ்ந்து
முடித்துக்கொள்வேன்.

*–தி.அசோக், யாழ்ப்பாணம்.*

## குறு(ம்புக்)ங் கவிதைகள் சில.....

### சிகரட்

கோபிக்காதே,
இதுதான் கடைசி.....
இனிமேல் புகைக்க
மாட்டேன்!
இனி -
உன் இருமல் பாணிக்கு
அவசியமில்லை
தூக்கி அதைத் தூர
வீசு!!

### பேனை

என்னால்
தொட முடியாத
சிகரங்களையும்
குன்று குழிகளையும்
கிஞ்சித்தும் தடையின்றி
தொட்டுவிடுகிறதே
என் பேனா!

### கைக்குட்டை

உன் முகம் துடைத்த
என்
கைக்குட்டையைக்
கழுவிவிடாதே.....
என் ஞாபகம்
மறந்துவிடும் உனக்கு!

### இளவேனில்

அட!....
பூக்களெல்லாம்
பூக்கின்றனவே....
தூரத்தே
உன் கொலுசுச்
சத்தம்!

### விடியல்

உன் சம்மத சமிக்ஞை
வந்தது...
நான் இப்போது
நானில்லை!!

*–வாலிப்பிரியன், தாராபுரம்.*

## மிகச் சிறந்த கவிதையின் மரணம்

இளந்தாரிப் பருவத்தில்
அல்லது கிழடு தட்டி
நிர்வாணமாய் நின்றிருக்கையில்
இயற்கையாகவோ
செயற்கையாகவோ
இறந்திருக்கக்கூடும் இந்த மரம்.

இப்படி கறையான் நுனைத்து
மரவட்டை கூடுகளென
உழுத்து உருமாறிப்போய்
அனாதரவாய் கிடக்குதிந்த மரம்.

இலையும் கிளையும்
கூடும் குஞ்சுகளுமென
ஒரு குட்டிச் சரணாலயமாய்
இதன் கடந்த காலம்
மிகவும் பசுமைகள் அடர்ந்தது.

பாம்பொன்றின் பிடியிலிருந்து
தப்பித்த எலியொன்றை
வயிற்றினுள் மறைத்ததில்
தன் பிறவிப்பயனை
இந்த மரம் அடைந்திருக்கும்.

ஒரு பனி மனிதன்
இதை எரித்து குளிர்காயுமுன்
யாரேனும் வந்திங்கு
வசந்த காலம் பற்றி வினவுங்கள்.

*–ரதுமான் ஏ.ஜமீல், மருதமுனை.*

## இனவ(ா)தம்

சுனாமி
வந்துபோன
சுவடுகள்
இன்னும்
அழியவில்லை....
அதற்குள்...!
அக்கினி நாள்
பிரசவம்...!

தென்றல் கூட....
தீச்சுவாலை
வீசுகின்றது....
ஓ...!
நாளுக்கு நாள்
பிணவாடையை
சுவாசிப்பதனாலோ....!?

சுடுகருவி
சூரியனையும்
சுட்டதினால்
வெப்பக் கதிர்கள்
இரத்தத் துளிகளாக.....
இயற்கைக்கும்
இனவ(ா)தம்
எனப் பெயரிடுவோம்...!

*–கே.மகேஷ், ஆரையம்பதி - 01.*

## ஊமையாகிப் போனேன்

உன்
உன்னதமான உணர்வு
என் உள்ளத்தை
தொடுவதால் தானோ
உன்னையே நான்
தொடமுடியாத
தூரத்தில் இருக்கிறேன்.

வாழ்வின் வசந்தத்தைத் தேடி
வரட்சியில் நடக்கும்
நடைப் பிணமாக
நான் மாறிய போதும்
அன்று நீ
எனக்காகச் சிந்திய
வார்த்தைகளையே
இன்று நான்
காற்றலைகளில்
தேடியலைகிறேன்!

அன்று நாம்
ஊர் உறங்கிய வேளையிலே
சாலையோரத்தில்
சாய்ந்து பேசிப்பார்த்தோம்
இன்று நீயே....

உறங்கிப் போன
சில உண்மைகளுக்காக
நான் இப்போது
ஊமையாகிப் போனேன்!

*–எம்.ஏ.றமீஸ், அட்டாளைச்சேனை - 10.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*"சத்தியம், அர்த்தத்தளம், உண்மை என்பதன் உற்பத்தியாக மொழி இல்லை. மொழியே தனது அலைவின் கதையாடல்களினால் இவ்வம்சங்களைப் பிறப்பிக்கிறது" என்ற சிந்தனைப் புரிதலின் ஊடாக இலங்கையில் பின்நவீனத்துவ புனைவு வெளியில் சஞ்சரிக்கும் மிக முக்கியமான பிரதியியலாளர் றியாஸ்குரானா - (Riyas Qurana) - (இலங்கை). புதுக் கவிதைகளே ஒரு மரபார்ந்த எழுத்துச் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் சமகாலத்தில்லு மையங்களைத் தகர்க்கும் பிரதியியலில் முடிவுறாத பரிசோதனையை மேற்கொண்டு வரும் இவரது புனைவுகளிலிருந்து சில துளிகள்!*

### அவனுடைய கதைக்குள் மழை தூறக் கண்டபோது....

மலையைத்தாண்டி
புல் வெளியில் நடக்கும்போது
கதைக்குள் நின்ற மரத்தில் மழை தூறத் தொடங்கியது.
அருகே செல்லுவதற்குள்,
கண்முன்னே.
இலைகளிலிருந்து கரையத் தொடங்கி
மரம் நின்ற இடத்தில் புல் முளைத்து விட்டன.
கதைப்படி,
மரத்தில் அமர்ந்து பாடவென
மேகங்களுள் புதைந்து கிடந்த பறவைகள்
பறந்து வருகின்றன.
பறவைகளின் பாடல் மெல்ல மெல்ல அதிகரிக்கிறது.
சில நிமிடங்களுள் வந்துவிடும்.
அதற்குள், ஒரு விதைபோட்டு மரமாக்க முடியாது.
கைகளைக் கிளை விரித்து
கால் விரல்களை வேரிறக்கி
அசைந்து காற்றில் தாவுகிறேன்.
பறவைகள் வந்து அமர்கிறது.
சொண்டுரசி
சிறகுலர்த்தி
பாடிக்கிடக்கிறது நடந்த எதையும் அறியாத பறவைகள்.
பறவைகளோடு வந்த அவள்
சிறகடித்துக் காற்றில் மிதந்துகொண்டே தேடுகிறாள்.
என்னைக் காணாத அவளின் பாடல்
ஒவ்வொரு சொல்லிலும் துடித்துக் கதறுகிறது.
அவனுடைய புத்தகத்தைப் புரட்டினால்
எனது காதலி கதையெங்கும் அலைந்து திரிவதை
நீங்கள் காணலாம்.


### புகையால் எழுதப்பட்ட அவள் - இமைத்ததற்கு இன்னும் காரணம் அறியப்படவில்லை

ஒன்றன்பின் ஒன்றாக
சரசரவென நட்சத்திரங்கள் கொட்டுகிறது.
காற்றின் ஒருமுடி உதிர்ந்து
நானிருந்த ஜன்னல் வழியாக
ரயில் வண்டியெங்கும் பரவுகிறது.
இது இரவென்றும்
ஒரு பயணமென்றும் நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.
மரங்கள் பாய்ந்து தப்பிச் செல்கிறது.
அல்லது ரயில் வண்டி மரங்களைத் துரத்தி விடுகிறது.
ஜன்னலுக்கு வெளியே குதித்து
துள்ளித் திரிந்த எனது பகுதியை
ரயில் பெட்டிக்குள் இழுத்து வைக்கிறேன்.
எதிரே பெட்டியில் ஒட்டப்பட்டிருந்த
ஒரு பெண்ணின் புகைப்படம்
எனக்குள் இறங்கிச் செல்கிறது.
பேச முற்படுகிறேன்.
ஏறி வந்து மீண்டும் சுவரில் ஒட்டிக் கொண்டது.
எல்லாப் பாதைகளையும் திறந்து விட்டு
உறங்கவென எனக்குள்
ஒரு அழகிய இடமும் அமைத்துவிட்டேன்.
புகையால் எழுதப்பட்ட அவள் வரவில்லை.
வரமுடியாமல் போவதற்குரிய
காரணங்களைச் சோதிக்கிறேன்.
அழைத்துக்கொண்டே இருக்கிறேன்.
ஒரு எட்டும் எட்டிவைக்க முடியாமல் தவிக்கிறது.
எனவே, நான் நெருங்கிவிட
அவள் விழியிலிருந்து படரும் கொடியை
தாவிப்பிடித்து தொங்கிச் செல்கிறேன்
குனிந்து பார்த்தால் கீழே எதுவுமற்ற காற்று வெளி
பெரும் வெட்டவெளி
தப்பித்தவறி கையைவிட்டால் விழுவதற்கு
ஒருதுண்டு நிலமோ
சிறு புல் தரையோ
மலை முகடோ
கடலோ
கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதுவும் இல்லை.
முகத்தினருகே வந்து
அவளது மூக்கில் கால் வைத்து இறங்க எத்தனிக்கும்போது
இமைத்துவிட்டாள்.
அந்த ரயில் பயணம் முடிவுற்று
மூன்று வருடங்களையும் கடந்துவிட்டது.
நான் விழுந்து கொண்டேயிருக்கிறேன்.

### விமோசனம்

நூலகத்திலிருந்து வீடு திரும்புகையில்
அவனும் என் கூடவே வந்தான்.
முன்பு எப்போதும் அவனைச் சந்தித்த ஞாபகம்
நினைவில் தட்டுப்படவில்லை.
ஒரு பறவை
ஒரு மரம்
ஒரு நதி மூன்றும் அவனிடமிருந்தது.
நதி காலடியிலிருந்து இரைச்சலோடு
வளைந்து நீண்டு செல்கிறது.
இடையிடையே கூவி இறகடித்து
மீண்டும் வந்து பறவை மரத்தில் அமர்கிறது.
கிளையைப் பிரியும் சருகுகள்
எங்களில் பட்டும் படாமலும்
நதியில் விழுந்து மிதக்கின்றன.
கரைகளில், நானும் அவனும்
கதைத்துக்கொண்டு வருகிறோம்.
பெயரைச் சொல்ல மறுத்துவிட்டான்.
ஜெயமோகனின் காட்டில் வசித்ததாகவும்
தப்பிச் செல்ல பலமுறை முயற்சித்து
இன்றுதான் நிறைவேறியதாகவும் சொன்னான்.
மேலும் அவன் பேசியதாவது
நான் வசித்த காட்டில் நதிக்கு இடம்
தரவில்லை.
காட்டைத்தாண்டி ஓடிவிடும் என்பது
ஒரு பொய்யான காரணம்.
நதி உலவக்கூடிய சூழலும் சௌகரியங்களும்
அவனுடைய காட்டிலில்லை.
அதனால்தான் குளமாக்கப்பட்டுக் கிடந்தது
எனது நதி.
என்னைப் பின் தொடர்ந்து
காடெங்கும் ஒரு ஓநாயை அனுப்பியிருந்தான்.
எனது பறவை அச்சமுற்று நடுங்கி
என்னை வெறுக்கத் தொடங்கியிருந்தது.
ஓநாயைக் கூப்பிட்டடுக்குமாறு வேண்டியும்
அவன் விரும்பவில்லை.
எனது காதலி ஒரு முறை மாத்திரம்தான்
காட்டுக்குள் வர அனுமதிக்கப்பட்டிருந்தாள்
அதுவும், வழமையாகச் சந்திக்கும்
நதிக்கரையைத் தேடி காணாது திரும்பி
விட்டாள்.
அவள் தனது நினைவாய் எழுதியனுப்பிய
இந்தப் பறவை மட்டுமே
காட்டில் இருக்கிறது.
ஓநாய் குரைக்கும் ஒவ்வொரு முறையும்
ஒவ்வொரு சொல் வீதம்
பறவையிடமிருந்து உதிர்ந்து விட்டன.
கடைசிச் சொல்லும் கொட்டிய பிறகுதான்
நான் தனித்து விட்டதை உணர்ந்தேன்.
காட்டை விட்டு தப்பிக்க நினைத்தேன்.
பெயர் சொல்ல மறுத்த அவனுடைய நதி
எனது வீட்டுக்குள் நுழைந்தது.
காற்றில் படபடக்கும் புடைவைத் தொங்கல்
போல
எனது வீட்டு படுக்கையறையில் முழுவற்ற
நதியின் நுனி
பதறிக் கொண்டிருந்தது.
மரத்தடியிலிருந்த வீட்டுத் திண்ணையில்
விழுந்து கிடந்த பூக்களின் மேல்
இருவரும் அமர்ந்து கொண்டோம்.
தனது சிறகுகளில் நிரம்பிக்கொண்டிருக்கும்
சொற்களை
பறவை வாசிக்கத் தொடங்கியது.
அதோ நிர்வாணமாய் உன் காதலி
வந்து கொண்டிருக்கிறாள்
இப்போதைக்கு அவளைக் கவனி.
மீதியை நாம் நாளை பேசலாம் என்று கூறி
நதியில் குதித்து குளிக்கத் தொடங்கினேன்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : அஜித்
வயது : 25
முகவரி : c/o Anton roy, Paul - heyse str.21, Munnchen, Germany
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, சினிமா.



பெயர் : துதிலிகாந்த்
வயது : 18
முகவரி : மீலா கோலா வீதி, ரத்தோட்டை.
பொழுதுபோக்கு :
வழமையானவை



பெயர் : ஜெ. பெனடிக்
வயது : 30
முகவரி : C.C.S P.O.Box 224481, Doha - Qatar
பொழுதுபோக்கு :
வழமையானவை.



பெயர் : ம. அகிலன்.
வயது : 19
முகவரி : தேவர்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு :
வழமையானவை




## இனி முதுகை மறைக்க வேண்டாம்!

குளிக்கும் போது நாம் அதிகம் கவனம் செலுத்தாத பகுதி முதுகு. இதனால் பொதுவாக முதுகுப் பகுதி அழகிழந்து, மங்கலாக தோற்றம் அளிக்கிறது. அழகான முதுகு தெரியும் வகையில் பிறர் அணியும் உடைகளைப் பார்த்து நீங்கள் இனி பொறாமைப் பட வேண்டாம். இதோ உங்கள் முதுகு அழகு பெற சில குறிப்புகள்.

குளிக்கும் போது முதுகு தேய்க்க உங்கள் கைகளை விட பிரஷ் உபயோகிப்பது நல்லது. முதுகுப் பகுதியை முழுவதாக சுத்தம் செய்ய இப்பொழுது நீண்ட கைப்பிடி உள்ள பிரஷ் கடைகளில் கிடைக்கிறது.


வாரத்தில் ஒருமுறை சந்தனம் மற்றும் பன்னீர் கலந்த கலவையை முதுகில் தடவவும். உலர்ந்த பிறகு கழுவிவிடவும். இது முதுகிற்கு நல்ல பொலிவைத் தரும்.

முதுகை 'ஸ்க்ரப்' செய்வதால் உயிரிழந்த சருமம் அகன்று முதுகு புத்துயிர் பெறும்.

கடையில் கிடைக்கும் ஸ்க்ரப் உபயோகிக்க விருப்பமில்லை என்றால், வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

உலர்ந்த சருமத்திற்கு : இரண்டு தேக்கரண்டி சீனியுடன் நான்கு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெயை சேர்க்கவும். இந்தக் கலவையால் முதுகை நன்றாக தேய்க்கவும். பிறகு கழுவவும்.

எண்ணெய் பசை சருமத்திற்கு : இரண்டு தேக்கரண்டி சீனியுடன் ஆறு தேக்கரண்டி




எலுமிச்சைச் சாற்றை சேர்க்கவும். இதைக் கொண்டு முதுகை நன்றாக தேய்த்து, பின் கழுவவும்.

இது மட்டுமில்லாமல் நேராக நிமிர்ந்து நடப்பதும் உங்கள் முதுகிற்கு அழகை சேர்க்கும்.

இந்தக் குறிப்புகளைப் பின்பற்றினால், அடுத்த முறை ஷாப்பிங் போகும் போது முதுகை மறைக்கும் உடைகளைத் தேர்ந்தெடுக்க அவசியமில்லை!

## வீட்டிலேயே கைவிரல் நக ஒப்பனை (மேனிகியூர்)

**நக** ஒப்பனை மூலம் உங்கள் கைகளை மேலும் அழகாக தோன்றச் செய்யலாம். இதற்கு அழகு நிலையம் செல்ல வேண்டுமென்ற அவசியமே இல்லை. வீட்டிலேயே நக ஒப்பனை செய்ய இதோ சில குறிப்புகள் :



முதலில் நெயில் பாலிஷ் ரிமூவர் மூலம் நகப்பூச்சை அகற்றவும்.

கியூடிகில்களை வலுவாக்க கிரீமால் பாலிஷ் செய்யவும். பிறகு கைகளில் ஹேண்ட் கிரீம் தடவவும்.

ஒரு பாத்திரத்தில் வெந்நீர் எடுத்து அதில் ஷாம்புவை கொஞ்சம் ஊற்றவும். அதில் விரல் நகங்களை 5 நிமிடம் வைத்திருக்கவும். இதனால் கூடுதலாக கிரீம் இருந்தால் அகன்று விடும். கைகளைத் துடைத்துக் கொள்ளவும்.

நகத்தை வெட்டி ஃபைலை கொண்டு நகம் நெளிவு, வளைவாக இல்லாமலிருக்க நகத்தின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரை தேய்க்கவும். ஒரே திசையில் தேய்க்கவும்.

சூடான சோப்பு நீரில் கைகளை நனைக்கவும். பிறகு நக பிரஷைக் கொண்டு நகத்தையும், விரலையும் சுற்றி தேய்த்து அழுக்குகளை நீக்கவும்.



நகங்களில் பேஸ் கோட் தடவவும். பிறகு உங்களுக்குப் பிடித்த நகச்சாயத்தைப் பூசவும். காய்ந்த பிறகு இரண்டாவது, மூன்றாவது தடவை பூசவும். பேஸ் கோட் பூசுவதால் நகச் சாயம் சீக்கிரமாக உரியாது.



### டிப்ஸ் :


கைகளை மென்மையாக வைக்க, கை கழுவியவுடன் க்ரீம் மறக்காமல் தடவவும்.

நகங்களைக் கடினமாக வைக்க புரோட்டீன் மற்றும் சத்துள்ள உணவைச் சாப்பிடவும்.

வெயிலில் செல்லுமுன் முகத்திற்கு தடவும் சன்ஸ்கிரீன் லோஷனைக் கையிலும் மறக்காமல் தடவவும்.

## தோற்றத்தை மாற்றும் ஹேர் டை

**நரையை** மறைக்க ஹேர் டை என்ற காலம் போய், அழகை மேம்படுத்த ஹேர் டை என்ற காலம் வந்துவிட்டது. அயல்நாடுகளில் தலைமுடியின் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பழக்கம் வெகுநாட்களாகவே உள்ளது. இப்போது நம் நாட்டிலும் இளைஞர்களிடையே தலைமுடியை டை செய்து கொள்வது ஒரு ஃபேஷன் ஆகிவிட்டது. ஹேர் டை பற்றிய உண்மைகளை அறிந்து கொண்டு செயல்பட்டால் அது உங்கள் தோற்றத்தில் நல்ல மாற்றத்தை உண்டாக்கும்.



ஒன்றும் தெரியாமல், எல்லோரும் செய்கிறார்கள், நாமும் செய்வோமே என்று செய்தால் அதன் விளைவு கோமாளித்தனமாக இருக்கும்!

நீங்கள் முதல் முறையாக முடியை டை செய்யுமுன் ஒரு அழகு நிலையம் (ப்யூட்டி பார்லர்) சென்று அழகுக் கலை நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

உங்களுக்கு என்ன தேவை என்பதை அவரிடம் விளக்கவும். நீங்கள் புத்தகங்களில் பார்த்த படங்களையும் எடுத்துச் செல்லலாம். உங்கள் நிறத்திற்கேற்ற, உங்கள் முடியின் அமைப்புக்குத் தகுந்த நிறம் என்ன என்பது ஒரு அழகுக் கலை நிபுணரால்தான் கூறமுடியும்.

அழகு நிலையம் செல்லாமல் நீங்களே முடிவெடுக்க விரும்பினால், உங்கள் முடியின் ஒரு சிறிய பாகத்தை டை செய்து பார்க்கவும். அல்லது டை செய்து கொண்டு வெளியில் செல்லும்போது ஏற்படும் விளைவுகளைத் தாங்கும் மன உறுதியைத் தயார் செய்து கொள்ளவும்!

ஹேர் டையின் நிறம் முடிவாகிவிட்டது. வீடோ அல்லது அழகு நிலையமோ, முதலில் அலர்ஜி டெஸ்ட் செய்து, நீங்கள் பயன்படுத்த விரும்பும் ஹேர் டை உங்கள் சருமத்திற்குத் தீங்கு விளைவிக்காது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் முடியை முழுவதாக டை செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை. தலையின் முன் பக்கத்திலோ பின் பக்கத்திலோ மேலே இருக்கும் சில முடிகளை மட்டும் ஹை லைட் செய்யலாம். இதை பராமரிப்பதும் எளிது.

டை செய்த முடிக்கு அதிக பராமரிப்பு தேவை என்பதை மறந்து விடாதீர்கள். அதற்கேற்ற ஷாம்பூ கண்டிஷனர் ஆகியவற்றை உபயோகப்படுத்துங்கள்.

உங்கள் முடியை மருதாணியால் டை செய்திருந்தால், அந்த நிறம் முழுமையாக மாறும் வரை கெமிக்கல் ஹேர் டை உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.

குளித்த பிறகு ஹேர் ட்ரையர் அதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். முடி அதிகமாக சூடானால் உங்கள் டையின் நிறம் மாறி, ஆங்காங்கே வெளுத்து அசிங்கமாகத் தோற்றமளிக்கும்.

நாட்கள் செல்லச் செல்ல உங்கள் முடி வளருவதால், டை செய்த முடியில் புதிதாக வளர்ந்த முடி வித்தியாசமாகத் தோற்றமளிக்கும். அதனால் இரு வாரத்துக்கு ஒரு முறை வளர்ந்த முடியை டச் அப் செய்து கொண்டால் அழகாக இருக்கும். ஆரோக்கியமான பளபளப்பான கூந்தலின் இரகசியம் இதுதான்.

## கண்ணுக்குக் கீழ் கருவளையமா?

**மு**கத்தில் பவுடர் பூசுவதற்கு முன்பு கழுத்து மற்றும் முகத்தைப் பன்னீரால் நன்கு துடைத்துக் கொள்ளவும். இவ்வாறு செய்வதால் நாம் பூசும் பவுடர் நாள் முழுவதும் கலையாமல் மனம் வீசிக் கொண்டேயிருக்கும்.

இரண்டு கேரட்டை துருவி அதில் கொஞ்சம் பால்விட்டுக் கலந்து முகத்தில் பூசிக் கொண்டு சிறிது நேரம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

கண்களுக்குக் கீழ் கறுப்பு வளையம்



இருந்தால் வெள்ளை அல்லது வெளிர் நிற லிப்ஸ்டிக் பூசி அதன் மேல் பவுடர் பூசிக் கொண்டால் கருவளையம் வெளியே தெரியாது.

வெள்ளரிக்காயைத் துருவி வெண்ணெயில் கலந்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து அதைக் கழுவினால் முகம் நல்ல பளபளப்பாக இருக்கும்.

நான்கு மேசைக் கரண்டி கெட்டியான தேங்காய் பாலில் எலுமிச்சைப் பழத்தை பிழிந்து பின்னர் அதை நன்றாகக் கலந்து அந்தக் கலவையை தலையில் தேய்க்க வேண்டும். இவ்வாறு வாரத்திற்கு ஒரு தடவை தேய்ந்து வந்தால் கூந்தல் அடர்த்தியாக வளரும்.

இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு பன்னீர் கலந்த சந்தனத்தை உதடுகளில் பூசி வந்தால் வெண்மையாகவும் அழகாகவும் காட்சி தரும்.

ஆவாரம் பூவையும் சிறிது பச்சைப் பயறையும் சேர்ந்து அரைத்துக் கொண்டு சோப்புக்குப் பதிலாக உடம்புக்கும், முகத்திற்கும் பயன்படுத்தினால் முகத்தில்



எண்ணெய் வழியும் தொல்லை நீங்கி முகம் பொலிவாகக் காட்சி தரும்.

## சேலையைத் தேர்வு செய்வது எப்படி?

**உ**ங்களுக்கு அச்சு அசலா பொருந்துகிற, எடுப்பாக காட்டுகிற புடவையைத் தேர்வு செய்வது பற்றி சில சூப்பர் டிப்ஸ்.

புடைவைக் கடைகளுக்குள் நுழைவதற்கு முன்பு இதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் சேலைகளைத் தேர்வு செய்ய பகல் நேரத்திலேயே கடைக்குச் செல்லுங்கள். இரவிலும் செல்லலாம். சேலை தேர்வு செய்யும்போது முதலில் என்ன கலர் சேலை என்பதை முடிவு செய்யுங்கள். பிறகு அதன் டிசைனை முடிவு செய்யுங்கள். அழகான சேலை வாங்க இதுதான் சரியான முறை.



### கறுப்பு நிற பெண்ணா நீங்கள்?

கறுப்பு நிற பெண்கள் பளிச் கலர் சேலையையோ, பெரிதாகப் பூப்போட்டதையோ தேர்வு செய்யாதீர்கள். வெள்ளை, மஞ்சள், மெஜந்தா போன்ற லைட் கலர் சேலைகளும் அதில் பூக்கள் இல்லாமல் புது டிசைன்கள் நிறைந்ததாக இருந்தாலுமே உங்களுக்கு அழகு. சிகப்பு வண்ண சேலை எடுக்காதீர்கள்.

***சிவப்பு நிறப் பெண்களுக்கு...***

சிவப்பு நிறப் பெண்கள் பளிச் கலர் சேலையில் தான் அதிகம் மின்னுவார்கள். எனவே சிவப்பு, கறுப்பு, பச்சை என எதையும் தேர்வு செய்யலாம். அகல உயரமான பார்டர் கொண்ட சேலைகளும் பூக்கள் நிறைந்த சேலைகளும் உங்களை இன்னும் அழகுபடுத்தும். ஜிகினா வைத்த சேலைகளில் நீங்கள் இன்னமும் அபாரமாய் ஜொலிப்பீர்கள்.

### வெளிர் நிறம்

சுமாரான வெளிர் நிறமுடைய பெண்கள் மாடர்ன் டிசைன் உள்ள சேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். நெட்டுக்கு கோடு போட்ட சேலைகள் மற்றும் மேட்ஜிங்கான பிளவுஸ்கள் இவர்களுக்கு அழகூட்டும். பளிச்சென தூக்கிக் காட்டும் சேலைகள் இவர்களுக்கு நன்றாக இருப்பதில்லை. லைட்டான கலர்களே எடுப்பாக இருக்கும்.

சேலை எடுக்கும்போது கூடவே நெருங்கிய தோழி அல்லது அம்மாவை அழைத்துச் செல்லலாம். திருமணமானவரானால் உடன் கணவரை அழைத்துச் செல்லலாம். தேர்வு செய்வதில் குழப்பம் இருந்தால் தோழியுடன் சேர்ந்து ஆலோசனை செய்து புடவை எடுக்கலாம்.

விலை அதிகமாக இருந்தால்தான் சேலை டிசைன் அசத்தலாக இருக்கும் என்ற எண்ணம் இருந்தால் அதனை கைவிடுங்கள். குறைந்த விலையிலும் உங்களை மிளிரச் செய்யும் புடைவைகள் உண்டு.

சமையல் அறைகளில் பாலியஸ்டர், நைலோன், சிந்தடிக் போன்ற புடைவை அணிந்து வேலை செய்யாதீர்கள். காட்டன் புடைவைகளே நல்லது.

வேலைக்குப் போகும் போது லைட் கலர் சேலையும், விருந்து, விழாக்களுக்குப் போகும்போது திக் கலர் சேலையும், வெயில் காலத்தில் லைட் கலர் சேலையும், மழை காலத்தில் டார்க்



கலர் சேலையும் உகந்தது.

உயரமான பெண்களுக்குக் கோடு டிசைன்களும், குள்ளமான பெண்களுக்குப் பூ டிசைன்களும் அழகைத் தருகின்றன.

சேவை எடுத்தால் மட்டும் போதாது அணிவதிலும் கவனம் வேண்டும். நன்றாக இஸ்திரி செய்து மடிப்பு கலையாது உடுத்தப் பழகிக் கொள்ளுங்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

### முருங்கைக் கீரை பக்கோடா

தேவையான பொருட்கள் :-

| | |
|---|---|
| முருங்கைக்கீரை | - 1 கப் |
| வெங்காயம் | - 2 |
| கடலை மா | - 100 கிராம் |
| பச்சரிசி மா | - 100 கிராம் |
| கோதுமை மா | - 100 கிராம் |
| மிளகாய்த் தூள் | - 1 மேசைக்கரண்டி |
| கருவேப்பிலை | - கொஞ்சம் |
| கொத்தமல்லி | - கொஞ்சம் |
| பூண்டு | - 10 பற்கள் |
| எண்ணெய் | - 300 கிராம் |
| உப்பு | - தேவையான அளவு |

செய்முறை :-

முருங்கைக்கீரையை ஆய்ந்து, உப்பு சேர்த்து, வெங்காயம், பூண்டு பொடியாக அரிந்து, கருவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து அத்துடன் கடலை மா, பச்சரிசி மா, மைதா மா, மிளகாய்த் தூள் எல்லாவற்றையும் சிறிது நீர் சேர்த்து பிசைந்து கொள்ள வும். இந்த கலவையை அரை மணிநேரம் ஊறவைத்து, பின் வானலியை காய வைத்து, அதில் எண்ணெயை ஊற்றி சூடு வந்ததும் சிறிது, சிறிதாக போட்டு, வெந்து பதம் வந்ததும் எடுத்து சுவைக்கலாம்.

# ஒரு தாய் மகன் 56

ஆலிஸன் அப்படியொரு நிலைமையில் இருப்பாள் என்று பேஜின் அம்மா கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை. அவளைக் கண்டதும் ஒரு வினாடி விதிர்த்துப் போனாள். நர்ஸ் ஒரு நாற்காலி கொண்டு வந்து போட்டாள். ஆனால் அவள் உட்காரவில்லை. அலெக்ஸிஸ் உள்ளே வரக்கூடத் தைரியமின்றி, வாசல்படியிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்து நிமிட நேரம் யாரும் எதுவும் பேசக் காணோம். பின்னர் பேஜின் அம்மா அலெக்ஸிஸைக் கவலையுடன் பார்த்தாள். அவ்வளவு மேக்கப்பையும் மீறி அலெக்ஸிஸ் முகம் வெளிறிவிட்டது தெரிந்தது.

"அலெக்ஸிஸ், பாவம், இங்கே நிற்கவே கஷ்டப்படுகிறாள்" என்றாள் அம்மா.

ஆலிஸனைப் பார்க்க வந்திருக்கிறோம் என்று இவர்கள் சொல்லிக் கொள்வது உண்மையாயிருந்தால் அதற்குண்டான சிரமங்களை அனுபவிக்கட்டும்....

"டாக்ஸி வரவழைக்கிறேன். நீங்கள் சாப்பிடப் போங்கள்" என்றாள் பிடிவாதமாக.

"நீ எப்போது வீட்டுக்கு வருவாய்?"

"ஆண்டியைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வர ஐந்து மணியாகும். அதற்கு முன் நீ வந்து விட்டால், மிதியடியின் கீழே சாவியை வைத்திருக்கிறேன். எடுத்துக் கொள்" என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தாள் பேஜ். எப்படியும் ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு, கடை கண்ணிக்குப் போய் விட்டு, ஆறு மணிக்கு முன்னால் அவர்கள் வீடு திரும்ப மாட்டார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

**சென்ற வாரம்**

**மறுநாள் காலை ஆலிஸனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு போகிறார்கள். இரவானதும் படுக்கைக்கு சென்றார்கள். ஆலிஸனின் படுக்கையறையில் அக்கா படுப்பதை பேஜ் விரும்பவில்லை. ஆயினும் அக்கா படுப்பதை அவள் அனுமதித்தாள். நடு இரவில் பிராட் வீட்டிற்கு வந்ததால் பேஜ் அவன் மீது கோபப்படுகிறாள்....**

பேஜுக்கு மனம் வெறுத்துப் போயிற்று. இருவரும் ஒருத்தரைப் பற்றி ஒருத்தர் கவலைப்படுகிறார்களேயொழிய, மற்றவர்களின் வேதனையைப் பற்றித் துளியும் கவலை கிடையாது. அம்மா என்றைக்குமே இப்படித்தான். அலெக்ஸிஸைப் பாதுகாக்க வேண்டும். பேஜ் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை.

ஆலிஸன் அருகில் சிறிது நேரம் உட்கார்ந்து இருந்துவிட்டு, தாரென்ஸன் வந்தபோது அவனிடம் அம்மாவையும் அக்காவையும் பற்றிப் புலம்பிவிட்டு, ஸ்கூலுக்குப் போய் ஆண்டியை அழைத்துக் கொண்டு திரும்பியபோது அம்மாவும் அக்காவும் இன்னும் வீடு திரும்பவில்லை. ஆறு மணிக்குமேல்தான் வந்தார்கள் - கடைகளில் வாங்கிய ஏகப்பட்ட பொருள்களுடன்.

"அப்பப்பா! இந்த ஊரில் என்னவெல்லாம் கிடைக்கிறது!" என்றாள் அம்மா.

"ஆமாமாம்" என்று அலுப்புடன் பதிலளித்துவிட்டு, சமையல் வேலையில் மூழ்கினாள் பேஜ். எல்லாரும் சாப்பிட்டு முடித்தார்கள். பிராட் வரவில்லை. போனில் ஏதோ சாக்குச் சொல்லி விட்டான்.

ஆண்டியைப் பார்க்க அவன் அறைக்குச் சென்றபோது, படுக்கையில் அவன் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டாள் பேஜ். அவன் முகத்தில் வருத்தம் படர்ந்திருந்தது.

அவனருகில் அவள் உட்கார்ந்ததும், "என்னம்மா நீ, மறுபடியும் மறுபடியும் நீயும் அப்பாவும் சண்டை போட்டுக்கிட்டு இருக்கீங்களே?" என்றான் அவன்.

"சீச்சி, அப்பாவுக்கு ஆபீஸில் கடுமையான வேலை. அதனால் கோபம் வருகிறது" என்றாள் பேஜ். குழந்தையிடம் பொய் சொல்லுவது மேலும் மேலும் கஷ்டமாக இருந்தது அவளுக்கு.

"நீ அப்பாவைப் பார்த்துக் கத்திட்டிருந்தே. அப்பா உன்னைப் பார்த்துக் கத்திட்டிருந்தார்...."

"எல்லா அப்பா அம்மாக்களும் அப்படித்தான் நடுநடுவே கத்துவார்கள். சண்டை போடுவார்கள்" என்று கூறி அவனை அணைத்துக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டுத் தன் கண்ணீரை மறைத்துக் கொண்டாள்.

"பிஜான் சொல்கிறான் - அவன் அம்மாவும் அப்பாவும் இப்படித்தான் சண்டை போட்டுக்கிட்டு இருந்தாங்களாம். கடைசியில் அவன் அம்மா இங்கிலாந்துக்குப் போய் விட்டாளாம். பிஜானைப் பார்க்க வருவதேயில்லையாம்."

"அவர்கள் விஷயமே வேறே" என்றாள் பேஜ். உண்மையில் அவர்கள் நிலைமையும் தங்கள் நிலைமையும் ஏறத்தாழ ஒன்றுதான் என்று எண்ணிக் கொண்டாள். "அம்மாவைப் பார்க்காமல் பிஜான் ரொம்ப ஏங்குகிறானா?" என்று பேச்சை மாற்றினாள்.

"இல்லேல்லே. அவன் அம்மா அவன்கிட்டே கொஞ்சம் கூடப் பிரியமா இருக்க மாட்டாளாம். பிஜானுக்கு அவன் அப்பா கிட்டேதான் ரொம்பப் பிரியம். எனக்குக் கூட அவரைப் பிடிச்சிருக்கம்மா. ரொம்ப நல்லவரம்மா அவர் என்றவன், திடீரென்று ஏம்மா, நம்ம அப்பாவும் நம்மை விட்டு விட்டுப் போய்விடுவாரா?" என்று கேட்டான்.



அலெக்ஸிஸ்? அவள் வெறும் அலங்காரப் பொம்மை. இருதயம் கிடையாது.

மூவரும் வெளியே வந்தார்கள். மகளின் இடுப்பை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டாள் அம்மா. பேஜின் இடுப்பை அல்ல. அலெக்ஸிஸின் இடுப்பை.

"ஆலிஸனுக்கு ஒன்றுமில்லை. நன்றாய்த்தான் இருக்கிறாள்" என்றாள் அம்மா. ஆனால் அவள் உள்ளுக்குள் ஆடிப் போயிருப்பது முகத்தில் தெரிந்தது. "எந்த நிமிடத்திலும் விழித்துக் கொள்வாள் பார்."

ஏன் இப்படி யதார்த்தத்தை மறந்து பாசாங்கு செய்கிறாள் என்று பேஜுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. "உன்னால் எப்படித்தான் இப்படிச் சொல்ல முடிகிறதோ? ஆலிஸன் பயங்கரமான அபாயத்தில் இருக்கிறாள்" என்றாள்.

"அதெல்லாமில்லை. நல்லபடி எழுந்து கொள்வாள்" என்ற அம்மா, சற்று முன் பார்த்ததெல்லாம் மறந்துவிட்ட மாதிரி, "சரி, சாப்பிடுவதற்கு நாம் எங்கே போகப் போகிறோம்?" என்றாள்.


பேஜ் கண்டிப்புடன் "நான் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். எங்கேயும் வரப் போவதில்லை" என்றாள். இவர்களுடன் உட்கார்ந்து ஓட்டலில் விருந்து உண்ணவும் சீட்டாடவும் அவள் தயாராக இல்லை.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

(தாய் தொடர்வாள்.....)

## ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்

**15**



'பாரத நாடு பழம் பெரு நாடு
நீரதன் புதல்வர் இந் நினைவ கற்றாதீர்'
அகற்றவில்லை பாரதி! ஆனாலும் மன்னியும்

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்து குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு.'
- உடன்படுகிறேன் பாவேந்தரே! ஆனாலும் என்னைப் பொருத்தருளும்.

'பல்குழுவும் பாழ் செயும்
உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு'
-மெத்த சரி வள்ளுவரே! ஆனாலும் என்னை வையாதிரும்.

ஒரு நாடு தத்துவங்களால் மட்டுமே தலை நிமிர முடியுமா? முதுமக்கள் தாழி மட்டுமே ஒரு நாட்டின் கருவூலமாகிவிட முடியுமா?

தவறுகளின் குப்பைகளுக்குள் புதைக்கப்பட்ட தேசத்தில் மூச்சுவிட முடியுமா?

நிலவளமும் நீர்வளமும் ஒரு தேசத்தின் வளமாகுமா?

மாறிவரும் புத்தாயிரத்தில் அறிவு வளமும் உழைப்பும் வளமும் - உள்ள வளமும் ஒழுக்க - வளமும் தானே ஒரு நாட்டின் வளம்!

ஜப்பானுக்கு நான் சென்றது சிறகுகளோடு; மீண்டு நான் வந்தது கண்ணிலும் நெஞ்சிலும் அறையப்பட்ட ஆணிகளோடு.

அந்நாடு விடவும் எவ்வகையில் குறைந்தது என் நாடு?

சின்ன தேசம் - ஜப்பான்.

காயப்போட்ட புடைவை ஒன்று பறந்துபோய் பசிபிக் கடலில் விழுந்து கிடப்பது மாதிரி. வெறும் மூன்று லட்சத்து எழுபத்தேழாயிரத்து நானூற்று முப்பத்தைந்து சதுர கிலோமீட்டர்.

வெறும் - 12.65 கோடி ஜனத்தொகை.

நிலவளம் இல்லை; கனிமவளம் இல்லை; எண்ணெய் வளம் இல்லை.

ஆனால் தனிநபர் வருமானம் மட்டும் இருபத்துநான்காயிரத்துதொள்ளாயிரம் அமெரிக்க டாலர்.

நம்மூர் பணத்திற்குப் பதினொரு லட்சத்துத் தொண்ணூற்றைந்தாயிரத்து இருநூறு ரூபாய்.

எப்படி இது சாத்தியமாயிற்று?

இத்தனைக்கும் ஜப்பான் ஒரு சபிக்கப்பட்ட நாடு.

எந்த நேரத்திலும் அக்கினிக் குழம்பு துப்புவேன் என்று சாம்பல் நிறத்தில் பயமுறுத்தும் ஃபியூஜி எரிமலை.

எரிமலை வெடித்தால் உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு ஊர் விட்டு ஊர் ஓடும் மக்கள்.

எப்போதும் மழை வரலாம் என்பது மாதிரி, எப்போதும் பூகம்பம் வரலாம் என்னுமொரு நிலவியல்.

பூமியின் கீழே மண் தகடுகள் நகர்ந்து நகர்ந்து உள்ளே உடைந்து வெளியே நொறுங்கியதில், 1995இல் கோபே நகரமே பாலைவனத்தில் விழுந்த ஒற்றை மழைச்சொட்டாய் உள்ளோடிப் போனது.

பூகம்பமே அதன் பூகோளம்.

இயற்கை அழிவுகளல்லாமல் செயற்கையாகவும் சிதைவுண்டது ஜப்பான்.

1945 ஆகஸ்ட் 6 காலை 8.15 மணிக்கு ஹிரோஷிமா மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டில் ஜப்பானின் ஈரலே கருகிவிட்டது.

விறகு மூட்டி எரித்தபின் கருகிக்கிடக்கும் அடுப்பாய் ஒரு நகரமே நாசமாகிவிட்டது.

இப்படி... ஜப்பான் சபிக்கப்பட்ட நாடு; ஆனால் அதன் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள்.

காற்று வந்து உதிர்க்குமென்று பூக்காமல் போகுமோ பூங்கொடி?

பூகம்பத்தில் புதைந்து போன கோபே நகரத்தைப் பார்த்தேன்.

பூகம்பத்தின் சுண்டுவிரல் ரேகை கூட இப்போது அங்கே இல்லை.

புத்தம் புதிய நகரத்தைக் கட்டி எழுப்பி விட்டார்கள்; வான் தடவும் மாடங்கள். எல்லாம் நம்பிக்கையின் உயரங்கள்.

எரிமலை உமிழ்ந்த குழம்பின் குளிர்ந்த சாம்பலில் மும்மடங்கு மகசூல் கண்டறிந்தான். ஜப்பான் விவசாயி - சாம்பலில் உயிர்த்தெழும் நிஜமான ஃபினிக்ஸ் பறவைகள்.

அணுகுண்டு வீழ்ந்தழித்த ஹிரோஷிமாவை போர்கழிந்த சமுதாயத்தின் புதிய சின்னமாய் நிர்மாணித்தார்கள்.

செங்கிஸ்கான்களைக் கூட புத்தர்களாய் ரசவாதம் செய்துவிடும் புனித நகரமாய்ச் செய்து விட்டார்கள் ஹிரோஷிமாவை.

நாடு சபிக்கப்பட்ட நாடுதான்.
மக்கள் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள்.

*'நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*

*'எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே'*

-இது எத்தனை பெரிய உண்மை.

*'நாடோ காடோ*
*பள்ளமோ மேடோ*
*எங்கே மனிதர் நல்லவர் ஆவரோ*
*அங்கே நாடு நன்மை காணுமே'*

- இது அதன் பொருள். அதற்கு ஜப்பான் எடுத்துக்காட்டு.

*(தொடரும்...)*

*நன்றி :— திருமதி வைரமுத்து*

## வேதனைக் கவர்ச்சி



20 வயதுடைய எனீ கெல்டர் எனும் இந்த நடிகை அமெரிக்காவைச் சார்ந்தவர் பாலியல் தொடர்பான கவர்ச்சிப் படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்.

இவரது இந்தக் கவர்ச்சி நடிப்பின் பின்னணியில் ஒரு சோகம் படிந்திருக்கிறது.


அதாவது, கார் விபத்தொன்றில் சிக்கி முகம் அகோரமான தனது தாயின் முகத்தை சத்திர சிகிச்சை மூலம் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு நிதி தேடும் பொருட்டே இவர் இவ்வாறான திரைப்படங்களில் நடிக்க முன் வந்துள்ளார்.

தாயின் முகம் சரியானதும், இவ்வாறன திரைப்படங்களில் நடிப்பதை, தான் நிறுத்தி விடப்போவதாக எனீ கூறியிருக்கிறார்.

# காத்திருக்கும் ஆபத்து

**மிக** விரைவில் ஈராக்கில் ஓர் உள்நாட்டு யுத்தம் தொடங்கும் சாத்தியம் தெரிகிறது. இது சர்வதேச எண்ணெய்ச் சந்தையைக் கணிசமாகப் பாதிக்கக்கூடும். மீண்டும் பெட்ரோல் விலை ஏற்றம் என்று ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

கடந்த நான்கு மாதங்களாக அங்கே நடைபெற்றுவரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களும், மனித வெடிகுண்டுத் தாக்குதல்களும், பஸ் எரிப்புச் சம்பவங்களும், ஆள் கடத்தல் அட்டகாசங்களும் இதற்கு முன் வேறெங்கும் நடந்திராதவை. வெட்ட வெட்ட, ஈராக் தீவிரவாதிகள் மீண்டும் மீண்டும் எங்கிருந்து முளைத்து வருகிறார்கள் என்று தலையைப் பிய்த்துக்கொண்டு இருக்கிறது அமெரிக்கா. என்ன செய்தாலும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாத சூழ்நிலை. பணிந்து போவது என்றால், ஒரே நிபந்தனைதான் விதிக்கிறார்கள்... சதாம் ஹுசேனுக்கு மரண



தண்டனை விதிக்கக் கூடாது; அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்!'

இவர்கள் எல்லோருமே சதாமின் ஆதரவாளர்கள்தானா என்றால், இல்லை. சதாமின் ஆதரவாளர்களும் இந்தத் தீவிரர்கள் பட்டியலில் உண்டு. மற்றபடி அல்கொய்தா, ஹிஸ்புல்லா போன்ற சில தீவிரவாத அமைப்புகளின் ஈராக் கிளைகளின் உதவியுடன் உள்ளூர் இளைஞர்கள், பெரும்பாலும் வேலையில்லாதவர்களின் திருப்பணிகள் தான் இவை.

தீவிரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் தெம்பும் திராணியும் ஈராக் அரசுக்கு இல்லை என்பது வெளிப்படையாகிவிட்டது. அங்கே முகாமிட்டிருக்கும் அமெரிக்க இராணுவமும் கிட்டத்தட்ட தற்காப்பு யுத்தம்தான் செய்து வருகிறது. அவ்வப்போது சிலரைக் கைதுசெய்து போட்டோவுக்கு போஸ் கொடுத்தாலும், ஒட்டுமொத்தமாகப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்திலான நடவடிக்கை என்றும் ஏதும் எடுக்கப்படவில்லை. மாறாக, இரண்டு முக்கிய சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

1. ஈராக்குக்கான புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி, அதன் மீதான பொது வாக்கெடுப்பு நடத்தியிருக்கிறார்கள். (முக்கால்வாசிப் பேர் வாக்களிக்க வரவில்லை.)

2. சதாம் ஹுசேன் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஒழுங்கானதொரு அரசியலமைப்புச் சட்டம் அமையுமானால், ஈராக்கில் வன்முறைகள் ஓயும் என்று அமெரிக்கா சொன்னாலும், விவரமறிந்த அரசியல் நோக்கர்கள், இந்த வாக்கெடுப்பு வைபவத்தின் தொடர்ச்சியாகக் கண்டிப்பான ஓர் உள்நாட்டு யுத்தம் இருக்கிறது என்று அடித்துச் சொல்கிறார்கள்.

ஈராக்குக்காக அமெரிக்கா தைத்திருக்கும் ஜனநாயகச் சட்டை, கிட்டத்தட்ட பபூன் சட்டை போலத்தான் இருக்கிறது. ஈராக்கின் முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர், சமீபத்தில் இது விஷயமாக அல் ஜஸீரா தொலைக்காட்சிக்கு ஒரு பேட்டி அளித்தார். அதில், "ஈராக்கில் அரசியல் அமைப்புச் சட்டம் இல்லை என்று யார் அழுதார்கள்? இங்கே மக்களுக்கு முதலில் வேண்டியது பாதுகாப்பு அதற்கு உத்தரவாதம் தருவதற்கு ஒருவருக்கும் துப்பில்லாதபோது, அரசியல் அமைப்புச் சட்டத்தை யார் கேட்டார்கள்? என்று அவர் கொந்தளித்ததை உலகமே பார்த்தது.

இது ஆத்திரத்தில் கொட்டப்பட்ட வார்த்தையல்ல! ஈராக்குக்காக அமெரிக்கா எழுதியிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டம் அப்படியே அமுலுக்கு வரும் பட்சத்தில் அங்கே இனக் கலவரங்கள் மேலும் அதிகரிக்கலாம்.

இலங்கையில் கூட இரண்டு தசாப்த காலத்திற்கு மேல் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற போதும்கூட இலங்கைப் படையினரை, அந்நிய தேசத்துப் படை என உள்நாட்டிலோ அல்லது சர்வதேச சமூகமோ கருதவில்லை. புலிகள் கூட உள்நாட்டில் அதுவும் தமிழ் மக்களிடம் மட்டும் ஆக்கிரமிப்புப் படை என்ற சொற்பிரயோகத்தை அடக்கியே வாசித்தார்கள்.

மறுபுறம் சமாதானப் பேச்சுவார்த்தை என வந்தபோது அதே இலங்கை முப்படையிலும், பொலிஸிலும் இன விகிதாசார ஆட்சேர்ப்பு என்ற விடயம் முதன்மை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தந்தை செல்வா காலம் முதல், புலிகள் இலங்கை அரசுடன் நடாத்திய டோக்கியோ பேச்சுவார்த்தை ஈறாக, இறுதியாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த 3 கட்ட அமுல்படுத்தும் திட்டம் வரை எல்லாமே அரசியல் யாப்பின் மாற்றத்தினை ஒட்டியே இடம்பெற்று வருவது முக்கியமான விடயமாகும்.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட 6ஆம் திருத்தச் சட்ட மூலமும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போதான 13ஆவது திருத்தச் சட்டமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

ஆனால் ஈராக்கிலோ நிலைமை தலை கீழாகக் காணப்படுகின்றது.

காரணம், ஈராக்கில் இனக்குழுக்கள் அதிகம். ஷியா - சன்னி - குர்த் சண்டைகள் அதைவிட அதிகம். இதெல்லாம் அமெரிக்காவுக்கும், ஈராக்குக்கான அமெரிக்கத் தலைமை அதிகாரி போல் ப்ரெமருக்கும் நன்றாகத் தெரியும். சதாம் ஹுசேனைப் பிடித்தபோது We got him என்று பெருமை பொங்க அறிவித்த அதே போல் ப்ரெமரின் மூளைதான் 2003 நவம்பரில் ஈராக்குக்கான இடைக்கால அரசியல் அமைப்புச் சட்டத்தையும் தீட்டியது. அந்த இடைக்காலச் சட்டத்தை அடியொற்றித்தான் இப்போது நிரந்தர அரசியல் அமைப்புச் சட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

ஈராக்கின் பெரும்பான்மை மக்களான ஷியா முஸ்லிம்கள் இதனை ஏற்றுக்கொண்டுவிட்டதாக அமெரிக்கா பெருமையுடன் அறிவித்தாலும் சிறுபான்மை இனத்தவரான சன்னி பிரிவினரிடையே கடும் அதிருப்தி நிலவுகிறது. நடந்து முடிந்த வாக்கெடுப்பில் இவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. தங்களை முற்றிலும் தனிமைப்படுத்தி மொத்தமாக அழித்து விடுவதற்காகச் செய்யப்பட்ட வேலை இது என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். கையோடு, குர்திஷ் இனத்தவருடன் சேர்ந்து தேசமெங்கும் தீவிரமாகக் கலவரங்களை முடுக்கிவிடும் வேலைகளைத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த எதிர்ப்புக்கு இவர்கள் சொல்லும் காரணம் ஒன்றுதான். ஈராக்கின் பெரும்பான்மை மக்கள் ஷியா இனத்தவர் என்றாலும், கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அங்கு ஆட்சி செய்த சதாம் ஹுசேன் ஒரு சன்னி முஸ்லிம். அவரது காலத்தில் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்குப் பழிவாங்குவதற்காகவே இந்த அரசியல் அமைப்புச் சட்டம், முற்றிலும் ஷியா ஆதரவு நிலையை எடுத்திருப்பதாக இவர்கள் சொல்கிறார்கள். தவிரவும், சதாம் ஹுசேன் மீதான விசாரணைகள் எதுவும் முறைப்படி நடக்காது என்றும், ஆரம்பித்திருப்பது ஒரு கண்துடைப்பு விசாரணை மட்டுமே என்றும் அவருக்கு இறுதிக்கெடு விதிக்கப்பட்டுவிட்டது என்றும் இவர்கள் குமுற ஆரம்பித் திருக்கிறார்கள்.

இதற்கிடையில் ஈராக்கில் இருக்கும் அமெரிக்க உயர் அதிகாரிகள், சதாம் மீதான விசாரணை தொடங்கப்பட்டது குறித்தும், அரசியலமைப்புச் சட்டம் அரங்கேற்றப்பட இருப்பது குறித்தும் பொதுமக்களுக்கு



சதாம் ஹுசைன்

விளக்கமாக எடுத்துச் சொல்லும் பொருட்:டு தேசமெங்கும் தீவிரமாகச் சுற்றுப்பயணம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான இனக்குழுவினர், குறிப்பாக குர்திஷ் இனத்தவர்கள் அமெரிக்க அதிகாரிகளுக்கு வீட்டுக் கதவைக்கூடத் திறப்பதில்லை.

"எங்கள் தேசத்துக்கு என்ன வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அமெரிக்கப் படைகள் முதலில் வெளியே போகட்டும்; ஆட்சியை நாங்கள் அமைத்துக் கொள்வோம். ஈராக்கின் சரித்திரம் தெரியுமா இவர்களுக்கு? இனக்குழுக்களுக்கு இடையில் உள்ள முரண்பாடுகள், பகை குறித்துத் தெரியுமா? எதனால் நாங்கள் சண்டையிட்டுக் கொள்கிறோம் என்றாவது தெரியுமா? எத்தனை காலமாக நாங்கள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரியுமா? எங்களை மனிதர்களாகக் கூட யாரும் பொருட்படுத்தாத சூழ்நிலையில் யாருடைய பேச்சுக்கும் நாங்கள் செவிசாய்க்க வேண்டிய அவசியம் இல்லை. பார்த்துக்கொண்டே இருங்கள், இன்னும் கொஞ்ச நாளில் என்னவெல்லாம் நடக்கப் போகிறது என்று!" எனக் குமுறித் தீர்க்கிறார்கள் பல்வேறு இனக்குழுவினரும்.

யூப்ரடிஸ், டைக்ரிஸ் நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பான மெசபதோமியா என்கிற இன்றைய ஈராக்குக்கு ஒரு சரித்திர முக்கியத்துவம் உண்டு. உலகின் முதல் நாகரிகம் தோன்றிய இடம் அது. அங்கேதான் இப்போது உள்நாட்டு யுத்தம் என்கிற உச்சகட்ட அநாகரிக ஆபத்தும் காத்திருக்கிறது.

*நன்றி :- A.V.*

---

*6ஆம் பக்கத் தொடர்ச்சி.....*

*முஸ்லிம் காங்கிரஸ் அடகு.........*

மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் எச்சரிக்கையுடனான அறிவுறுத்தலில் இருந்த உண்மையைக் கிழக்கு முஸ்லிம்கள் ஐ.தே.க. ஆட்சியில் இருந்தபோது கண்டு கொண்டுள்ளார்கள்.

போர் இடம்பெற்ற காலத்தில் சந்தித்த இழப்புகளையும் அழிவுகளையும் விட போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளும் அழிப்புகளும் ஏராளம். எல்.ரீ.ரீ.ஈ. உடன் யூ.என்.பி உடன்படிக்கை செய்த போதெல்லாம் முஸ்லிம்களுக்கு இத்தகைய இழப்புக்கள் ஏற்பட்டன.

புலிகள் யூ.என்.பி.யோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் ஒரு பகுதியாக முஸ்லிம் சமூகத்தை அழித்தொழிப்பது இருக்குமோ என எண்ணுமளவுக்கு புலிகளதும் யூ.என்.பி.யினதும் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

1990ஆம் ஆண்டு யூ.என்.பி. - புலி உடன்படிக்கைக் காலத்தில் பல நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல கிராமங்கள் முஸ்லிம்கள் வாழ்ந்த தடயங்களே இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் வயற் காணிகள் புலிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் வாழ்ந்து வந்த நூறாயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் 90ஆம் ஆண்டு வெறுங்கையோடு வெளியேற்றப்பட்டார்கள். இன்றுவரை இவர்கள் அகதிகளாக நாடு பூராவும் அலைக்கழிந்து திரிகின்றார்கள்.

யூ.என்.பி. ஆட்சியிலிருந்த போதுதான் மன்னார், மாத்தளை, மாளிகாவத்தை, மாவனல்லை, கலேவெல, காலி, வத்தளை, புத்தளம், புழுதி வயல், சிறிமாபுர, ஊசிமுக்கால்துறை போன்ற இடங்களில் முஸ்லிம்களின் வீடுகள், வியாபார ஸ்தலங்கள், பள்ளிவாசல்கள் என்பன அடித்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டதோடு முஸ்லிம்கள் பலரும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

பொலிஸார் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க, அரசியல் பின்னணியோடு காடையர் கும்பல்கள் தென்னிலங்கையிலும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளைத் திட்டமிட்டு வழி நடத்தி வந்துள்ளனர்.

கிழக்கு மாகாணம் - புல்மோட்டையிலிருந்து பொத்துவில் வரையுள்ள அனைத்துக் கிராமங்களும் தினமும் புலிகளினால் தாக்கப்பட்டுள்ளன. யூ.என்.பி. ஆட்சி செய்தபோது மூதூர் நகரம் ஆறுமுறை புலிகளால் எரிக்கப்பட்டுள்ளன. கடைசியாக 2002ஆம் ஆண்டு வாழைச்சேனை மற்றும் மூதூர் வர்த்தக நகரங்கள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

வாழைச்சேனையில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் கண்முன்னே டயரில் போட்டு எரிக்கப்பட்டன.

படுகொலைகள், கடத்தல்கள், கப்பம் பறிப்பு, அபகரிப்பு, அச்சுறுத்தல், இம்சைப் படுத்துதல், தொழில் செய்ய விடாது தடுத்தல் போன்ற மனித உரிமை மீறல்கள் முஸ்லிம்கள் மீது நாளாந்தம் புரியப்பட்டுள்ளன.

இத்தனை அநியாயங்களும் யூ.என்.பி. அரசினதும், சர்வதேச கண்காணிப்புக் குழுவினரதும், யூ.என்.பி.யின் பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸினதும் அவதானிப்பின் கீழ்தான் நடந்தன என்பது துக்ககரமான உலகறிந்த உண்மையாகும். யூ.என்.பி.யின் ஆட்சிக் காலத்தின் போது சுமார் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் பலியாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

**-ஹுசைன்**

எனவே கடந்த காலத்தில் யூ.என்.பி. முஸ்லிம்களுக்கு இழைத்த துரோகங்களை மறந்து, இன்று ரணில் விக்கிரமசிங்க கூறும் வெறும் ஏமாற்று வாக்குறுதிகளையும் அவருக்காகத் துதிபாடும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கட்டுக் கதைகளையும் நம்பி முஸ்லிம் சமூகம் மோசம் போகக் கூடாது.

வெற்றிலை சப்புவோருக்கு சுவிங்கம் தரப்போகின்றேன் என்று கூறும் சிறுபிள்ளைத் தனமான, விவேகமற்ற, முஸ்லிம்களுக்கெதிரான மேற்குலக சக்திகளின் கைப்பொம்மையாகிவிட்ட தலைவரை நம்பி முஸ்லிம்கள் வாக்களிக்கக் கூடாது. அவ்வாறு நடந்தால் அது தற்கொலைக் கயிற்றை தானே கழுத்தில் மாட்டிக் கொள்வதற்கு ஒப்பானதாகும். இந்த வரலாறுகள் ஐ.தே.க.வின் ஆட்சியின் போது பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து பரிதவிக்கும் சகோதர தமிழ் மக்களுக்கும் பொருந்தும்.

**ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டுத். ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதை எழுதிக் கொண்டிருக்கும்போதே மேலே குறிப்பிட்ட மூவரில் ஹாபீர் நளீர் அகமட் நிலைமையை உணர்ந்து, முஸ்லிம்களைப் பாதுகாக்கும் தலைமையை ஆதரிக்கப்போவதாக அறிவித்துள்ளார். ஆகவே மக்களும் சரியான திசையில் பயணிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

# பூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## வவுனியாவில் இராணுவ வெறியாட்டம் 200க்கு மேற்பட்ட மக்கள் பலி

### 137 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

**தமிழ்** மக்களுக்கு சில சலுகைகள் வழங்கக் கோரி இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித் ஊடாக இந்தியா வழங்கிய உத்தியோகப்பற்றற்ற ஆவணமும் எந்தப் பயனையும் அளிக்கவில்லை. வெறும் வாதப்பிரதிவாதங்களே இடம்பெற்றதால் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்தது. 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி திம்புவில் ஆரம்பித்த இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலிருந்து ஆகஸ்ட் 17ஆம் திகதி தமிழர் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர். இருதரப்பும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி முதல்நாள் அதாவது ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி வவுனியா இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்களால் 200க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப் பட்டனர். வவுனியா நூல் நிலையம், கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டன. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளானார்கள். ஆண்கள், பெண்கள், பிள்ளைகளென இருநூறுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டமை வடக்கு, கிழக்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. வவுனியா இராணுவ முகாமுக்கு மிக அருகிலிருந்த மதகொன்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததன் விளைவாகவே இராணுவத்தினர் அட்டகாசம் புரிந்தனர்.

இந்தக் குண்டினை வைத்தவர்கள் இராணுவத்தினரா இல்லையா என்பது பற்றியும் திம்புப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்காக இது வைக்கப்பட்டதா

> **1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி திம்புவில் ஆரம்பித்த இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலிருந்து ஆகஸ்ட் 17ஆம் திகதி தமிழர் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர். இருதரப்பும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி முதல்நாள் அதாவது ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி வவுனியா இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்களால் 200க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். வவுனியா நூல் நிலையம், கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டன.**

என்பது குறித்தும் இதுவரை திட்டவட்டமான தகவல்கள் இல்லை. தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் வெளிநடப்புச்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

செய்வதற்கு முன்னர் கீழ்க்கண்டவாறு பேச்சுவார்த்தை மேசையில் வைத்துக் கூறினார்கள்.

"நாம் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும்பொழுது தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தில் தொடர்ந்து கொல்லப்பட்டு வருவதனால், எமது இனத்தைப் பூண்டோடு அழிக்கும் இலங்கை அரசின் நோக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக இலங்கை இராணுவத்தினர் வவுனியாவிலும் இதர பகுதிகளிலும் வெறி பிடித்து நடந்து கொண்டதனால், தாம் தமிழர் என்பதைத் தவிர, வேறொரு குற்றமும் புரியாதவர்கள், குழந்தைகள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். தம் தாயகத்திலேயே

(அரசியல் தொடர்)

தமிழ் மக்கள் சமாதானமாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியாத நிலை இருக்கும் வேளையில், நாம் திம்புவில் சமாதானத்துக்குரிய பேச்சுகள் நடத்துவதென்பது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கின்றது. திம்புவில் பேச்சுவார்த்தை நடத்துவதை நாம் நிறுத்திக்கொள்ள முயலவில்லை. ஆனால், திம்பு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அடிப்படை நிபந்தனையாகவுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறி விட்டதால் பேச்சுவார்த்தைகள் நடைபெற முடியாதிருக்கிறது'' என வெளிநடப்புச் செய்த தமிழ்க் குழுக்கள் தெரிவித்தன.

திம்புப் பேச்சுவார்த்தையின் தோல்வி இந்திய அரசாங்கத்தை ஆத்திரம் கொள்ள வைத்தது. இதன் எதிரொலியாகப் புலி இயக்கத்தின் சார்பில் கலந்து கொண்ட அன்ரன் பாலசிங்கம், ரெலோ சார்பில் பங்குபற்றிய நடேசன் சத்தியேந்திரா மற்றும் எஸ்.சி. சந்திரஹாசன் ஆகிய மூவரையும் இந்திய அரசு நாடு கடத்தல் உத்தரவை விடுத்தது. இந்த உத்தரவை எதிர்த்து தமிழகத்திலுள்ள திராவிடக் கட்சிகளும் மக்களும் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர். மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டன. கலைஞர் கருணாநிதி தலைமையில் மறியல் போராட்டங்களில் ஈடுபட்ட பல நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். தமிழக மக்களினதும் கட்சிகளினதும் எதிர்ப்புப் போராட்டம் இந்திய மத்திய அரசை அடிபணிய வைத்தது. இந்திய அரசு நாடு கடத்தல் உத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டது.

எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனா, திம்புவிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் புதுடில்லியில் தரித்து நின்று பிரதமர் ராஜிவ் காந்தியுடனும் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் பேசினார். கொழும்பு திரும்பியதும் எச்.டபிள்யூ., தனது சகோதரரும் ஜனாதிபதியுமான ஜே.ஆருக்கு திம்புப் பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்கிக் கூறிய பின்னர் இந்தியாவுக்கும் தமிழ் குழுக்களுக்குமெதிராக பாரிய கண்டனப் பிரசாரங்களை மேற்கொண்டார்.

திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழ் தரப்புகள் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்தன வென்றும் நாட்டைப் பிரிப்பதே அவர்களின் நோக்கமென்றும் அவர் கூறினார். அத்துடன் தமிழர் தரப்புகளுக்குப் பக்கச்சார்பாக இந்தியா நடந்து கொண்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். தமிழர் தரப்புகள் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றஞ் சுமத்தின. இலங்கைப் பிரதமர்களுடன் முன்னர் செய்து கொண்ட சகல ஒப்பந்தங்களுமே கிழித்தெறியப்பட்டிருக்கின்றனவென்று தமிழ் தரப்புப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினார்கள். முதலில் இலங்கை அரசுகள் மீது நம்பிக்கை வைப்பதா இல்லையா வென்ற அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று அவர்கள் கூறினர். இந்த நம்பிக்கையீனத்தின் காரணத்தாலேயே இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புகளுக்குமிடையில் எட்டப்படும் எந்தத் தீர்வுக்கும் இந்தியா உத்தரவாதமளிக்கும் தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமெனக் கோருவதாகவும் தமிழ் தலைவர்கள் தெரிவித்தார்.

ரொமேஷ் பண்டாரி திம்புப் பேச்சுவார்த்தையின்போது நடந்து கொண்ட விதமும் சென்னையில் தமிழீழக் குழுக்களோடு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய விதமும் அவர் தமிழர் தரப்புகள் குறித்து ஏமாற்றமும் ஆத்திரமும் கொண்டிருந்தாரென்பதை எடுத்துக் காட்டியது.

இலங்கை இனப் பிரச்சினை குறித்தோ அல்லது தமிழர் தரப்புப் பிரச்சினைகள் குறித்தோ ரொமேஷ் பண்டாரிக்குப் போதிய அனுபவமும் ஆளுமையும் இல்லையென்பதற்கு அக்காலகட்டத்தில் இந்திய உயர்ஸ்தானிகராகக் கொழும்பில் பணியாற்றிய ஜே.என்.தீக்ஷித்துக்கும் பண்டாரிக்குமிடையில் நடைபெற்ற உரையாடலை உதாரணமாகக் காட்டலாம். திம்புப் பேச்சுக்களின் முதல் சுற்று தோல்வியுற்ற பின்னர், இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்படுவதற்கென தமிழர்களுக்குச் சில சலுகைகள் வழங்கும் வகையில் உத்தியோகப்பற்றற்ற ஆவணமொன்று தயாரிக்கப்பட்டது. சென்னையில் தமிழீழக் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேச ரொமேஷ் பண்டாரியுடன் தீக்ஷித்தும் 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்றிருந்தபோது இச் சம்பாஷணை இடம்பெற்றது.

**ரொமேஷ் பண்டாரி** : இலங்கை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகப்பற்றற்ற ஆவணம் பற்றி மிதவாதத் தமிழ் தலைவர்களுக்கு அறிவித்து விட்டீர்களா?

**தீக்ஷித்** : இல்லை. எனக்கு அவ்வாறான எந்த அறிவுறுத்தல்களும் இந்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

**ரொமேஷ் பண்டாரி** : நீங்கள் கொழும்பு திரும்பியதும் அந்த ஆவணங்களைச் செல்வநாயகத்திடம் கையளியுங்கள்.

**தீக்ஷித்** : செல்வநாயகம் காலமாகிப் பல வருடங்கள் கழிந்து விட்டன. கலாநிதி நீலன் திருச்செல்வத்திடம் நான் அவற்றைக் கையளிக்கிறேன்.

**பண்டாரி** : செல்வநாயகமோ திருச்செல்வமோ யாரிடமாவது கையளியுங்கள். இந்தத் தென்னிந்தியப் பெயர்களெல்லாம் ஒரே குழப்பமாகவே இருக்கின்றன.

இப்படிச் சொன்னார் பண்டாரி. ரொமேஷ் பண்டாரிக்கு இலங்கைப் பிரச்சினை குறித்து போதிய அனுபவமில்லையென்பதையே இது காட்டுவதாக தீக்ஷித் குறிப்பிட்டிருந்தார்.


(தொடர்ந்து வடியும்....)




**அ**துவும் உடனடியா வேணும்''. ஜயந்தன் பேசினார்.

"செஞ்சுட்டாப் போகுது'' என்ற சந்து நாயர் உடனே கடைக்குட்டி மகனான விக்கிரமனை அழைத்தார். ஜயந்தனுக்கு தேவைப்படுவதையெல்லாம் உடனடியாகக் கொண்டுவந்து சேர்க்குமாறு அவனிடம் கட்டளையிட்டார்.

அவனும் தலையாட்டிவிட்டு



புறப்பட்டான்.

நள்ளிரவு 'சந்துநாயரின் தென்னந்தோப்பின் நடுவிலிருந்த தேங்காய் கோடொனில் ஹோமத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

கழுத்தை நெரித்து, மூச்சுச் திணற வைத்து கொலை செய்யப்பட்ட நாராயணியின் உடம்பு, அந்த கோடௌனுக்குள் ரகசியமாகக் கொண்டுவரப்பட்டு, கிடத்தப்பட்டது.

**எழுதுவது சிவன்**

"சந்துநாயர் மட்டும் இங்க இருந்தால் போதும், மத்தவங்க கூப்பிட்டா கேக்குற தொலைவில் வெளியே நில்லுங்க. நான் சொன்னபடி நடக்கலேன்னா, அதுக்கான பலனை அனுபவிக்க வேண்டியிருக்கும். அதுக்கு நான் பொறுப்பில்லை.'' ஜயந்தன் எச்சரிக்கை செய்தார்.

ஹோம குண்டலத்தில் புகை உயரத் தொடங்கியது.

"அந்தப் பிணத்தின் உடம்பில் ஒரு பொட்டு நூல் கூட இருக்கக் கூடாது!'' - ஜயந்தன் கட்டளையிடுவது போல் பேசினார்.

ஹோமத்துக்கான எல்லாம் தயாராக இருந்தன. பிணத்தை மடியில் வைத்துக் கொண்டுதான் ஹோமத்துக்கான கிரியைகளைத் தொடரவேண்டும்.

ஹோமத்தின் போது தேவதையாகக் கற்பித்துக் கொள்ள உயிருள்ள மற்றொரு பெண் தேவை. அதற்கும் ஜயந்தன் ஏற்பாடு செய்திருந்தார்.

ஜயந்தன் வசிக்கும் நாகத்தான் பாறையின் அடிவாரத்தில் வசிக்கும் மலைவாசிப் பெண் அவள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பங்கெடுப்பதற்காகவென்றே அவளை அவர் பழக்கி வைத்திருந்தார். இதற்கு முன்பும் இரண்டு மூன்று முறை அவளை இதுபோன்ற கர்மங்களில் ஈடுபடுத்தியிருக்கிறார்.

ஒவ்வொரு தடவையும் ஹோமம் முடிந்து அவளை அனுப்பும் போது உதவியதற்காக ஒரு தொகையையும் அவளிடம் கொடுத்து அனுப்புவார். அதனால் அவளது பெற்றோர் தங்களது மகளை ஜயந்தனுடன் அனுப்புவதில் தயக்கமே காட்டியதில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தனர்.

ஹோம குண்டத்தில் ஜுவாலைகள் உயரத் தொடங்கின.

குமாரும், பிரபாகரனும் இல்லத்தின் திண்ணையில் அமர்ந்திருந்தனர்.

மணி பன்னிரண்டுக்கு மேலிருக்கும்.

அவர்களுக்கு உதவுவதற்காக வந்திருந்த ரேணுகா அவர்கள் அமர்ந்திருந்த திண்ணைக்கு வந்தாள்.

"என்னம்மா?'' - குமார் கேட்டார்.

"ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டியிருக்கு, இப்பத்தான் ஞாபகம் வந்தது'' அவள் பதிலளித்தாள்.

"நல்ல விஷயம் சொல்ல வந்த போ - இந்த நடுராத்திரி வேளையில!'' பிரபாகரன் சலித்துக் கொண்டான்.

"பரவாயில்லை நீ சொல்லும்மா!'' குமார் அவளைப் பார்த்துச் சொன்னார்.

"என்னமோ ஒரு பிரத்தியேகமான வாசனை வருதே'' கவனிச்சீங்களா?, அவள் கேட்டாள்.

பிரபாகரனும், குமாரும் அவள் சொல்வது உண்மைதானா என்று மூச்சை இழுத்து உள்வாங்கியவாறு சோதித்தனர்.

உண்மைதான்! சந்தன வாசனை காற்றில் பரவிக் கொண்டிருந்தது. அந்த வாசனை மிகவும் சன்னமாக வீசியது. அவள் சொன்னதை ஒப்புக்கொண்டவர்களாக இருவரும் அவளையே கவனித்தனர்.

"இந்த நடுராத்திரியில் இப்படியொரு வாசனை எங்கேயிருந்து, எப்படி வருதுங்கிறதைப் பத்தி யாராவது யோசிச்சீங்களா? குறிப்பா நாம இருக்குற சூழ்நிலையில இதைக் கவனிக்காம இருக்கலாமா?'' அவள் கேட்டாள்.

(வாசனை வீசும்....)

# அவர்களுக்கு அது ஹொரார்ஸ்கோப்!

**நமது** வாழ்க்கை பல நேரம் பயத்தில்தான் கரைகிறது!

வீட்டிலிருக்கும் இருட்டை விரட்டுவதற்காக ஒருவன், வாளி வாளியாக இருட்டை மொண்டு கொண்டுவந்து வீதியில் கொட்டிக் கொண்டிருந்தானாம். எத்தனை ஆண்டுகள் இப்படிச் செய்தாலும், இருட்டைச் சுற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் இருட்டை வெளியேற்ற முடியாது! ஒளி இல்லாமை என்பதுதான் இருட்டு.

அதனால் ஒரு சின்ன விளக்கை ஏற்றி வைத்தால், இருட்டு ஓடிவிடும்!

பயமும் இருட்டு மாதிரிதான். அன்பு இல்லாமைதான் பயம். அன்பு என்ற விளக்கை ஏற்றி வைத்தால், பயம் மறைந்துவிடும். புரியவில்லை என்றால், அன்பின் ஒருவகையான, காதலை



எடுத்துக் கொள்ளுங்கள். காதல் எப்படி மலர்கிறது...? ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவர் மீது இன்னொருவர் கொள்ளும் நம்பிக்கையில்தானே காதல் பிறக்கிறது!


ஒரு பெண்ணின் மீது ஆணுக்கோ அல்லது ஆணின் மீது பெண்ணுக்கோ நம்பிக்கை வராவிட்டால், அங்கே காதல் என்ற அன்பு கிடையாது!

சூ.ஃபி இலக்கியத்தில் வரும் முல்லா நஸ்ருதீனின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னால், இந்தத் தத்துவம் உங்களுக்குச் சுலபமாக விளங்கக்கூடும்.

முல்லா நஸ்ருதீனுக்கு அன்று காலையில்தான் திருமணம் நடந்தது. அன்றிரவு நதியைக் கடந்து, மறுகரைக்கு முல்லா நஸ்ருதீனும் அவரது இளம் மனைவியும் உறவினர்களோடு படகில் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று புயல் அடித்தது. நதியிலே வெள்ளம் கரை புரண்டது. இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு பேயாட்டம் ஆடியது. மணப்பெண் உட்படப் படகில் இருந்த அத்தனை பேரையும் மரண பயம் தொற்றிக்கொண்டது. ஆனால், முல்லா மட்டும் பயமேதும் இல்லாமல் இருந்தார். இதைப் பார்த்த புது மணப்பெண், "உங்களுக்குப் பயமாக இல்லையா..?" என்று கணவரை ஆச்சரியத்தோடு கேட்டாள். அதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லாமல் தன் இடுப்பிலே செருகியிருந்த கத்தியை எடுத்து மனைவியின் குரல்வளையைக் குத்துவது போல் ஓங்கினார். மனைவியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. அப்போது முல்லா நஸ்ருதீன் தன் மனைவியைப் பார்த்து, "கத்தி என்றால் உனக்குப் பயமாக இல்லையா...?" என்று கேட்டார். அதற்கு அவரது மனைவி, "கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால், அதைப் பிடித்துக் கொண்டிருப்பவர், என்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர். அதனால் நான் பயப்படவில்லை..."என்றாள்.

"அதேபோலத்தான் எனக்கும், இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால், இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் அன்புமயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை..."என்றாராம் முல்லா நஸ்ருதீன்.



முல்லா நஸ்ருதீனுக்கு அல்லாஹ் மீது நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. அல்லாஹ் மீது அவருக்கு நம்பிக்கை இல்லையென்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லையென்றால், படகில் பயணித்த மற்றவர்களைப் போல முல்லா நஸ்ருதீனும் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்திருப்பார்.

இதே உண்மையை நம் வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்கலாம். நமக்குப் பயம் ஏற்படுகிறது என்றால், நம் மீதே நமக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள்!

"நான் கடவுளுக்குப் பயந்தவன்..."என்று பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இது அபத்தமானது. கடவுளிடம் நாம் செலுத்த வேண்டியது அன்புதானே தவிர, பயம் இல்லை!

"நமது உபநிஷத்துகள் சொல்லும் மிகப்பெரிய விஷயமே, பயம் இல்லாமல் இரு" என்பதுதான்....என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

சிலர் தங்களின் ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு, 'எனக்கு மரணம் எப்போது வரும்...?' என்று தெரிந்துகொள்ள ஜோசியர் மாற்றி ஜோசியராகப் போய்க் கொண்டே இருப்பார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் ஹொரஸ்கோப் (ஜாதகம்) என்பது ஹொரஸ்கோப்!

இம்மாதிரி நபர்கள், வாழும்போது என்ன செய்யலாம் என்பதைவிட, எந்த நேரம் இறந்துவிடுவோமோ என்ற பீதியிலேயே உருகி உருக்குலைந்து கொண்டிருப்பார்கள்!

மரண பயம் பற்றி தாகூர் சொல்லும்போது.....

"நீ இந்தப் பூமியிலே வந்து பிறப்பதற்கு முன்னதாகவே உனக்காக, உன் தாயின் இரண்டு தனங்களிலும் பாலைச் சுரக்க வைத்தவன் இறைவன்...நீ இறந்த பின்னும் உனக்காக இன்னொரு உலகத்தையேகூட அவன் படைத்து வைத்திருக்கக்கூடும்! அதனால் நம்பிக்கையோடு இரு..."என்கிறார்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான் சொல்ல முடியும். எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள்..தவறில்லை. ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் பயப்படுவதால் உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும்!

பணம் திருடப்போகாமல் இருக்க, 'அதை எங்கே, எப்படி வைப்பது....மீறி திருட்டுப் போனால் இன்ஷுரன்ஸ் மூலம் எப்படிப் பாதுகாப்புப் பெறுவது' என்று திட்டமிடுங்கள். இதில் எதையும் செய்யாமல் சும்மா நின்று பயப்படுவதில் அர்த்தமில்லை.

'பரீட்சையில் ஃபெயிலானால்...!' என்று விபரீதமாகக் கற்பனை செய்யாதீர்கள். உங்களை நீங்களே பலவீனமாக்கிக் கொள்கிற அந்த நேரத்தைப் பரீட்சையில் எப்படி பாஸாவது என்பது பற்றிச் சிந்திப்பதில் செலவிடுங்கள்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 144க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சஹ்றானி சாகுல் ஹமீத், திகழி, ஏத்தாலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. துரைராஜன் றஜனிகாந்தா, 'மடம்', ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
2. எம். சாந்திகுமார், அரச கால்நடை மருத்துவர் விடுதி, மஸ்கெலியா.
3. என். சஞ்சீவன், 296, டைக் வீதி, திருகோணமலை.
4. ஐ.எஸ் இப்றாகீம், 14, ஏ.கே.எம். குறுக்குவீதி, ஏறாவூர் 03A.
5. எப். சனாஸ் அலி, றொஷான் மல்டி ட்ரேடர்ஸ், புகாரி சந்தி, கிண்ணியா 05.
6. ஆர். உதிஸ்ரா, ஹேகித்த வீதி, ஹெந்தலை, வத்தளை.
7. கணேஷ் சௌமியா, சுனாமி அகதி முகாம், குறிஞ்சாக்கேணி -02, கிண்ணியா.
8. ஆனந்தசிவம் பிரியந்தினி, குமரகிரி, பலாலி றோட், திருநெல்வேலி.
9. சுப்பையா விஜயரட்ணம், 113/2 சேலம் பிரிச், நாவலப்பிட்டி.
10. ரி. சங்கர், 50, ஆமர் வீதி, கொழும்பு 12.

### குறுக்கெழுத்துப் போட்டி 146

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| | 32 | | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. புரட்சிக் கவிஞர்.
7. இதற்கு அதிபதி சரஸ்வதி (திரும்பியுள்ளது).
10. குடிக்கும் உணவுப் பதார்த்தம். (திரும்பியுள்ளது).
13. இந்துக் கோயில்களில் இதை தாங்கி ஆடுவர். (குழம்பியுள்ளது).
17. நிலவு என்று பொருள்படும்.
21 உடலில், கை, கால்களில் ஏற்படும் நோய் (குழம்பியுள்ளது).
25. கூட்டம் என்று சொல்லலாம். (குழம்பியுள்ளது).
34. சுவைகளை அறியும் உறுப்பு. (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. வறண்ட சூனியப் பிரதேசம்.
2. காட்டு மிருகமொன்று. (குழம்பியுள்ளது)
4. பழைய காலத்து இசைக்கருவியொன்று.
5. கிருஷ்ணரின் அவதாரங்களில் ஒன்றான ஆமை. (குழம்பியுள்ளது).
15. அன்பு.
22. சொல் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).
26. குதிரை.
30 நன்றியுள்ள மிருகம். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 144 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 மா | 3 வ | 4 ளி | | 6 த |
| 7 ர் | 8 தா | | 10 வ | 11 கி | 12 ங் |
| 13 மா | 14 ம் | 15 ன | | 17 தை | 18 க |
| 19 ன | 10 ளா | 21 ம் | 22 ஏ | | 24 ம் |
| 25 ம் | | 27 தா | 28 க | 29 ம் | |
| | 32 தீ | | 34 ம் | 35 த | 36 பி |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 15.11.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-146
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# குச்சி ஐஸ்.....

**புற்களின்** மேல் தூங்கிக் கொண்டிருந்த பனித் துளிகளைச் சத்தமின்றி விழுங்கிக்கொண்டு தனது செங்கதிர்களைப் பூமியெங்கும் பரப்பிய வண்ணம் உதித்துக்கொண்டிருந்த கதிரவன் ஒளிபட்டு விழித்துக்கொண்டான் கமலேசன்.

முதல்நாள் இரவு திடீரெனப் பெய்த மழை வீட்டையும் அவன் குடும்பத்தையும் கேட்காமலேயே குளிப்பாட்டியிருந்தது. அதனால் அந்த மழைமேல் அவனுக்கு அதீத கோபம். அனைவரும் மழை வராதா வராதா என்று எதிர்பார்த்திருக்க.... மாரியம்மனுக்கு கூழ் காய்ச்சுவதாக வேண்டிக் கொள்வான் இவன்..... மழை வராமல் இருப்பதற்காக. போன மார்கழிக்கு எண்ணியிருந்தான்...எப்படியாவது இந்தக் கோடைக்கு கூரையையும், சுவர்களையும் ஓரளவிற்காவது திருத்தியமைக்க வேண்டுமென்று. ஆனால் அடுத்த மாரியும் வரப்போகிறது. இன்னும் அது முடியாத காரியமாகவே இருக்கிறது. அவன்தான் என்ன செய்வான். 'குச்சி ஐஸ்' வியாபாரமும் முன்னர்போல் இல்லை. ஐஸ்கிரீம் சந்தைக்கு வந்தபின் குச்சி ஐஸை விரும்புபவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். புதிதைக் கண்டபின் பழசைக் கைவிட்டுவிட்டார்களே என்று அவன் அங்கலாய்ப்பதுண்டு. ஆனாலும் குச்சிஐசின் ருசியும் அந்த ஹாரனின் சத்தமும் இன்னும் பலரின் நாக்கில் சுவை கொட்டத்தான் செய்கிறது.

அந்தக் குட்டி அறையின் மூலையில் சுருண்டு படுத்துக் கிடந்த நிறைமாதக் கர்ப்பிணி மனைவியையும், குளிர்தாங்க முடியாமல் அவளை இறுக அணைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த மகனையும், மகளையும் பார்க்கையில் கவலையாயிருந்தது.... அத்தோடு இரவு முழுவதும் கண்விழித்து, ஒழுகிக்கொண்டிருந்த மழைநீரை வெளியேற்றிக் கொண்டிருந்ததில், மண்டைக்குள் பாறாங்கல்லை வைத்ததுபோன்று பாரமாகவும், வலியாகவும் இருந்தது. ஒரு முழுக்குப் போட்டால்தான் எல்லாம் சரியாகும் என்று கிணற்றடிக்குச் சென்றான்.

குளிர்ந்த நீர் பட்டதில் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றது போன்று இருந்தது. பகலவனும் மெல்ல மெல்ல தனது ஒளியால் பல இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான்.

அசதி காரணமாகத் தூங்கிக் கொண்டிருந்த மனைவி, பிள்ளைகளைச் சென்று எழுப்பினான்.

"எழுந்திருங்க பிள்ளைகள். பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு..." என்று அவர்கள் இருவரையும் எழுப்பி காலைக்கடன்களை முடிக்க அனுப்பிவிட்டு, மனைவியின் அருகில் அமர்ந்துகொண்டான்.

"என்னங்க."

"ம்...."

"நேற்றைக்கு கொஞ்சமா குத்து தொடங்கிற்றுது.... இண்டைக்கோ...நாளைக்கோ...எங்கட செல்வக் குழந்தை எங்களப் பார்க்க வந்திடும் போல இருக்குது...நீங்க ஒரு இடமும் போகவேணாம்...எங்கூடவே இருங்களேன்..." என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

"இல்லடா...முதலாளீட்ட கொஞ்சம் காசு கேட்டிருந்தனான். இண்டைக்கு வாடா தாரனெண்டு சொன்னவர்...நாளைக்கு தீபாவளி வேற, பசங்களுக்கும், உனக்கும் உடுதுணிகள் வாங்கவேணும்...அதனால நான் போயிட்டு சீக்கிரமா வந்திர்றன்..."என்று மற்ற வேலைகளைப் பார்க்க எழுந்துகொண்டான் கமலேசன்.

பலர் கேட்டிருக்கிறார்கள் அவனிடம்..."இவ்வளவு கஷ்டப்படுறியே, பிறகு பிள்ளைகளையும் ஏன் பள்ளிக் கூடத்தக்கு அனுப்பிறாய்... அதுக்குவேற தனியா செலவு செய்யவேணுமே..."என்று.

சிலர் ஏளனம் கூடச் செய்திருக்கிறார்கள். "ஒருவேளை சாப்பாட்டுக்கே வழியக்காணம்...அதுக்குள்ள அதுகளவேற படிக்கிறதுக்கு அனுப்பிறானாம்...அதுகள் படிச்சித்தான் என்னத்தப் பண்ணப் போகுதுகள்...பேசாம பிள்ளைகளையும் ஏதாவது வேலைக்கு அனுப்பினா...அதுகளாவது மூணுவேளையும் சாப்பிடுங்கள்" என்று.

ஆனால் இவன் அவை எதையும் பொருட்படுத்தவில்லை. தான்தான் படிக்கவில்லை... என் பிள்ளைகளாவது நல்லாப் படிக்கவேணும் என்று அவன் நினைத்தான். அதனால் "பிள்ளைகள வேலைக்கு அனுப்பாதைங்க.....அப்படி அனுப்பிறதும், வேலைக்கு வச்சிருக்கிறதும் சட்டப்படி குற்றம் என்டெல்லாம் அரசாங்கம் சொல்லுது. ஆனா சில படிச்சவங்களே சிறுவர்கள வேலைக்கு அனுப்பிறதும், வேலைக்கு அமர்த்திறதும்...அவங்கள துன்பப்படுத்திறதும் பார்க்கவே மனசுக்கு கஷ்டமாயிருக்கு... நான் சாகும்வரைக்கும் எப்பாடுபட்டாவது என் பிள்ளைகள படிக்கவைப்பன்" என்று அவர்கள் முகத்திற்கு நேராகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறான்.

அப்படி வைராக்கியமாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டானே ஒழிய, பிள்ளைகள் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டுதான் செல்கிறது. இதற்கு என்னதான் மாற்று வழி என்று யோசித்துக் கொண்டிருக்கையில்....

"அப்பா...கொப்பி வாங்கித் தரயில்லையே...இன்டைக்கு எப்படி நான் பள்ளிக்குப் போறது...ரீச்சர் திட்டுவாங்களே..."என்று இளையவள் சிணுங்கினாள். அதற்கு அவன்

"அப்பா காசு வாங்கத்தான் டவுனுக்குப் போறன்... கட்டாயமா வரும்போது மகள் கேட்ட எல்லாமே வாங்கி வருவண்டா செல்லம்..."என்று அவள் உச்சிமுகர்ந்து சமாதானப்படுத்தி பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, தானும் புறப்பட ஆயத்தமானான்.

துவிச்சக்கர வண்டியில் ஐஸ் பெட்டியை நன்கு இறுகக் கட்டினான். ஏனைய உபகரணங்கள் சரியாக இருக்கின்றனவா என்று ஒரு கணம் சரிபார்த்துக்கொண்டு மனைவியிடம் சொல்லிவிட்டு புறப்படும்போதுதான் பார்த்தான் வண்டியின் சில்லில் காற்று இருக்கவில்லை. "ச்சா...காத்துப் போயிருக்கே.... நேத்து நல்லாத்தானே இருந்தது... என்ன நடந்தது..."என்று தனக்குள் பேசிக்கொண்டு சித்திரவேலின் சைக்கிள் கடையை நோக்கி நடந்தான்.

"என்ன கமலேசன் சைக்கிளுக்கு காத்து இல்லையா..."என்ற பலரது வழமையான எரிச்சலூட்டும் கேள்விகளுக்குப் பொறுமையாக பதில் சொல்லிக்கொண்டு கடையை அடைந்தவன், கடை இன்னமும் திறக்காததை அவதானித்து, மெள்ள கதவைத் தட்டினான். அப்பொழுதுதான் கடைக்கு வந்து சேர்ந்து துப்புரவு செய்துகொண்டிருந்த சித்திரவேல்...


"என்ன அண்ணே...காத்துப் போயட்டுதா...கொஞ்ச நேரம் இருங்க..வேலைய சீக்கிரமா முடிச்சுத் தந்திடுறன்..."என்று கூறிக்கொண்டே கடையைத் திறந்தான்.

"ஏன் வேலு இண்டைக்கு இவ்வளவு நேரம் சென்று போச்சு...உனக்கு ஏதும் சுகயீனமா...இல்ல வீட்டில யாருக்கும் வருத்தமா...."

"இல்ல அண்ணே...வீட்டில ஒருத்தருக்கும் ஒண்ணுமில்ல...உங்களுக்குத்தான் விஷயம் தெரியாதுபோல இருக்கு...."

"என்ன விஷயம் வேலு" என்று வினவினான் கமலேசன்.

"அண்ணே....இண்டைக்கு ஹர்த்தாலாமே...கடகண்ணி ஏதும் திறக்க வேணாம் எண்டு சொல்லியிருக்காமே...பாடசாலை, ஆஸ்பத்திரி எல்லாம் மூடச்சொல்லியாச்சாம்...அதுதான் நானும் பாத்துப் பாத்து கொஞ்சம் பிந்தி வந்தனான். இங்க எங்களுக்கு ஏதும் பிரச்சனை இல்லத்தானே...அதுதான் நான் திறந்திட்டன். இதுவும் இல்லாட்டி வயித்துப் பிழைப்புக்கு என்ன செய்யிறது. அதுதான்... ஆனா...அண்ணே நீங்க டவுனுக்குப் போறாப்போல இருக்கு... பார்த்துப் போங்கண்ணே..." என்று கூறிக்கொண்டே



வேலையை முடித்துக் கொடுத்தான வேலு.

அவனிடமிருந்து சைக்கிளைப் பெற்றுக்கொண்டு மெதுவாக ஓட்டிச்சென்றான் கமலேசன். அவனது சிந்தனைகளெல்லாம் இன்று காசு கிடைக்குமா என்பதில்தான் இருந்தது. அப்படிக் காசு கிடைத்தாலும் பிள்ளைகளுக்கு உடுப்புகளும், வீட்டிற்குச் சாமான்களும் எப்படி வாங்கிறது. கடையெல்லாம் அடைச்சிட்டாங்களாமே. சரி பார்ப்பம். நம்ம வேலு கடையப்போல ஒரு கடையாவது திறந்திருக்காதா.... என்ன? என்ற எண்ணங்களுடன் நகரத்தை நோக்கி விரைந்தான்.

நகரத்தை நெருங்க நெருங்க, அதன் அமைதி அவனைச் சற்றுப் பயப்படுத்தியது. ஒரு சிலரின் நடமாட்டமே தென்பட்டது. அவர்களும் நடந்துதான் சென்றுகொண்டிருந்தார்கள். வாகனங்கள் எதுவும் தென்படவில்லை. இவன் துவிச்சக்கர வண்டியோடு ஒரு சில துவிச்சக்கர வண்டிகளே சென்றன. மெள்ள சைக்கிளிலிருந்து இறங்கி நடந்து சென்றான்.

"இன்னும் சற்று நிமிட நடையில் முதலாளியின் வீட்டை அடைந்துவிடலாம்...அவரிடம் பணத்தைப் பெற்றுக்கொள்வதும், திரும்புவதும்தான் வேலை. சந்துபொந்தில் ஏதாவது கடை திறந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்." இப்படியாக எண்ணிக்கொண்டு நடந்தவனை ஒருவர் வழிமறித்தார்.

"எங்கண்ணே போறீங்க...."

"இங்கண... பக்கத்தில தான்..." தயங்கிய வண்ணம் பதில் சொன்னான்.

"விரைவாய் போங்க...பெரிய சந்தியில ஏதோ கூட்டமாம். அதைத் தொடர்ந்து ஊர்வலம் போகப்போகுதாம்...அதனால போற இடத்துக்குப் போயட்டு விரைவா வீட்டுக்குள்ள போய்ச் சேருங்க..."என்று கரிசனையுடன் கூறினார் அவர்.

அதைக் கேட்டுக்கொண்டே, "ஏன் தம்பி எதுக்கு ஹர்த்தாலாம்?" என்று வினவினான்.

யாருக்கண்ணே தெரியும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்லுறாங்க...என்று உபரியாகச் சில விடயங்களைச் சொல்லிவிட்டு அந்த நலன்விரும்பி சென்றுவிட்டார்.

"ம்...அதுசரி...அரைவாசிப் பேருக்கு ஏன் எதுக்கு..எதுவுமே தெரியாது. யார் நடத்திறது, யாருக்காக நடத்திறது எதுவும் தெரியிறதில்ல.... ஆனா எல்லாத்துக்கும் ஒத்துழைப்புத் தாறதா மட்டும் சொல்லிருவாங்க... சரிசரி..நமக்கேன் பெரிய இடத்து சமாச்சாரமெல்லாம்" என்று எண்ணியவனுக்கு மேற்கொண்டு அதைப் பற்றிச் சிந்திக்க மனம் இடம் கொடுக்கவில்லை. இதைவிட நாளைய பண்டிகையும், பிள்ளைகளின் எதிர்பார்ப்புமே அவன் மனக்கண்முன் விரிந்து கிடந்தது.

"அதோ..... அந்த சந்திற்குள் புகுந்துகொண்டால் முதலாளியின் வீடு வந்திடும்" என்று நடையை விரைவு படுத்தியவன் சற்றுத் தொலைவில் கேட்ட சத்தத்தில் ஸ்தம்பித்துப்போனான். அதைத் தொடர்ந்து புகைமண்டலமாய் அந்தப் பிரதேசம் காட்சியளித்தது. ஒருசிலர் கதறிக்கொண்டு அங்குமிங்குமாய் சிதறி ஓடினார்கள்.... பின்னர் இன்னும் பல சத்தங்கள், கத்தும் ஓலங்கள், ஆக்ரோஷமான ஒலிகள், முனகல்கள் எனப் பயங்கரத்தின் வெளிபாடுகள் அந்த இடத்தை வியாபித்துக்கொண்டன.

இவனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. சைக்கிளை விரைவாகத் திருப்பிக்கொண்டு ஏறி மிதித்தான்... "கடவுளே நாளைக்குத் தீபாவளி..பிள்ளைகளுக்கு உடுப்பு எடுக்க முடியல்லையே..." என்று அரற்றிக்கொண்டு அசுர வேகத்தில் வண்டியைச் செலுத்தினான் எப்படியாவது நகரத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன். ஆனால் அவன் போன பாதை தவறிவிட்டது.

குச்சி ஐஸ் பெட்டியின் 'ஹாரன்' சத்தம் இனிமையாகக் கேட்கிறது. அது கேட்பவருக்குத்தான் இனிமையானது. ஆனால் அதை விற்பவருக்கு அது வெறும் சத்தமாகவே இருக்கும். இவனுக்கும் அப்படித்தான். அப்பாவின் அகால மரணத்தின்பின் அவன் அத்தனை கனவுகளும் கல்லறை

**-இ.மதன், திருமலை**

யாகிப் போயின. படிப்பை அத்துடனேயே நிறுத்திக் கொண்டான். ஐஸ்பெட்டியை தூக்கிக் கட்டிக்கொண்டு துவிச்சக்கர வண்டியை ஓட்டப் பழகிவிட்டான். பிறகு என்னதான் செய்வது? அப்பா ஒருத்தரின் சொற்ப வருமானத்தில் கால்வயிறும், அரைவயிறுமாக வாழ்க்கையையும், படிப்பையும் மேற்கொண்டிருந்தவர்களால் இனியும் அது எப்படி முடியும். அப்பா இறந்த அதிர்ச்சியில் அம்மாவும் சித்த சுவாதீனம் அற்றுப் போய்விட்டார். தங்கையோடு இன்னொரு தம்பியும் அவனுக்குக் கூடிவிட்டது. அம்மாவோடு சேர்த்து அங்கு மூன்று குழந்தைகள் ஆகிவிட, இவன் பெரியவனாகிவிட்டான். அப்பாவின் வேலையை இவன் தொடருகிறான். ஆனால் அவர் கனவுகளை மட்டும் இவனால் தொடர முடியவில்லை.

இப்படி எத்தனை எத்தனை குழந்தைகள் கனவுகளோடு காத்திருக்கின்றனவோ...?!

# உறவுக்காக அவன் உதிரங்கள்...!

**விடியலை** இரவு மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது. விண்மீன்களும் விண்ணில் ஒவ்வொன்றாக விழித்துக் கொண்டிருந்தன. ஜீவன் தனது வேலைத்தளத்தில் தனிமையில் கையில் ஒரு புத்தகத்துடன் கதிரையில் அமர்ந்திருந்து, புத்தகத்தைப் புரட்டுவதை விட்டுவிட்டு தனது நெஞ்சமெனும் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஏதேதோ பல ஞாபகங்கள் வந்து அவனது விழித்திரையில் மோதியபோதும் ஒன்றுமட்டும் அவன் இதயம் வரை தொட்டுக்கொண்டிருந்தது. கண்கள் இரண்டின் இமைகளும் இறுக ஒட்டிக்கொள்ள வாழ்க்கை எனும் வண்டியை பின் நோக்கி நகர்த்தினான். அது தென்மராட்சியில் உள்ள தச்சன் தோப்பு கிராமம். அங்கே ஓர் சாதாரண குடும்பத்தில் இவனும் பிறந்திருந்தான். அங்கிருந்த ஒரு பாடசாலையிலேயே தனது இளமைக் கல்வியைத் தொடர்ந்தான். அங்கிருந்த மாணவர்களை விட புத்திசாலித்தனமும், திறமையும் கொஞ்சம் அதிகமாகவே இவனில் காணப்படவே பாடசாலை அதிபர், அவனது அப்பாவைச் சந்தித்து "சின்னத்தம்பி உங்க பெடியன் நல்ல கெட்டிக்காரனா இருக்கிறான். அவன இங்கே வைத்திருந்தால் இச்சூழல் அவனது அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள இடமளிக்காது. எதுக்கும் நீங்கள் அவனை யாழ்ப்பாண பெரிய பள்ளிக்கூடத்தில் விட்டுப் படிப்பித்தால் அவனது எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்" என்று கூற, கொஞ்சம் புரிந்தும் கொஞ்சம் புரியாமலும் "சரி சேர் பார்ப்போம்" என்றவாறு தலையை அசைத்துவிட்டு வீட்டை நோக்கி நடையைக் கட்டினார். வரும் பாதை வழியே அதிபர் சொன்னதை மீட்டுக் கொண்டு வந்தார். அப்போதுதான் அவருக்கு ஏதோ தெளிவு ஏற்பட்ட மாதிரி இருந்தது. வீட்டுக்கு வந்து வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்தவாறு வழிமேல் விழிவைத்து பாடசாலைக்குச்சென்ற தனது மகனை எதிர்பார்த்த வண்ணம் யோசித்துக்கொண்டிருந்தார். அப்போது அவரது மனைவி இரா ஜேஸ்வரி அவர் பார்வையில் குறுக்கிட்டு "என்னப்பா பலமாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டார். "ஒன்றுமில்லை. இப்ப அதிபரைச் சந்தித்துவிட்டு வந்தேன். அவர் சொன்னார் மகன யாழ்ப்பாண பாடசாலையில விட்டுப் படிப்பிக்கவாம். அதுதான் என்ன செய்யிறது என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். "அதுசரி..இப்ப விவசாயமும் விழுந்துவிட்டது. உங்களுக்கும் உடம்பு சரியில்லை. எமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதே பெரிய பாடாக இருக்கு. நகரத்துக்கு கொண்டுவிட்டால் நிறைய செலவாகும். அதையாவது கடன்பட்டாவது செய்து முடிக் கலாம். ஆனா..."என்று இழுத்தாள். "ஆனா என்ன?" என்று சின்னத்தம்பி கேட்க, "அவன் இப்ப சின்னப்பிள்ள. அங்கே அவன் எப்படி தனது வேலைகளைச் செய்வான்? இங்கே அவனுடைய உடுப்புகள் எல்லாம் நான்தான் தோச்சிப் போடுறன். அதற்குக்கூட அவன் இன்னும் பக்குவம் அடையல்ல. அங்கே போய் என்ன பாடு படுவான். அதுமட்டுமல்லாமல் நாங்க எப்படி அவன பிரிஞ்சி இருக்கப் போறம்" என்று அவளது ஆதங்கத்தை கொட்டித்தீர்த்தாள். "நானும் அதைத்தான் யோசித்தேன். ஆனா, அவனுடைய எதிர்காலம் நல்லா இருக்க வேணும் எண்டா அவனை அங்கேதான் கொண்டு விடவேண்டும்" என்று சொல்லி முடிக்க ஜீவன் தனது புத்தகப் பையை முதுகில் சுமந்தவாறு "அம்மா..." என்று கத்திக்கொண்டு அம்மாவை கட்டியணைத்தான்.



-ரீ.சஞ்ஜீவன், யாழ்ப்பாணம்

அவனது தலையை தழுவியவாறு, "ஓடிப்போய் முகத்தை கழுவிவிட்டு வா சாப்பிடுவோம்" என்று அனுப்பிவிட்டு சாப்பிடுவதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய சமையல் அறைப் பக்கமாகச் சென்றாள்.

இவ்வாறாக சில மாதங்கள் ஓடிவிட்டன.

பாடசாலை அதிபர் கதிர்வேலாயுதம் அவசர அவசரமாக "கதிர்காமத்தம்பி...கதிர்காமத்தம்பி" என்று அழைக்க, "என்ன சேர் உள்ள வாங்கோ" என்று அழைத்தார் கதிர்காமத்தம்பி. உங்களுக்கு ஒரு சந்தோசமான விசயம்.

"உங்க மகன் புலமைப்பரிசில் பரீட்சையில் பாஸ் பண்ணிட்டான்" என்று கூற சமையல் அறையில் இருந்த இராஜேஸ்வரியும் "உண்மையா" என்று கேட்டவாறு இன்முகத்துடன் தேநீர்க் கோப்பையுடன் வெளியே வந்தாள். பின்னர் அதிபர் விடைபெற்றுச் செல்ல, இருமணி நேரம் கழித்து ஜீவனும் புன்னகைத்தமுகத்துடன் ஓடோடி வந்து கொண்டிருந்தான். ஓடிவந்த மகனை சின்னத்தம்பி தூக்கி என் மகன் எண்டா "என் மகன்தான்" என்று நெற்றியில் முத்தமிட்டுக் கொண்டார். "நான் உன்ன நகரப் பாடசாலையில் கொண்டு சேர்க்கிறேன் படிக்கிறாயா?" என்று அவனது அப்பா அவனைக் கேட்க, உடனே ஆம் என்று கூறிவிட்டு மனதுக்குள் அங்கே போனால் நிறைய வாகனம் பார்க்கலாம், நிறைய பெரிய பெரிய கடைகள் பார்க்கலாம் என்று நினைத்துச் சிரித்தான். பிரிவின் துயரை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை. அறிந்திருக்கவும் நியாயம் இல்லை. புதினம் பார்ப்பதிலேயே சந்தோசம் காண நினைத்தான்.

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் அவன் நல்ல பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்று வந்தான். அங்கு சென்றபிறகுதான் பிரிவின் வேதனை அவனை வாட்டத் தொடங்கியது. ஒவ்வொரு இரவும் அவனது தலையணை கண்ணீர் சேகரிக்கும் தொட்டியாகவே அவனுக்குத் துணைபுரிந்தது. தினமும் விம்மி விம்மி அழுது கண்களில் கண்ணீரும் வற்றிப் போனது. சுகயீனம் வந்தால் அவன் பாடோ பெரும் பாடுதான். அவன் சோகத்தையும், துக்கத்தையும் பகிர்ந்து கொள்ள அருகில் யாரும் இல்லை. சொல்லிக்கொள்ள மொழிகளில் வார்த்தையும் இல்லை. புரண்டு புரண்டு படுப்பான். கால் தூக்கிப் போட அருகில் தந்தை இல்லை. விடிகின்ற நேரத்திலே அவனை அறியாமலேயே அவனை தூக்கம் தழுவிக்கொள்ளும்.

இங்கு மட்டும் என்ன அவனது அம்மாவும் அப்பாவும் அவன் நினைவாகவே இருப்பார்கள். அவனது அன்னை அவன் நினைவில் இருந்து கொண்டு வெந்நீரை கால்களில் ஊற்றிக் கொள்வதுமுண்டு. ஒழுங்காக இருவரும் சாப்பிடுவதுவுமில்லை. அடிக்கடி வந்து அவனைப் பார்த்துக்கொண்டு போவார்கள். அவர்கள் வரும்போது அவனுக்குள் சந்தோஷம் ஊற்றெடுக்கும். விட்டுச் செல்லும்போது அவன் கண்களில் கண்ணீர் கொந்தளிக்கும். இவ்வாறு பல துயர்களையும், பல தடைக்கற்களையும் உடைத்துக் கொண்டு இதுதான் வாழ்க்கை என்று வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்து கொண்டான்.

பின்னர் உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் படிக்கத் தெரிவாகி படித்துக் கொண்டிருந்தான். எப்படியோ அவனுக்கு மாதாந்தம் பணம் வந்து சேரும். எல்லாம் அடகு வைத்த பணமும், கடன்பட்ட பணமும் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். இப்படியாக ஒருநாள் அப்பாவிக்கு சுகயீனம் அதிகரித்திருப்பதாக செய்தி அவன் காதுக்கு எட்டியது. சென்று பார்க்கக்கூடிய சூழ்நிலையும் அவனுக்கு இல்லை. அப்போது கண்ணீர் கலந்த கண்களோடு யோசிக்கத் தொடங்கினான்.

நான் படிப்பு எல்லாம் முடித்துவிட்டு அவர்களைப் பார்க்கும் முன் அவர்களுக்கு ஏதாவது நடந்துவிட்டால் என்ன செய்வது? அவர்கள் தங்களது உதிரத்தை உணவாக்கியவர்கள் என் பிறப்பில் இருந்தே. அத்துடன் எனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள். அவர்களை இறுதிவரை வாழவைத்துப் பார்ப்பதுதான் எனது முதல் இலட்சியம். இப்ப உடனடியாக அப்பாவை கொழும்புக்குக் கொண்டு சென்று எப்படியாவது சுகமாக்க வேணும். அதற்கு நிறைய செலவாகுமே. என்ன செய்யலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். இரவில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான். பகலில் பாடசாலைக்கும் வகுப்புகளுக்கும் சென்றான். சிறிது சிறிதாகப் பணம் சேர்க்க ஆரம்பித்தான். தனது தந்தையை சுகமாக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடும், ஆர்வத்தோடும் முயல்கிறான். இது தனது பெற்றோருக்கு தெரியக் கூடாது என்றதிலும் விழிப்போடு இருக்கிறான். இவ்வாறு சிந்தித்துக் கொண்டே தனது இமைகளை மெல்லத் திறந்தான். கொட்டி வைத்த கண்ணீர் மழையாக நிலத்தை நனைத்துக் கொண்டது. இருந்த கதிரையை விட்டு எழுந்து புத்தகத்தைப் புரட்டியபடி நடந்து கொண்டு படிக்கலானான். இவன் கனவுகள் நனவாக நாமும் பிரார்த்திப்போம்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுங்கள்

குடும்பம் என்பது, தனி நபர்கள் சேர்ந்து வாழ்வது இல்லை. கணவன், மனைவி, குழந்தைகள் என்று பலதரப்பட்டவர்களின் மனங்கள் இணைந்து ஒரு லட்சியத்துடன் ஒருவருக்கொருவர் நல்ல புரிந்துகொள்ளுதலுடன் வாழ்வதுதான்.

இயந்திரத்தனமான, புற வாழ்க்கைக்குத் தேவையான பணம் முதலியவற்றை பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன், இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலகத்தில், அன்புதான் மகிழ்ச்சியான குடும்பத்தின் ஆதார ஸ்ருதி. இன்றைய சூழ்நிலைக்கு இது அவசியமானது.

நான்கு சுவர்களால் எழுப்பப்படுவது வீடு. அதை சந்தோஷமான குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு இனிய இல்லமாக மாற்ற வேண்டும். அன்பு, அக்கறை இல்லாத குடும்பங்களிலிருந்துதான் கிரிமினல்கள் உருவாகிறார்கள் என்று உலகளாவிய ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வருகிறது. கிரிமினல்கள் உருவானால், அது இந்த சமுதாயத்துக்கு வேண்டாத பல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது இல்லை.

இனிய இல்லறத்தின் முக்கியமான அம்சம், நல்ல குடிமக்களாகக் குழந்தைகளை வளர்ப்பது. புத்திசாலிகளாக மட்டும் இருந்தால் போதாது. குழந்தைகள் நல்ல குணவான்களாய் வளர்க்கப்பட வேண்டும். அதில் பெற்றோருக்கு முக்கியப் பங்கு உண்டு.

பிரார்த்தனைக்கு எந்த குடும்பத்தில் முக்கியத்துவம் தரப்படுகிறதோ, அங்கே அன்பு தவழும்; அமைதி நிலவும்; சந்தோஷம் பெருகும்.

**தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்புச் செய்தால் யாருக்கு நன்மை?**

செ.சந்திரகுமார், பாலமோட்டை

பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்குரியவருக்கு என்று சொன்னாலும் அதைவிட நன்மையடைபவர்கள் ஏகப்பிரதிநிதிகள் தான்.

**சாமத்தில் விழிப்பு வந்தால் என்ன செய்வீர்கள்?**


சிஹ்னாஸ் தௌபீர்,
ஹுசைனியாபுரம்.

தூக்கத்துக்கு முன்னர் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்து வைத்துவிட்டு திரும்பிப் படுப்பேன்.

**இலங்கையுடனான ஏழு ஒரு நாள் ஆட்டத் தொடரை இந்தியா மிகவும் இலகுவாகக் கைப்பற்றி விட்டதே?**

க.வினோதன், புத்தளம்.

ஒரு நாள் பெரிதா ஐந்துநாள் பெரிதா. பொறுத்திருங்கள் அதையும் பார்த்துவிட்டு மொத்தமாகச் சொல்கிறேன். இப்போது ஒருநாள் ஆட்டந்தானே முடிந்துள்ளது.



**நாட்டின் சீரற்ற காலநிலை தொடர்ந்து கொண்டிருப்பதால் வெள்ள அபாயம் ஏற்படுமோ...?**

மு.கா. இர்பானா, பேருவளை.

சுனாமிக்கு முகம் கொடுத்தாயிற்று. வெள்ளம் என்ன செய்யப்போகிறது. இதே நிலை தொடர்ந்தால் இரத்தினபுரியில் வெள்ள அபாயம் வரலாம் எதற்கும் அவதானமாக எல்லோரும் இருப்பது நல்லதுதானே.....

**நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு' என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறாது என்பதைத் தெளிவுபடுத்தாமலே இருக்கிறதே?**

இரா.அரியேந்திரன், பழுகாமம்.

எந்தக் காலத்தில் கூட்டமைப்பு தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தெளிவுபடுத்துவதற்கு. தேர்தலுக்கு இரண்டு நாளைக்கு முன்னம் வன்னியிலிருந்து வரும் உத்தரவைச் செய்து முடித்தால் போதுமென்று அவரவர் இருக்கிறார்கள்.

**ரஜினியின் அடுத்த படம் பற்றி புதிய தகவல்கள் ஏதாவது சொல்லுங்களேன்?**

ப. ரமேஸ்கண்ணா,
வெள்ளவத்தை.

பூஜை போடப்பட்டுவிட்டது. பெயர் 'சிவாஜி' பட விநியோகஸ்தர்கள் 'சிவாஜி' உரிமையை இதுவரை நூறு கோடி ரூபாவுக்கு மேல் வாங்கிவிட்டார்கள். ஷங்கர் இயக்கப்போகும் இப்படத்தை ஏ.வி.எம். தயாரிக்கிறது. இதுவரை ஸ்ரேயா ஒரு நாயகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். சிவாஜி குடும்பத்தார் மிகவும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். ரஜினி, அடிக்கடி ஷங்கரின் அலுவலகத்திற்குச் சென்று கதையின் முன்னேற்றத்தை அவதானித்துக் கொண்டிருக்கிறார் இப்போதைக்கு இது போதும் என்று நினைக்கிறேன்.

**சிவகாசி பார்த்துவிட்டீர்களா? விஜய்யின் அடுத்தபடம் என்ன?**

சி. நிர்மலா,
ஹட்டன்.

பார்த்துவிட்டேன். இன்னும் பட்டாசுச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அடுத்ததாக 'புலி' 'ஆதி' என்று இரண்டு படங்களில் விஜய் நடிப்பதாக இருந்தாலும் முதலில் 'ஆதி' வரும் என்று விஜய் சொல்கிறார்.

**ஜனாதிபதி சந்திரிகா முன்னர் போல் இல்லாமல் இப்போதெல்லாம் முன்னுக்குப்பின் தொடர்பில்லாமல் கருத்துக் கூறி வருகிறாரே?**

அ.நியூட்டன், மன்னார்.

என்னதான் இருந்தாலும் பதவியை விட்டு இறங்கிப்போகிற பதற்றம் இருக்கத்தானே செய்யும். ஜனாதிபதிப் பதவி போனாலும் பிரதமர் பதவியையாவது தக்க வைக்க முடியுமா என்பதில்தான் கொஞ்சம் குழப்பமடைந்து போயுள்ளார் போல் இருக்கிறது.



# தென்றலின் நாடகம்

"வா, வந்தமர் என் அருகே" என்றான் செழியன். மகிழ்ந்திருந்தபோதும் இன்னும் வெட்கம்தான் அவளுக்கு!

தயங்கி நின்று, முகம் சிவந்து தடுமாறி வந்தமர்ந்தாள் அவன் பக்கத்தில்.

நாணத்தில் அவள் தயங்குவதும் ஒரு சுகம்தான் என்று நினைத்தான் அவள் துணைவன் செழியன்.

இதமாகச் சொல்லிக்கொண்டு அவள் தேகம் தொட்டணைத்தான். தொடர்ந்து கரங்களால் மன்மத தூதுவிட்டான்.

"பயந்துவிட்டேன் ஒரு நொடி" என்றான் அவள் காதோரம் உதடுகளால் வருடிக்கொண்டு.

புரியாமல் இதழ் திறந்து அவள் கேட்டாள் : "ஏன் பயந்தீர்கள்."

"காயவில்லை" என்றுதான்.

பட்டுடலை ஆராய்ந்து, கொஞ்சமும் என்மேல் இரக்கமில்லையோ என்று மஞ்சமும் வசைபாடி ஒலி எழுப்ப, சுக இராகம் மீட்டிக் கொண்டு இருக்கும் கதை தொடர்கதைதான். ஆனாலும் தினமும் புதுக்கதை போல் பொன்னுடலின் மாயங்கள் புதிர் கடலாய் விரிவதுதான் என்னே விந்தை!



இப்போதும் அவள் வந்து அருகில் அமர்ந்து கொள்ள, தென்றல் பட்டால் தேகம் சிலிர்ப்பது போல உடலெங்கும் சிலிர்க்கக் கண்டான்.

"ஏன் இத்தனை நேரம். கொல்லையிலே நான் காத்திருக்கும் நிலை அறிந்தும் உள்ளே நீ என்ன செய்தாய்? இரக்கமே இல்லை உனக்கு என்றான் தாம்பூலம் சுவைத்து சிவந்திருந்த உதடுகளால். "பாத்திரங்கள் தேய்த்துவிட்டு வரவேண்டாமோ? சுவைத்துண்டு முடித்ததுவும் நீங்கள் எழுந்தோடி வந்துவிடுவீர்கள். எனக்கன்றோ பணி நிறைய." - துணைவி பொய்யாகச் சலித்துக் கொண்டாள்.

"அழைத்திருந்தால் வந்து உதவியாய் உழைத்திருப்பேன். நீ அழைக்கவில்லை.

என்றான் செழியன்.

"இதற்கு மட்டும் என் அழைப்புத் தேவையில்லை யாக்கும். பேச்சைப் பார். எதற்கும் பொய்ச் சாட்டு."

"சிணுங்கியது தேன் கிண்ணம். அதனால் சிலிர்த்தது அவன் தேகம் இன்னும்.

நீதானே அழைத்தாய்? நீராடி, பூச்சூடி, போராடி வெல்ல
முடியுமோ என்றெனக்கு சவால்விடும்
பூந்தேக எழில் காட்டி மயக்கியதும் ஒரு
அழைப்பன்றோ?"

விழி மடல்கள் வண்ணத்துப் பூச்சியின் சிறகுகள் போல் படபடக்க, அவள் சொன்னாள்:

"உளறுகிறீர்கள்".

உளறல் அல்ல. உணரல்.

"வினாக் குறியாய் விழிப் புருவம் உயர்த்தி முறைத்தாள்.

கொடி இடை உடைந்து விழுந்ததோ கீழே என்று நினைத்தேன். இல்லையில்லை இருக்கிறது என்று தெரிந்து கொண் டேன். அதைத்தான் சொன்னேன்."

வெட்கம் வந்து விழுங்கியது அவளை! தளிர் விரல்கள் பத்தும் கோத்து மலர் சரமளின் முகம் மூடிக்கொண்டன.

அவன் தன் கரத்தால் அவள் விரல்களின் சிறை உடைத்தான். பின்னர் முகம் உயர்த்தி, துடிக்கும் இரு சுளைகளது சுவையறிய தன் உதடுகளை அனுமதித்தான்.

நாவோடு நா கலக்க, மனம் கலந்த இருவரும் மெய்மறந்து இருந்த நிலை பொறுக்காத விதமாக, இல்லத்தின் உள்ளே இருந்து கேட்டது ஓர் சத்தம்.

அவன் உதட்டின் சிறையில் இன்பத்தை அனுபவித்த இதழ்களை விடுவித்து எழுந்து கொண்டாள் அன்னமகள்.

கரம் பிடித்து தடுத்தான். அவன் விழி முழுக்க கிறக்க சுகம்.

"போகாதே நில்" என்றான்.

"உள்ளேயிருந்து சத்தம் வந்தது" என்றாள் அவள்.

"சத்தம் வந்தது தெரிகிறது. என் சித்தம் உன்னிடம் வந்துவிட்டது மட்டும் தெரியவில்லையே உனக்கு."

"அவசரம் ஏன் உங்களுக்கு? வெந்தயக் கலயத்தைப் பூனை தள்ளியிருக்கவேண்டும்.

போய்ப் பார்த்துவருகின்றேன் நான்."

பாதச் சிலம்பொலிக்க, அவள் நடந்து போனாள். பின்னெழில்கள் அசைந்து அவன் மோகத் தீயை விசிறிவிட, பூனைமேல் பொல்லாக் கோபமுற்றான் செழியன். அவன் நெஞ்சில் விதையாய் விழுந்தது ஒரு கவிதை.

**பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசிப்**
**பழந்தமிழின் சாற்றாலே காதல் சேர்த்து**
**மிக்க அவசரமாகச் சென்ற பெண்ணாள்**
**விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்.**

**அக்காலம் அறைக்குவந்த பூனையின் மேல்**
**அடங்காத கோபமுற்றேன் பிற நேரத்தில்**
**பக்காப் பூனை நூறு, பொருளையெக்காலம்**
**பாழாக்கினாலும்**
**அதில் கவலை**
**கொள்ளேன்.**

என்றெல்லாம் நினைத்தபடி கொல்லையிலே கிடந்த விசுப்பலகை மீது மெல்லச் சாய்ந்தான்.

'சினமெல்லாம் பூனை மீது. வந்ததுதான் வந்தது நேரமறியா முட்டாள் பூனை. சத்தமில்லாமல் காரியத்தை முடித்துச் சென்றிருந்தால், சித்தம்மாறி என்னவள் விட்டுப் பிரிந்திருக்க மாட்டாள் அன்றோ.

திருடத் தெரியாத திருட்டுப் பூனை. சிவ பூசை வேளையிலே கரடி போல, என் ஆசை வேளையிலே இந்தப் பூனை.

பொருள் போனால் கவலையில்லை. பேரின்பம் பெருகும் வேளை போச்சே! இந்தக் கவலைக்கு ஈடுமில்லை.'

'முணுமுணுத்துக்கொண்டு கிடந்தவனின் முதுகில் சில்லென்று ஒரு தழுவல்.

கள்ளி! கண்ணுக்குள் சிக்காமல் பின்புறமாய் வந்துவிட்டாள். எனக்கு மட்டும்தான் அவசரமாம் என்னமாய் பொய் சொன்னாள்.'

நினைத்து மகிழ்ந்தான். தழுவட்டும் என்று அசையாமல் கிடந்தான்.

முதுகில் ஏதோ புரள்வது போல் உணர்ந்தான்.

கடல் அலைபோல் நீண்ட குழல் முதுகினிலே சரிந்ததுவோ என்று நினைத்தான்.

இல்லையில்லை. தளிர்க்கரத்தால் குளிர் பெண்ணாள் தடவுகிறாள். அதுதானே இந்தச் சுகம் என்று நினைத்து முதல் நினைப்பை மாற்றிக்கொண்டான்.

இதுவரைக்கும் முன்னுரை நான் எழுத அவள் இரசித்தாள். இன்று அவள் எழுதும் முன்னுரையை இரசித்திடுவேன்.

மோகத்தின் படியேறி இன்பத்தின் சிகரத்தில் போய் நிற்கும் மன்மதக் கதையின் முன்னுரை தானே அணைப்பதும், சுவைத்தறிவதும் என்று நினைத்து விழுந்தான் ஆசைக் கடலில்.

எத்தனையோ நினைத்தபோதும் அசையாமல் தான் கிடந்தான்.

அசைந்தால் எங்கே அவள் வெட்கிப் போவாளோ என்று கருதித்தான் கரம்கூட அசைக்காமல் கிடந்தான் காளை.

எழுதட்டும் முன்னுரையை. புரியட்டும் மோக வித்தைகள்.

மனம் முழுக்க மகிழ்வென்னும் தேரோட்டம். உடல் முழுக்க குளிரான தேனகம்.

கண்மூடி அவன் இரசிக்க, எதிரில் ஒரு குரல்.

"கோபமா? நேரமாகிவிட்டதா? நான் என்ன செய்வேன் பொல்லாத பூனையது!

மன்னித்துக்கொள்ளுங்கள்!"

"அட...யார் அதுவோ? என்னவளோ பேசுமிவள்? குளிர்வித்தவள் யார்?"

செழியனுக்குக் குழம்பியது மனம். அடுத்த நொடியே புரிந்தது நிஜம்.

கவிதையாய் வடித்தான் தன் நிலையை.

"தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்
சிலிர்த்திடவே எனை நெருங்கிப் படுத்தாள் போலும்
சரியாத குழல்வாய்சரியலானாள் போலும்,
தடவினான் போலும், எனைத் தன் கரத்தால்!
புரியாத இன்பத்தை புரிந்தாள் போலும்
புரியட்டும் என இருந்தேன் எதிரில் ஓர் பெண்
பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ!
பேசுமிவள் மனைவி; மற்றொருத்தி தென்றல்!"

(இரு கவிதைகளும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'தென்றல்' பற்றிய கவிதையில் இருந்து பெறப்பட்டது.)

தந்தது
ரசிகன்

**மலையக அரசியல் தலைமைகள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எடுத்த முடிவு சரிதானா?**

ம.இராமையா, நானுஓயா.

பேராசிரியர் போற்றும் தமிழ் தேசியத்தை சிதறியடித்தது மட்டுமல்லாமல் துண்டாடியும் சாதனை புரிந்த ஒருவரை ஆதரிப்பது என்ற அவர்களின் கொள்கை சரியானதுதான். இப்போது தான் யோசிக்கிறார்கள். முடிவில் மூக்கை உடைத்துக் கொண்டதாக.

**விளம்பர யுக்தி பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?**

கு.ஞானசேகரன், கண்டி.

உதாரணத்துக்கு தொலைக்காட்சி வைத்திருப்பவர்கள் தமக்குப் பிடித்த மானவருக்குச் சார்ந்த மொழியில் விளம்பரம் செய்துவிட்டு எல்லாம் முடிந்த பிறகு இறுதியாக சின்ன எழுத்தில் ஆங்கிலத்தில் அது ஒரு கொடுப்பனவு செய்யப்பட்ட விளம்பரம் என்று போட்டுவிட்டால் சரி.

**ஜோதிடங்கள், சாத்திரங்களில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? உண்மையைச் சொல்லுங்கள்.**

செ.தவமணி, திருமலை.

பொய்களைப் பற்றிப் பேசுகையில் உண்மையில்லையென்றாகிவிடுமென்று எனக்குத் தெரியாது இந்தப் பாட்டு வரியாவது உண்மை சொல்கிறதா பாருங்கள்.

நடக்குமென்பார் நடக்காது

## சிந்தியா பதில்கள்

நடக்காதென்பார் நடந்துவிடும்.

**நீல வர்ணத்தையா, பச்சை வர்ணத்தையா உங்களுக்குப் பிடிக்கும். இது நூறு வீதம் வர்ணங்கள் பற்றிய கேள்விதான். தயங்காமல் பதில் சொல்லவும்**

மு.கணேசன், தெகிவளை.

புத்திஜீவி கணேசன் அவர்களே அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

**ஜனாதிபதி தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்படப் போகும் அடுத்த ஜனாதிபதி யார்?**

பெ.கோகிலன், ஹட்டன்.

ஜனாதிபதி சந்திரகா குமாரதுங்க புதிதாகப் பதவி ஏற்றபோது பாராளுமன்றத்திற்கு வருகை தருவதை பிரபலமான இரண்டு அறிவிப்பாளர்கள் நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்தனர். ஒருவர் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு மற்றவர் தரக்கூடிய தகவல்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ஜனாதிபதி தொலைவில் வரும் காட்சியை அறிவிப்பதற்காக அவரது வாகனத் தொடரணியை அவதானித்த அறிவிப்பாளர் பச்சை மின் விளக்குகள் பொருத்திய மோட்டார் சைக்கிள்களில் பாதுகாப்புத் தரப்பினர் வந்து கொண்டிருக்கிறார் என்று அறிவித்தார் சற்று நேரத்தில் ஜனாதிபதியின் வாகனத் தொடரணி அண்மித்தவுடன் தான் தெரிந்தது அது பச்சை ஒளி அல்ல, நீல மின் விளக்குகள் என்று அப்போது அந்த அறிவிப்பாளர் தெரிவித்தார்:

தூரத்தில் பச்சையாகத் தெரிந்த மின் ஒளிகள் அருகில் வர வர நீலமாகத் தெரிகின்றன என்று எப்படி அறிவிப்பாளரின் சாமர்த்தியம்.




அவுஸ்திரேலிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய எச். அயன் மொன்கர் எனும் இடது கை மித வேகப் பந்து வீச்சாளர் 49ஆவது வயதில் இருக்கும் போது பந்து வீச்சில் காட்டிய திறமையானது வியக்கத்தக்கதாகும்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் போது இன்னிங்ஸ்களில் ஐந்து விக்கெட் அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளையும், பத்து அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளையும் அதிக தடவைகள் பெற்றுக் கொண்ட வயதான பந்து வீச்சாளர் என்ற பெயரை இவர் கிரிக்கெட் வரலாற்றில் பெற்றுக் கொண்டுள்ளார்.

1930 - 31களில் மெல் பேர்னில் வைத்து மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது 79 ஓட்டங்களுக்கு 11 விக்கெட்டுகளை வீழ்த்திய போது இவரது வயது 49 வருடங்களும் 313 நாட்களுமாகும்,

இதே காலப் பகுதியில் தென்னாபிரிக்க அணியுடன் இதே மைதானத்தில் நடந்த டெஸ்ட் போட்டியின் போது 18 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும், பிரிஸ்ட்பேர்னில் நடந்த போட்டியின் போது 42 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் இவர் கைப்பற்றிக் கொண்ட போது இவருக்கு வயது 49 ஆகும்.

எச்.அயன் மொன்கர் 1928 - 29களில் இங்கிலாந்து அணிக்கு எதிராக பிரிஸ்ட்பேனில் நடந்த டெஸ்ட் போட்டியில் முதல் முறையாகக் கலந்து கொண்ட போது இவரது வயது 46 வருடங்களும் 237 நாட்களுமாகும்.

வயதான நிலையில் டெஸ்ட் போட்டிகளில் பிரவேசித்துள்ள இவர், அவுஸ்திரேலிய அணி சார்பில் 14 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் கலந்து கொண்டு 74 விக்கெட்டுகளை (சராசரி 17.97) கைப்பற்றிக் கொண்டுள்ளார்.

5 அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை 4 தடவைகளும் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை 2 தடவைகளும் பெற்றுக் கொண்டுள்ள இவர், துடுப்பாட்டத்தில் 42 ஓட்டங்களை (சராசரி 2.50) மாத்திரமே பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பார்திவ் அஜே படேல் 2002ஆம் வருடம் இங்கிலாந்து அணிக்கு எதிராக ட்ரென்ட் பிரிக்ஜில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது இந்திய அணியின் விக்கெட் காப்பாளராக செயற்பட்டபோது அவரது வயது 17 வருடங்களும் 152 நாட்களுமாகும்.

2002ஆம் வருடம் பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற ஆசிய கிண்ணப் போட்டித் தொடரின் வெற்றிக்காக இந்திய கனிஷ்ட அணிக்குத் தலைமை தாங்கியமை, கனிஷ்ட உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கலந்து கொண்ட இந்திய அணிக்குத் தலைமை தாங்கியமை மற்றும் இப்போட்டித் தொடர்களில் காட்டிய திறமை என்பன காரணமாக இவருக்கு இந்திய அணியில் இடம் வழங்கப்பட்டது.

கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது இரட்டைச் சதங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியவர். அவுஸ்திரேலிய அணியை பிரதிநிதித்துவப்படுத்திய பீலீ மர்டொக் ஆவார்.

1884ஆம் வருடம் அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது இவர் இச் சாதனையைப் புரிந்துள்ளார். 211 ஓட்டங்களை இதன்போது இவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

டபிள்யூ. ஜே. கிறேஸ் எனும் பிரபல கிரிக்கெட் வீரரின் நெருங்கிய நண்பரான இவர், அவுஸ்திரேலிய அணியில் தோன்றியுள்ள முதலாவது நட்சத்திர துடுப்பாட்ட வீரர் எனக் கருதப்படுகின்றார்.

உலகின் இரண்டாவது டெஸ்ட் பொட்டியில் அதாவது 1876 - 77களில் மெல்போர்னில் நடைபெற்ற போட்டியில் இவர் முதன் முதலில் பங்குபற்றியுள்ளார்.

1880 வருடம் இவர் இங்கிலாந்து அணிக்கு எதிராக அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

1855ஆம் வருடம் பிறந்த விலியம் லொயிட் (பீலி) மர்டொக் அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகள் சார்பில் போட்டிகளில் கலந்து கொண்டவராவார். இங்கிலாந்து அணி சார்ரில் ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் விக்கெட் காப்பாளராக பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவுஸ்திரேலிய அணி சார்பில் 15 டெஸ்ட் போட்டிகளில் கலந்து 896 ஓட்டங்களைப் (சராசரி 32.00) பெற்றுக் கொண்ட இவர், விக்கெட் காப்பாளராக இருந்து 14 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்

இங்கிலாந்து அணி சார்பில் 12 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ள இவர் 1911ஆம் வருடம் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**- மைந்தன்**

# இனி விக்கெட் காப்பாளர்களின் காலம்

**கிரிக்கெட் தொடர்களில் இனி விக்கெட் காப்பாளர்கள் தான் பிரகாசிக்கப் போகிறார்களா என்று எண்ணத்தோன்றுகிறது. அண்மையில் இடம் பெற்ற இலங்கை - இந்தியா கிரிக்கெட் போட்டிகளைப் பார்க்கும் போது,**

**அந்தவகையில் அப்பட்டியலில் பலர் சேர்ந்துள்ளனர்.**



**கில்கிறிஸ்ட், பௌச்சர், கம்ரன், அக்மல், சங்கக்காரா இவர்கள் புதிதாக சேர்ந்துக் கொண்டிருக்கும் செல்லப் பிள்ளை இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் தோனி. இவர் இந்திய அணியில் உள்ள மிகவும் குட்டையான வீரர்.**

**இவர் விக்கெட்டை காப்பதில் மட்டுமல்ல, துடுப்பாட்டத்திலும் பிரகாசித்து வருவதுதான் அனைவரையும் வியக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இந்திய அணிக்கு இன்னுமொரு கில்கிறிஸ்ட் கிடைத்துவிட்டார் என்று சொல்லுவது இங்கு மிகவும் பொருத்தமானதாகும்.**

**கில்கிறிஸ்ட், இவர் அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர். அத்துடன் மத்திய தர வரிசை துடுப்பாட்ட வீரராகவே அணியில் சேர்ந்து கொண்டார். இவரின் அதிரடி ஆட்டத்தை பார்த்து வியந்த அவுஸ்திரேலிய அணி இவரை ஆரம்ப துடுப்பாட்ட வீரராகத் தரமுயர்த்தியது.**

**ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆகக் கூடுதலாக இவர் பெற்ற ஓட்டங்கள் 209 ஆகும். இது தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக அதிரடி ஓட்டவீதமாகும்.**

**சங்ககரா இலங்கை அணிக்கு கிடைத்துள்ள திறமையான வீரர் களுவித்தாரனவுக்கு அடுத்ததாக திறமை வாய்ந்த விக்கெட் காப்பாளர் என்பதில் ஐயமில்லை. உலக லெவன் அணியில் விக்கெட் காப்பாளராக இடம் பெற்ற இவர் கலீஸ் லாரா ஆகியோர் சரிவர ஆடாதபோதும் தனது திறமையை வெளிப்படுத்தினார்.**

**தோனி, இந்திய கிரிக்கெட் இரசிகர்களின் எதிர்பார்ப்பையெல்லாம் மெய்ப்பிப்பரா என்று கூட நாம் முரசில் குறிப்பிட்டிருந்தோம். அவர் ஏமாற்றவில்லைஇ ஆரம்ப போட்டிகளில் அவ்வளவாக பிரகாசிக்காமல் விட்டாலும் இலங்கை - இந்திய அணிக்கு இடையிலான போட்டிகளில் தனது திறமையை நன்கு வெளிககாட்டி நானும் ஒரு கில்கிறிஸ்ட் தான் என்பதை உலகறிய வைத்துவிட்டார்.**

**பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவர் பெற்றுக் கொடுத்த 148 ஓட்டங்களும் இலங்கை அணிக்கு எதிராக அவர் பெற்றுத் தந்த 183 ஓட்டங்களும் இரசிகர்களால் அவ்வளவு இலகுவில் மறந்து விட முடியாத ஒன்றாகும்.**

**இலங்கை அணிக்கு எதிரான போட்டிகளில் இவர் துடுப்பு மட்டையை எடுத்துக் கொண்டு களத்தில் புகுந்த போது இலங்கை வீரர்கள் பதற்றமடைந்து போனது மறுக்க முடியாத உண்மையாகும்.**

**சச்சின் டெண்டுல்கர், ட்ராவிட், கங்குலி போன்று பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தும் வீரர்களின் பட்டியலில் புதிதாக இப்போது தோனியும் சேர்ந்து கொண்டுள்ளார்.**

**வரும் போட்டிகளில் இவரின் திறமைகள் இன்னும் இன்னும் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதே இந்திய அணி இரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.**

## இலங்கை அணி பின்தள்ளப்பட்டது

இலங்கை மிக மோசமான தொடர் தோல்விகளை சந்தித்துக் கொண்டு வந்ததால் சர்வதேச கிரிக்கெட் சபை தனது ஒரு நாள் போட்டிக்கான அணிகளின் தர வரிசை மீள திருத்தி அமைத்து வெளியிட்டுள்ளது.

இதில் 2ஆம் இடத்திலிருந்து இலங்கை அணி தற்போது 4ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இந்த தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் பத்து இடங்களில் எந்தெந்த அணிகள் இருக்கின்றன என்பது பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | அவுஸ்திரேலியா | 136 |
| 2 | தெ.ஆபிரிக்கா | 119 |
| 3 | பாகிஸ்தான் | 116 |
| 4 | இலங்கை | 113 |
| 5 | நியூசிலாந்து | 110 |
| 6 | இங்கிலாந்து | 109 |
| 7 | இந்தியா | 104 |
| 8 | மே.இந்திய தீவுகள் | 90 |
| 9 | சிம்பாப்வே | 44 |
| 10 | பங்களாதேஷ் | 14 |

## களத்தடுப்புக்கு புதிய பயிற்றுவிப்பாளர்

உலகில் மிகவும் சிறந்த களத்தடுப்பாளர் என்ற பெருமையை பெற்றுக் கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் களத் தடுப்பாளர் ஜொன்டி ரோட்ஸ், தென்னாபிரிக்கா கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டாலும் இவரின் பெயரின் பெருமை இன்னும் குறையவில்லை.

அண்மைக்காலமாக தென்னாபிரிக்க அணியின் களத்தடுப்பு திறன் குறைந்து வருவதை அவதானித்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, ஜொன்டி ரோட்ஸ்யினை தென்னாபிரிக்க அணிக்குக் களத்தடுப்பு பற்றிய நுட்பங்களைப் பயிற்றுவிப்பதற்காக நியமித்துள்ளது.

உலகில் 'பறக்கும் வீரர்' என்ற பெருமையைப் பெற்றுக் கொண்ட ஜொன்டி ரோட்ஸின் மூலம் தென்னாபிரிக்கா மட்டுமல்ல அனைந்து நாட்டு கிரிக்கெட் வீரர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 2, கூட்டெண் - 7

2, 11, 20, 29 போன்ற திகதிகளில் பிறந்து தேதி, மாதம் வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் சந்திரன், கேது ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்களில் சிலர் பார்ப்பதற்கு உயரமானவராகவும், தன் உடம்பிற்குத் தகுந்தாற் போல சதைப்பற்றும் கொண்டு காட்சியளிப்பர். நல்ல நிர்வாகத் திறமையும், அன்புள்ளமும் கொண்ட வாழ்க்கைத் துணைவர் இவர்களுக்கு அமைந்து விடுவதால் குடும்ப வாழ்க்கை சிறப்படையும். கல்வி, பொருளாதார வசதி எல்லாம் நன்றாக அமைந்துவிடும். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் கஷ்டத்திற்குள்ளாவர்.

இந்த எண்ணிக்கையில் கஷ்டப்படுவர்கள் தனது பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் மிக மேன்மை அடைவர். நேர்மையும், பிறர் கஷ்டத்தைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியாத மனநிலையும் கொண்ட இவர்கள் எப்பொழுதும் தனிமையில் சிந்தனை செய்து கொண்டிருப்பர். தனது வாழ்க்கையைக் குறிக்கோளுடன் ஆரம்பித்து வெற்றியடையும் பாக்கியம் உள்ளவர்கள். மனக்கட்டுப்பாட்டால் வரக்கூடிய சித்திகள் எளிதில் வரும். தெய்வபக்தி இவர்களிடம் அதிகம் காணப்படும் நல்ல ஆரோக்கியமுடன் வாழ்க்கை நடத்தும் இவர்கள் எப்பொழுதும் தூய்மையாகக் காட்சியளிப்பர்.

இந்த எண்களில் பிறந்த அன்பர்களுக்கு நான் பொருத்தமான பெயரை அமைத்துக் கொடுத்தவுடன் உத்தியோக உயர்வு, பொருளாதார வசதியும் பெருகி வாழ்வதையும் நானறிவேன். இவர்கள் சில நேரங்களில் நன்கு பேசுவர். ஆனால் சிறு பிரச்சினைகள் வந்தால் மனதைக் குழப்பிக் கொண்டிருப்பர். மிதமிஞ்சின கற்பனா சக்தி படைத்த இவர்கள் தனிமையில் இருந்து பல திட்டங்களைப் போட்டுக் கொண்டிருப்பர். மற்றவர்களோடு ஒட்டிப் போகும் தன்மை குறைவாக இருப்பதால் எப்பொழுதும் அளவோடு பேசி நிறுத்திக் கொள்ளுவர். தனக்கு மூடு வந்தால் காரசாரமாகப் பேசுவர். சங்கீதம், தெய்வீகம் மற்றும் கலைகள் சம்மந்தமான விஷயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே இருப்பர்.

ஏதாவது ஒர பிரச்சினை வந்துவிட்டால் முகத்தைச் சுளித்துக்கொண்டு கடிந்து பேசுவர். எதையும் துணிந்து எதிர்த்துப் பேசும் இவர்கள் எழுதுதல் மூலம் தன் கருத்துக்களைச் சரமாரியாகப் பொழிவர். சிலர் இரசாயன ஆராய்ச்சி செய்வதாலும், சாயங்கள் காய்ச்சுவதாலும் பொருள் சேர்ப்பர். பொதுவாக இந்த எண்ணில் பிறந்தவர்கள். நல்ல புகழும், பெரும் செல்வமும் சேர்க்கும் பாக்கியமுடையவர்களே. ஆனால் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன்.

### தொழில்

இரசாயன சம்பந்தமான தொழிலாலும், எழுத்தாலும் பச்சைப் பொருள்கள் சம்பந்தமான தொழிலாலும் சாயங்கள், நூல் போன்றவற்றாலும் மற்றும் சாப்பாட்டுப் பொருளாலும் கலை சம்பந்தமான தொழிலாலும் லாபத்தைப் பெறுகின்றனர்.

### நோய்

இவர்களுக்கு இரத்தக்கொதிப்பு, வாயுக் கோளாறு, மூட்டுவலி போன்ற வியாதிகள் வர வாய்ப்பு உண்டு. மன பீதியும் ஏற்படலாம். ஆனால் பொருத்தமானதாகப் பெயர் அமைந்துவிட்டால் எந்த வியாதியும் அதிகமாக வராது.

### பெயர் அமைக்கும் முறை :

இவர்கள் தங்களுடைய பெயரை 15, 24, 33, 42, 51, 69 போன்ற எண்களிலும் 34, 43 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்


### பின்பற்ற வேண்டியவை

*யோகமான எண் - 6, 7*
*யோகமான தேதிகள் - 6, 15, 24, 7, 16, 25*
*யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, சந்திரக்காந்தக்கல், ஜேட்.*
*யோகமான நிறம் - வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், பச்சை.*
*ஆகாத தேதிகள் - 9, 18, 27.*
*ஆகாத நிறம் - சிவப்பு.*

*அடுத்த வாரம் பிறப்பெண் 2, கூட்டெண் 8 பற்றிப் பார்ப்போம்*


# கலிலியோ கலிலீ (1564 - 1642)

## உலகை வியக்க வைத்தவர்கள்



**ஆனால்** கலிலியோ நிகழ்வுகளை அளவு சார்ந்த ஆராய்ச்சிகளைச் செய்தார். இந்த அளவு சார்ந்த ஆராய்ச்சிகள்தாம் அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படை அம்சமாக ஆயிற்று.


அறிவியல் ஆராய்ச்சியில் செயல்முறை அணுகுமுறையைக் கையாள்வதில் வேறொருவரையும்விடக் கலிலியோ மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டார். பரிசோதனைகள் செய்து பார்க்க வேண்டிய அவசியத்தை முதலில் வலியுறுத்திக் கூறியவர் கலிலியோதான். அதிகாரிகளின் ஆணையை அது திருச்சபையினுடையதாயினும்



கலிலியோவின் நெம்பு இயக்க விதியைக் காட்டும் படம்

அரிஸ்டாட்டில் கருத்துகளாயினும் கண்மூடித்தனமாக நம்புவதன் மூலம் அறிவியல் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்ற கொள்கையை இவர் ஏற்க மறுத்தார். பரிசோதனையின் வலுவான அடித்தளத்தில் அமையாத அனுமானங்களையும் அவர் ஏற்கவில்லை. மத்தியகால அறிஞர்கள் என்ன நிகழ வேண்டும், ஏன் நிகழ்வுகள் நிகழ்கின்றன என்பதைத்தான் ஆராய்ந்தார்கள். ஆனால், உள்ளபடிக்கு என்ன நிகழ்கிறது என்பதை தீர்மானிக்கப் பரிசோதனைகள் நடத்த வேண்டும் என்பதை கலிலியோ வலியுறுத்தினார். அவருடைய அறிவியல் நோக்கு, ஆன்ம ஞானம் சாராததாக இருந்தது. விஞ்ஞானிகளை விடவும் இவர் நவீன நோக்குடையவராக இருந்தார்.

தலைசிறந்த அறிவியல்வாதியாக விளங்கிய கலிலியோ ஆழ்ந்த சமயப் பற்றுடையவராகவும் திகழ்ந்தார். திருச்சபையினர் இவர் மீது வழக்குத் தொடர்ந்து, தண்டனை விதித்தபோதிலும், இவர் சமயத்தையோ, திருச்சபையையோ எதிர்க்கவில்லை. அறிவியல் ஆராய்ச்சிகளை ஒடுக்குவதற்குத் திருச்சபையினர் செய்த முயற்சிகளை மட்டுமே கண்டித்தார். ஒரு தலையான பிடிவாதக் கொள்கைக்கும், சிந்தனைச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான முயற்சிகளுக்கும் எதிரான புரட்சியின் சின்னமாகப் பின்வந்த


கலிலியோவின் தொலைநோக்கி

தலைமுறையினர் இவரைப் போற்றுவதற்கு இவர் முற்றிலும் தகுதியுடையவராக விளங்கினர். நவீன அறிவியல் முறையை


கீழே விழும் பொருட்களின் விதியை செய்து காட்டிய பிசா சாய்ந்த கோபுரம்.

நிறுவுவதில் இவர் ஆற்றிய அரும்பணி மகத்தான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**அடுத்த வாரம் மோசஸ் வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

*வணக்கமுங்கோ!*

**போன**வாரம் போனிலேயே சம்பந்தமானவருக்குப் போதும் போதுமெண்டாக்கிப் போட்டன் எண்டதாலையோ என்னவோ, மற்ற எம்.பி.மார் போனை தூக்கினமில்லையுங்கோ. சரி கூட்டமைப்பு எம்.பி.மார் தான் உப்பிடி காதுக்குப் பஞ்சடைச்சுப்போட்டு போன் சத்தம் கேக்காம இருக்கிறாங்களே எண்டிட்டு எங்கட கப்பலோட்டிய தமிழன் சொரிங்கோ..... கப்பல் கப்பலா சாமான் ஏத்தி யாழ்ப்பாணத்தில வியாபாரம் நடத்திப் பேரெடுத்த மகேஸ்வரன் எம்.பி.யின்ர நம்பருக்கு ரை பண்ணினேனுங்கோ. மனிசன் எடுத்திட்டார்.

**கா.பூ** : *ஹலோ யார் பேசிறது?*

**மகேஸ்** :- "அதை போன் போட்டு கேப்பியளா" எண்டு பார்த்தீபன் கேக்குமாப் போல கேக்கிறாருங்கோ.

**கா.பூ** :- *அதுக்கில்லையுங்கோ.... நான் கா.பூ. உங்கை இருந்து யார் கதைக்கிறது எண்டுதான்.....*

**மகேஸ்** :- அதிலென்ன சந்தேகம். என்னுடைய நம்பருக்கு எடுத்தால் வேறை யார் கதைப்பினம். சரி, சொல்லுங்கோ. மகேஸ்வரனார் உப்பிடி கதைக்கிறதைப் பார்த்தால் அவர் என்னவோ ரென்சனா இருக்கிறார் போலைத்தான் இருக்கு. எண்டாலும் நான் விடயில்லையுங்கோ.

**கா.பூ** :- *அது வந்து உந்த எலக்ஷனில நீங்கள் தமிழர்களை யூ.என்.பி.க்கு வாக்களிக்கும்படி கேட்டிருக்கிறியள். ஆனால் உங்கட தேசியத் தலைவர் தேர்தலில தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேணுமெண்டு சொல்லி இருக்கிறாரே!*

**மகேஸ்** :- அது...அது..வந்து...வந்து...நான் நினைச்சனான் அவர் எங்களுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவாரெண்டு. ஆனால் அவையள் நன்றி மறந்து போயிட்டினம். அது மட்டுமில்லாம உயிர் பயத்தில தானுங்கோ. அவரை தேசியத் தலைவர் எண்டு சொன்னனான். மற்றபடிக்கு எனக்கு எம்.பி. பதவி தந்தது எங்க கட்சித் தலைவர் ரணில் தானுங்கோ. ஆகையால தானுங்கோ. அரசியல் எண்டு வரேக்க யூ.என்.பி.க்குத்தானுங்கோ எண்ட விசுவாசமான உழைப்பு இருக்கும். மத்தப்படி சனத்துக்கு உசுப்பேத்திறதுக் காகவெல்லோ நான் தேசியமெண்டும் தலைவரெண்டும் போட்டு முழங்கிற நான்.

**கா.பூ** :- *அப்புடியெண்டால் அவையின்ர கருத்துக்கும் உங்கட கருத்துக்கும் முரண்பாடு இருக்கே.*

**மகேஸ்** :- இருக்கத்தானே செய்யும். அதுதானே உண்மை. இல்ல நான் தெரியாமத்தான் கேக்கிறன், எந்தக் காலத்தில அவைக்கும் எனக்குமிடையில ஒற்றுமையிருந்தது?

**கா.பூ** :- *அதிருக்கட்டும். உங்கட கட்சித் தலைவரை ஏன் நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு கூட்டிப்போயிருக்கலாமே....அங்கை ஒரு கூட்டத்தை நடத்தியிருக்கலாமே.....*

**மகேஸ்** :- நீங்கள் கேக்கிற ரெண்டையும் செய்திருக்கலாம்தான். முடியாதே! என்னையே ஒரே நாளிலை ஊரை விட்டு விரட்டினவங்கள். அவையளை நம்பி எப்பிடிங்கோ கூட்டிட்டுப் போறது. சுட்டுப் போட்டாங்கள் எண்டால். ஒரு விசயம் சொல்லுறன் யாருக்கும் சொல்லிப் போடாதேயுங்கோ. ரணில் செய்த ஒப்பந்தத்தின்ர லெட்சணம் இதுதான். அவரே யாழ்ப்பாணத்துக்குப் போக முடியாது. இஞ்ச இது இரகசியம் தெரியுமே. எனக்கு நேரம் இருக்காது. பிறகு கதைப்பம். பாய் எண்டு போனை வச்சிட்டாருங்கோ.

அடுத்தபடியா எங்கட ஜனநாயகக் கட்சியின்ர தலைவருக்கு எடுத்தனுங்கோ....

**கா.பூ** :- *"ஹலோ வணக்கம்" எண்டதுமே அவர் குரலைப் பிடிச்சுக் கொண்டாருங்கோ.*

**தேவா** :- ஓம்...வணக்கம். எங்க ஆளைக் கன நாளா தொடர்பில காணயில்லை? இப்படி அவர் சுகம் விசாரிக்கிறதே தனிப் பாணியுங்கோ.

**கா.பூ** :- *தெரியாதே கொஞ்சம் வேலையாப் போட்டுது. இண்டைக்கு ஏன் எடுத்தன் எண்டால் உந்த எலக்ஷனில தமிழ் மக்கள் மஹிந்தவின்ர வெத்திலைச் சின்னத்துக்கு வாக்களிக்க வேணுமெண்டு தெளிவாச் சொல்லியிருக்கீங்களே. அதைப் பத்தி ஏதாவது தெரிஞ்சு கொள்ளலாமெண்டுதான்.*

**தேவா** :- நல்ல சந்தர்ப்பத்தில உதைப்பத்திக் கேட்டது சந்தோசம். உங்களுக்கு நேரமிருக்குமெண்டால் நேர வாங்கோவன் ஆறுதலாப் பேசலாம்.

**கா.பூ** :- *இல்லையுங்கோ. நான் ஆறுதலா வாரன். இப்ப இதுக்கு மட்டும் சொன்னீங்கள் எண்டால்.....*

**தேவா** :- இப்ப மஹிந்த, ரணில் எண்டு ரெண்டு பேர்தான் பிரதான வேட்பாளராக இருக்கினம். நான் இப்ப அரசாங்கத்தில இருக்கிறதாலையும், தமிழ் மக்களின்ர கௌரவமான அரசியல் தீர்வுக்காக நாங்கள் முன்வைச்சிருக்கிற மூன்று சட்டத் திட்டத்தையும் பிரதமர் ஏற்றுக்கொண்டிருக்கிறதாலையும் அவரை ஆதரிக்க எண்ணியுள்ளோம். இதையேதான் தமிழ் மக்களிடமும் கோரி நிற்கின்றோம்.

மூண்டு கட்டமெண்டு சொல்லேக்க, வடக்கு - கிழக்கு மாகாண சபையை இயக்கிறதும் அதனூடாக வடக்கு - கிழக்கினுடைய அபிவிருத்தி மற்றும் ஏனைய மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுறதும் மூண்டாம் கட்டமாக சமஷ்டி அடிப்படையில அதிகாரப் பகிர்வை வலுவடையச் செய்வதுமாக உள்ளது. அதைவிடவும் இந்தத் திட்டத்துக்கு பெரும்பான்மை சிங்கள மக்களிடமிருந்தும் சரி, ஏனைய கட்சிகளிடம் இருந்தும் சரி, எதிர்ப்பு இல்லை. மாறாக சர்வதேச நாடுகளும் சிங்கள மக்களும் ஆதரிக்கக்கூடிய நிலைமையே உள்ளது. இதற்காகத்தான் தமிழ் மக்கள் மஹிந்தவை ஆதரிக்க வேணுமெண்டு கேட்கிறேன்.

உங்களுக்கு நேரமிருக்குமெண்டால் இதைப்பற்றி இன்னும் விளக்கமாக என்னால் சொல்ல முடியும்.

**கா.பூ** :- *மன்னிக்கனுமுங்கோ...தெளிவான திட்டத்தோடதான் தமிழ் மக்களிடமும் குழப்பமில்லாம தெளிவான ஆதரவைக் கோரி நிற்கிறீங்க எண்டு புரிஞ்சு கொண்டனுங்கோ. பிறகு நேரம் கிடைக்கிற போது கட்டாயம் நேர வந்து கதைக்கிறனுங்கோ எண்டு சொல்லவும்.....*

**தேவா** :- நன்றி, வணக்கம். எண்டு அவரின்ர பாணியிலேயே போனக் கட் பண்ணிட்டாருங்கோ. அதைத் தொடர்ந்து எங்கட ஈழவேந்தன் அய்யாவின்ர போன் நம்பருக்கு ரை பண்ணிப் பார்த்தன். கிடைக்குதில்லையுங்கோ. அப்புடிக் கிடைச்சிருந்தால் நல்ல பாம்புக் கதையும் புடையன் பாம்புக் கதையும் கேட்டிருக்கலாம். மிஸ் பண்ணிப் போயிட்டுதுங்கோ. அந்தக் கவலையோடையே நானும் விடை பெறுகிறேனுங்கோ. ஓகே...பாய்....பாய்....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(10.11.2005 தொடங்கி 16.11.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன், வியாழன். விருச்சிகம் - புதன். தனு - வெள்ளி. மீனம் - இராகு.
மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது.
சந்திரன் கும்பம், மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் அலைச்சல், மனக்குறையதிகம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் தொல்லை, செலவு மிகுதி, குடும்பச் சுமை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, புதிய பதவி மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், இனசன நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நிலை நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், உயர்ந்த எண்ணம், குடும்ப நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் அலைச்சல், காரியக் கெடுதி, பணச் செலவு, வீண் சஞ்சலம், முயற்சித் தடை, குடும்பப் பொறுப்பு, உத்தியோகப் பேறு, மனமகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் பலிதம், செலவு மிகுதி, கடன் தொல்லை, மனக்குறையதிகம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் உதவி, குடும்ப நன்மை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, பலவிதப் பேறு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, பணக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் மேன்மை, பெரியோர் சகாயம், காரியானுகூலம், வெளியார் தொல்லை, மனக் கவலை, குடும்பக் கலகம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் எதிர்ப்பு, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் சிறப்பு, அந்நியர் உதவி, பண வரவு, மனமகிழ்ச்சி, பெரியோர் நட்பு, கௌரவம், குடும்ப நன்மை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கூடிய உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் பயம், பண வரவு தடை, வெளியிட வாழ்க்கை, வீண் கலக்கம், உறவினர் பகை, மனக்கலக்கம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பலவிதப் பேறு, கடன் தொல்லை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், முயற்சியின்மை, விவசாயிகள், வியாபாரிகள் கூடிய உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு, குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், உயர்ந்த எண்ணம், பலவிதத் தொல்லை, குடும்ப சகாயம், உறவினர் கலகம், மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.8
வட மாகாணம் 98.2
கொழும்பு 105.6

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல — 1665
கொழும்பு.
தொலை பேசி :— 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## மனிதச் சங்கிலி

போராட்டங்களிலும் ஊர்வலங்களிலும் தான் மனிதர்கள் சங்கிலித் தொடர் போல அணிவகுத்துச் செல்வது நம் நாட்டில் பழக்கமானது. ஆனால் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மனிதச் சங்கிலி போல சாதனைக்காகவே மக்கள் குழுமுகிறார்கள். அந்த வகையில் இங்குள்ளதும் ஒரு சாதனை மனிதச் சங்கிலிதான். உலகிலேயே மிக நீளமான சங்கிலியாக இது கின்னஸ் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் சொலாஸோ கடற்கரையில் சேர்ந்திருந்த காதல் ஜோடிகள் வித்தியாசமாக 4.2 மீற்றர் நீளத்திற்கு மனிதச் சங்கிலியை உருவாக்கி இச்சாதனையை 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் புரிந்தன. நம்மவர்களும் சாதனைக்காக எப்போதுதான் மனிதச் சங்கிலியை உருவாக்கப் போகிறார்களோ....



## வேகமோ! வேகம்

மிக வேகமாக வாகனங்களில் நாம் செல்லும்போது கண்களை மூடிக்கொள்வது எமது வழமை. இங்குள்ளவரோ தமது கண்களை மூடிக் கொண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றை மிக வேகமாகச் செலுத்தி சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லி பெக்ஸ்டர் எனும் இச் சாதனையாளர் 1200 சீ.சீ. கவாசகி ஓட்டப்பந்தய மோட்டார் சைக்கிளில் மணிக்கு 265.33 கிலோ மீற்றர் வேகத்தில் அதுவும் கண்களை மூடிக்கட்டிக் கொண்டு செலுத்தி, உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரையும் இடம் பெற வைத்துள்ளார். கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும் என்று இவர் நினைத்து விட்டார் போல.

## பெரிய....

உலகில் பெரியன பற்றி முரசில் நாம் பல தடவைகளில் குறிப்பிட்டு வந்துள்ளோம். இங்கு குறிப்பிட இருப்பதும் இதுவரை காலம் குறிப்பிடாத பெரிய தேவாலயம் ஒன்று. பெசில்கா நகரத்தில் அமைந்துள்ள லேடியோ பீஸ் தேவாலயமே இதுவரைகாலமும் உலகில் பெரிய தேவாலயம் எனக் கருதப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 164 மில்லியன் டொலர் செலவில் இத் தேவாலயம் 1989ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டதாம். இதன் சுற்றளவு 30,000 சதுர மீற்றர். ஒரே தடவையில் 7000 மக்கள் உட்கார்ந்து ஆராதனைகளைக் காணலாமாம். பெரியன உலகில் அதிகரித்து விட்டது போல்.








## உயிர் தப்பிய சாதனை

படத்தில் உள்ளவர் விபத்தொன்றில் மிகவும் பாதிக்கப்பட்டவர் போல தோற்றமளிக்கிறாரா? உண்மைதான். இவர் மலை ஏறும் போது கால் சறுக்கியதால் 145 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்து கீழே விழுந்து உயிர் தப்பியவர். தொடர்ந்து 14 மணித்தியாலங்கள் யாரும் உதவிக்கு வராமல் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இவர் அமெரிக்க வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு, தனது ஒரு காலையும் ஒரு கையையும் இழந்துள்ளார். இவற்றுக்கிடையில் கூட இவர் ஒரு சாதனையாளராகவே கருதப்படுகிறார். மிக அதிகளவு நேரம் உயிருக்குப் போராடியவர்கள் இலங்கையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இது கின்னஸுக்குத் தெரியவில்லையோ?

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

கொழும்பைச் சேர்ந்த லீரோசன் - சத்தியவாணி தம்பதியரின் செல்வப் புதல்வி திரிசாலா தனது முதலாவது பிறந்த நாளை 11.11.2005 அன்று தனது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா, அம்மம்மா, சிவாமாமா, சுரன்ஜன் மாமா, சுசந்தன் மாமா - குமுதினி மாமி, ராஜா மாமா - தர்ஷினி மாமி, மது அக்கா, அஷான் அண்ணா, பாட்டிமார் - தாத்தாமார், மாமாமார், சித்திமார், அண்ணாமார் - அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருளுடன் சகல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

11.11.2005



செல்வி லி.திரிசாலா